
www.padippakam.com

எழுச்சி
# தலித் முரசு

சமூக நீதித் திங்களிதழ்
பிப்ரவரி 2003 ■ ரூ. 10



7 ஆம் ஆண்டு சிறப்பிதழ்

படிப்பகம்

www.padippakam.com



# பாட்டாளிகளின் சர்வாதிகாரம் தவிர்க்க முடியாததா? - III

புத்தர், காரல் மார்க்ஸ் தத்துவங்களை ஒப்பிடுவதற்கு முன்பு, காரல் மார்க்சின் தத்துவங்கள், எப்படி இவ்வளவு காலம் தாக்குப்பிடித்தன என்பதை நாம் கணக்கிட வேண்டும். வரலாறு, மார்க்சின் கருத்துகளை எவ்வளவு தூரம் மறுதலித்துள்ளது என்பதையும், மார்க்சின் எதிர்ப்பாளர்கள், மார்க்சின் தத்துவத்தை எந்தளவுக்குச் சிதைத்துள்ளனர் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மார்க்சிய தத்துவங்கள் 19ஆம் நூற்றாண்டின் இடையில் உருவாக்கப் பட்டவையாகும். தொடக்கம் முதல் இன்றுவரை இத்தத்துவங்கள் மிகுந்த விமர்சனத்திற்கு உட்படுத்தப்பட்டன. இவ் விமர்சனங்களால், காரல் மார்க்சின் தத்துவத்தளங்கள் பல துண்டுகளாக உடைக்கப்பட்டன. மார்க்சின் தத்துவமான, 'மார்க்சின் சமூக அமைப்பு' தவிர்க்க முடியாதது என்பது முழுமையாக நிராகரிக்கப்பட்டது.

மார்க்ஸ் தன்னுடைய 'மூலதனம்' - Das Capital என்ற நூலை வெளியிட்டு 70 ஆண்டுகளுக்குப் பிறகுதான் 1917இல் பாட்டாளிகளின் சர்வாதிகாரம் உருவாக்கப்பட்டது. கம்யூனிசம் என்ற பாட்டாளிகளின் சர்வாதிகாரம் ரஷ்யாவில் நடைமுறைப்படுத்தப்பட்டபோது, மார்க்ஸ் கணித்தபடி, 'தவிர்க்க இயலாத' ஒன்றாக மனித முயற்சிகளின்றி அது உருவாக்கப்படவில்லை. அங்கு, அதாவது ரஷ்யாவில் புரட்சி உருவாக்கப்பட்டது; தேர்ந்த திட்டமிடுதலோடு அப்புரட்சி வடிவ



மைக்கப்பட்டது. அப்புரட்சி பல வன்முறைகளையும், ரத்த சேதத்தையும் உள்ளடக்கியே ரஷ்யாவில் அடியெடுத்து வைத்தது.

உலகின் பிற நாடுகள், 'பாட்டாளிகளின் சர்வாதிகாரம்' தங்கள் நாடுகளுக்கும் வரும் என இன்றுவரை காத்துக் கிடக்கின்றனர். மார்க்சிய தத்துவங்களின் சமத்துவம் தவிர்க்க முடியாதது என்பது போன்ற பல தளங்கள் - நடைமுறையிலும், தர்க்க ரீதியிலும் தவறானது என நிரூபிக்கப்பட்டன. வரலாறு என்பது, பொருளாதார விளக்கமான பொருள் முதல்வாதத்தை ஆதாரமாகக் கொண்டது என்பதை யாரும் இன்று ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை.

(பாட்டாளிகளின்) சர்வாதிகாரம் மெல்ல மெல்லப் பரவி நிலைக்கும் என்பதை இன்று யாரும் நம்பத் தயாராக இல்லை. இதைப் போலவே, மார்க்சின் பிற தத்துவங்களும் ஆதாரமற்று நடைமுறையிலிருந்து வெகுவாக விலகிப் போய்க் கொண்டிருக்கின்றன.

மார்க்சின் கொள்கைத் தீயின் எஞ்சிய பகுதிதான் இன்றுள்ளது. இது, எஞ்சிய பகுதியாக இருப்பினும், மிகுந்த முக்கியம் வாய்ந்ததாக உள்ளது. இன்று மீதமுள்ளவற்றை நான்காக நான் காண்கிறேன்.

1. தத்துவங்கள் கடமைகள் என்பது, இந்த உலகை மறு கட்டுமானம் செய்வதாக இருத்தல் வேண்டும். மாறாக, உலகின் தொடக்கம் பற்றி விவாதித்துக் கொண்டு நேரத்தை விரயம் செய்தல் கூடாது. 2. வர்க்கங்களுக்கிடையே தேவையின் அடிப்படையிலேயே வேறுபாடு உள்ளது. 3. தனிநபர் சொத்துடைமை - ஒரு வர்க்கத்தினருக்கு மட்டும் அதிகாரத்தையும், பிற வர்க்கத்தினருக்கு சோகத்தையும், சுரண்டலையும் பரிசாக அளிக்கிறது. 4. எனவே, இத்துயர் நீக்கப்பட வேண்டும். இது, தனிநபர் சொத்துடைமையை அழிப்பதால் மட்டுமே சாத்தியம். எனவே, இதுவே நற் சமூகத்திற்கான வழியாகும்.

இனி புத்தருக்கும் காரல் மார்க்சுக்கும் இடையிலான ஒப்பீட்டைக் காணலாம்: மேற்சொன்ன நான்கு தத்துவங்களில், முதலானதில் புத்தருக்கும் காரல் மார்க்சுக்கும் முழு உடன்பாடு உள்ளது. இதை விளக்குவதற்கு புத்தருக்கும், போத்த பாதர் என்ற பார்ப்பனருக்கும் இடையே நிகழ்ந்த ஓர் உரையாடலை மேற்கோள் தருகிறேன். போத்த பாதர், புத்தரிடம் பின்வரும் கேள்விகளைக் கேட்கிறார்.

1. இந்த உலகம் அழிவற்றதா? 2. இந்த உலகம் முழுமையானதா? 3. இந்த உலகம் முடிவற்றதா? 4. 'ஆத்மா' உடலைப் போன்றதா? 5. இந்த உடலும், ஆத்மாவும் வெவ்வேறானதா? 6. உண்மையை உணர்ந்தவன் மரணத்திற்குப் பின்பும் வாழ்கிறானா? 7. மரணத்திற்குப் பிறகு மீண்டும் வாழ்கிறானா? அல்லது மீண்டும் வாழ்வதில்லையா? இந்த வினாக்களுக்குப் புத்தர் பின்வருமாறு பதிலளிக்கிறார்.

**“மார்க்ஸ் கணித்தபடி, 'தவிர்க்க இயலாத' ஒன்றாக மனித முயற்சிகளின்றி அது உருவாக்கப்படவில்லை. அங்கு, அதாவது ரஷ்யாவில் புரட்சி உருவாக்கப்பட்டது; தேர்ந்த திட்டமிடுதலோடு அப்புரட்சி வடிவமைக்கப்பட்டது. அப்புரட்சி பல வன்முறைகளையும், ரத்த சேதத்தையும் உள்ளடக்கியே ரஷ்யாவில் அடியெடுத்து வைத்தது.”**

B R Ambedkar

*'பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு' : 3 பக்கம் : 444*

படிப்பகம்

www.padippakam.com



மீனா மயில்



பூமி நெருப்பாகக் கொதிக்கிறது
அதிர ஒலிக்கும்
அவலங்களின் குரல்
நிலம் முழுவதும்
விஷக் கன்றுகளாய் முட்டியெழ
கால்கள் நடுங்குகின்றன.
கடல், ஆறு, அருவி
எங்குதான் ஈரம் இருக்கும்?
படகேறி கடல் கடக்க முடியா
வாழ்க்கை
மரமேறி மலைதாவி
விண்ணைத் தொட துடிக்கிறது
ஜன்னலுக்கு அப்பால்
தூரப்போன
குட்டி வானத்தில் ஏற
ஒரு மரக் கிளையாவது
கைகளில் சிக்காதா?



படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்


**8 நிகழ்வு**

''தலித் விடுதலையின்றி இன்னொரு உலகம் சாத்தியமில்லை.''

**கே.எஸ். முத்து**

**12 தமிழ்ப் பெயர் சூட்டல்**

சாதி.ஒழிப்பிற்கான முன்னகர்வு

**சூரிய தீபன்**

**16 சமூகம்**

மரணவலையில் பட்டுத்தறி குழந்தைகள்

**ஆசுர் ராஜ்**

**20 தீர்வு**

தலித் பொருளா தாரம் கட்டி எழுப் பப்பட வேண்டும்

**நல்லான்**

**24 கண்டனம்**

கட்டுடைக்கிறார்கள் கடவுள்கள்

**வே. மதிமாறன்**

**28 நினைவலை**

அண்ணல் அம்பேத்கரின் இறுதி நாட்கள்

**நானக் சந்த் ரட்டு**

**34 பேட்டி**

''அரசியலை மத உணர்வுகளுக்கு ஆட்படுத்தினால் உள்நாட்டுப் போர் மூளும்''

**பேரா. மான்பிரெட் ஸ்டாசன்**

**38 மால்கம் எக்ஸ்**

மரணத்தை நோக்கி சில அடிகள்

**ரவிக்குமார்**

**42 இலக்கியம்**

நான் சந்தித்த சாதிக் கொடுமைகள்...

**டாக்டர் அம்பேத்கர்**

**46 சாதி இந்து / மீதி இந்து**

இந்து மதத்தை விட்டு வெளியேறுக!

**தந்தை பெரியார்**

**50 அதிரடிப்படை அத்துமீறல்**

தொடரும் துயரம்...

**கோ. சுகுமாரன்**

**52 ஓவியம்**

கலக மொழி பேசும் கலைகள்

**யாக்கன்**

**60 பதிவு**

முத்துவீரன் பாலசுந்தர்ராஜ்

**ஏபி. வள்ளிநாயகம்**




ஆதிவாசி ஓவியம்


■ அட்டை வடிவமைப்பு : யாக்கன் ■ முன் அட்டைப் புகைப்படம் : ஆர்.ஆர். சீனிவாசன்

■ இதழ் வடிவமைப்பு : ஜெமிமா ஆலிஸ், பிரேமா




படிப்பகம்

www.padippakam.com

# யாருக்கு ஆதரவாக?

''அன்பர்காள்! நமது 'தமிழன்' பத்திரிகையை ஆரம்பித்து ஆறுவருடம் முடிந்து ஏழாவது வருடம் நடைபெற்று வருகின்றது... இத்தகைய வஞ்சகக் கூத்தோர் மத்தியில் சுசாதி அபிமானிகளும் சுசாதி விருத்தியை நாடுவோரும் விவேகமிகுத்தவர்களுமாகியப் பரோபகாரிகள் முயன்று பத்திரிகையை நிலை பெறச் செய்தும், அதனைப்பல தேசங்களிற் பரவச் செய்தும் அங்கங்கு சாது சங்கங்களைக் கூடச் செய்தும் எமது உட்கருத்துக்கு இசைந்து குரு விசுவாசத் திலும் ராஜவிசுவாசத்திலும் நிலைபெற்று வருகின்றார்கள். அத்தகைய சத்திய சீலர் களாலும் உத்தம போதகர்களாலும் நடைபெற்று வருந்தமிழன் பத்திரிகை, இத்தமிழ் நாடெங்கும் பரவுமாயின் - அசத்தியர் அதன்மங்களும், அசப்பியர் போதங் களும், துன்மார்க்கர் கூட்டங்களும் நாளுக்கு நாள் நசிந்து நற்கீர்த்தியும், நற்சுகமும் பெற்று அவர்களும் குருவிசுவாசம் ராஜவிசுவாசம் இரண்டிலும் நிலைபெறு வார்கள்.''

- பண்டிதர் அயோத்திதாசர், 'தமிழன்' ஏட்டில்.

ஏறக்குறைய 90ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தலித் இதழுக்கு என்னென்ன இடர்ப்பாடுகள் இருந்ததோ, அவை அனைத்தும் அப்படியே 'தலித் முரசு'க்கும் பொருந்துகிறது. அறிவியல் தொழில் நுட்பங்கள் பெருமளவுக்கு முன்னேறிச் செல்ல செல்ல... தலித்துகள் மட்டும் பின்னோக்கித் தள்ளப்படுகின்றனர். இந்த கால கட்டத்திலும் - அயோத்திதாசர் காலத்துத் தீண்டாமைக் கொடுமைகளும், அதனினும் மோசமான வன்கொடுமைகளும் நம் கண் முன்பே நடந்தேறிக் கொண்டிருக்கின்றன.

பொது பெயரைத் தாங்கி வந்த 'தமிழன்' ஏடு, இந்த சாதிய சமூகத்தால் புறந்தள்ளப்பட்டது. ஆனால், ஒரு மதத்தின் பெயரையே தனது தலைப்பாகக் கொண்டு வெளிவரும் 'இந்து' நாளேடு - இன்றளவும் 'நடுநிலை' நாளேடாக பெரும்பான்மை மக்களிடையே செல்வாக்குப் பெற்று வருகிறது. சாதி ஒழிப்பை மய்யமாகக் கொண்டு வெளிவரும் 'தலித் முரசு', சாதி இதழாக அடையாளப் படுத்தப்படுகிறது.

அநீதிகளுக்கு எதிராக, சாதிக்கு எதிராக, மதவெறிக்கு எதிராக - மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்டு, சமூக நீதிக்கு வித்திடும் ஏடுகளை மக்கள் தன்னியல்பாக வாங்குவதில்லை. ஆனால், சாதி நிலைபெற வேண்டும், மத உணர்வுகள் பெருமளவுக்கு அரசியலாக்கப்பட வேண்டும் என்பதற்காக தூபம் போட்டு, மக்களிடையே பிரிவினையை உண்டாக்கும் பத்திரிகைகள் - லட்சக் கணக்கில் விற்கப்படுகின்றன. இந்த முரண்பாடு என்றைக்கு முடிவுக்கு வருகிறதோ, அன்றுதான் மாற்று சிந்தனைகளைத் தாங்கி வருகின்ற இதழ்கள், மக்களின் ஒருமித்த ஆதரவைப் பெறமுடியும்.

எனினும், இச்சமூகத்தில் நிலவும் ஆதிக்கக் கருத்தியல்களுக்கு எதிராக, சாதி ஒழிப்புக் கருத்தியலை முன்வைத்து, எந்த சமரசங்களுக்கும் ஆட்படாமல் வெற்றிப் பாதையை நோக்கி 'தலித் முரசு' சென்று கொண்டிருக்கிறது. இதைக் கண்டு பொறுக்காத சிலர், தலித் முரசை 'Non - தலித் முரசு' என்றும், 'பள்ளர் முரசு' - 'பறையர் முரசு' என்றும் ஏகடியம் பேசி வருகின்றனர்.

தலித் முரசை தொடர்ந்து படித்து வருகின்றவர்கள், இதுபோன்ற குற்றச் சாட்டுகளை அலட்சியம் செய்வார்கள் என்பது உறுதி. ஏனெனில், இதில் முள் முனையளவுக்குக்கூட ஆதாரமில்லை. ஒன்றை மட்டும் தெளிவாக்க விரும்புகிறோம். 'தலித் முரசு' ஒருபோதும் சாதிச் சங்கமாக செயல்படாது. சாதியை ஒழிக்க விரும்பும் செயல்பாட்டாளர்களுக்கு மட்டுமே - 'தலித் முரசு' களம் அமைத்துக் கொடுக்கும்.

வாசகர்கள் மற்றும் தோழர்கள் துணையுடன் 'தலித் முரசு' ஏழாம் ஆண்டில் நுழைகிறது.

எழுச்சி தலித் முரசு

Volume : 6 Issue : 8

பிப்ரவரி, 2003

ஆண்டு : 7 - இதழ் : 1

ஆசிரியர், வெளியிடுபவர்

பெ. சந்திரசேகரன்

பொறுப்பாசிரியர்

புனித பாண்டியன்

ஆண்டுக் கட்டணம் : ரூ.100/-
நூலகக் கட்டணம் : ரூ.200/-
வாழ் நாள் கட்டணம் : ரூ.1000/-

முகவரி

ஈ-21, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, அண்ணா முதன்மைச் சாலை கே.கே. நகர், சென்னை - 600 078

தொலைபேசி : 2371 66 88
தொலைநகல் : 2474 11 88

E-mail : ambedkar@md4.vsnl.net.in




படிப்பகம்

www.padippakam.com

# வா க் கு மூ ல ம்

சங்கர மடக் கல்வி நிறுவனங்களின் 2001 முதல் 2003 முடிய மூன்றாண்டு 'அட்மிஷன் பட்டியலை' வெளிப் படையாக அறிவிக்க சங்கராச்சாரி தயாரா? அதில் தெரிந்துவிடும் - எத்தனை பேர் தலித், மிக பிற்படுத்தப் பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் உள்ளனர் என்று. சங்கர மடம் இருக்கிற இடத்தில், ஊர்ப் பாதையை ஆக்கிரமித்துள்ளனர். சிறைச்சாலைக்கு என ஒதுக்கப் பட்ட அரசு நிலத்தையும் ஆக்கிரமித்துள்ளனர். சங்கர மடத்தின் ஆதிக்கப் போக்கை நாம் அனைவரும் சேர்ந்து எதிர்ப்போம். வளரும் இந்துத்துவத்தின் உருவாக சங்கராச்சாரி பல குரலில் பேசுகிறார். இவர்களைத் தனிமைப்படுத்தியாக வேண்டும்.

- ஆர். நல்லக்கண்ணு, மாநிலச் செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கில்.




அமெரிக்கா யாருக்கான
சவக்குழியை வெட்டுகிறது.

இட்லரின் காட்டாட்சி, ஆர்.எஸ்.எஸ். பிரமுகர்களை மிகவும் கவர்ந்தது. குறிப்பாக, ஜெர்மானிய மக்களை யூதர்கள் என்ற சிறுபான்மையின மக்களுக்கு எதிராகத் திருப்பி, வன்மத்தை விதைத்து வெற்றி கண்டவர் இட்லர். ஆர்.எஸ்.எஸ். தலைவர் எம்.எஸ். கோல்வால்கர் எழுதியுள்ள ஒரு புத்தகத்தில், 'இந்து ராஷ்ட்டிரா வருவதற்கு நாம் 'ரோல் மாடலாக' இட்லரைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்' என்று தெளிவாகவே சொல்லியிருக்கிறார். இந்துக்கள் அல்லாதவர்கள் மீது வெறுப்பை ஏவிவிட்டு, பெரும்பான்மை சமூகத்தை - அவர்களுக்கு எதிராகத் திருப்பி நாட்டை விட்டு விரட்டுவதுதான், அவர்களது வேலைத் திட்டம்.

- சுவாமி அக்னிவேஷ், தலைவர், 'பந்துவா முக்தி மோர்ச்சா', 'கல்கி' இதழுக்கு அளித்த பேட்டியில்.

குஜராத்தில் பாசிசம் இன்று வரை உயிர்த் துடிப்புடன் வாழ்ந்து வருகிறது. கோத்ரா படுகொலையை செய்தவர்கள் யார் என்று இன்னும் யாருக்கும் தெரியவில்லை. ஆனால், முஸ்லிம்களுக்கு எதிராக குஜராத்தில் நடைபெற்ற வன்முறைகளுக்கு அரசின் ஆதரவு இருந்ததாக, சுதந்திரமாக இயங்கும் அனைத்து உண்மை அறியும் குழுக்களும் தெரிவித்துள்ளன. எனவே, அரசே இந்த கிரிமினல் குற்றத்திற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

- அருந்ததிராய், 'புக்கர் பரிசு' பெற்ற எழுத்தாளர், பத்திரிகை ஒன்றில்.

பட்டு நெசவுத் தொழிற்சாலையில் கொத்தடிமைகளாக அல்லலுறும் ஆயிரக்கணக்கான குழந்தைத் தொழிலாளர்களை விடுவித்து மறுவாழ்வு அளிக்க வேண்டும். அய்ந்து வயதுள்ள குழந்தைத் தொழிலாளி, ஒரு நாளைக்கு 12 மணி நேரமோ அதற்கும் மேலோ வேலை செய்ய கட்டாயப்படுத்தப் படுகிறான். வாரத்தில் ஏழு நாட்களில் ஆறு அல்லது ஆறரை நாட்கள் வேலை செய்ய கட்டாயப்படுத்தப்படுகிறான். பட்டு நெசவுப் பணியில் ஈடுபடும் குழந்தைகள், தங்களின் கைகளை கொதிக்கும் நீரில் விடுவதன் மூலம் கையில் தீப்புண்கள் ஏற்படுகின்றன. சாதிக்கும் கொத்தடிமைத்தனத்திற்கும் உள்ள தொடர்பைக் கண்டறிந்து அரசு வெளியிட வேண்டும். வெறும் வறுமை மட்டுமல்ல, சாதி ரீதியான வன்முறையும் வெறுத்தொதுக்குதலுமே - பெரும்பாலான தலித் குடும்பங்களை கொத்தடிமைகளாக ஆக்கியிருக்கிறது.

- 'மனித உரிமைகள் கண்காணிப்பகம்' என்ற உலக அமைப்பு, லண்டனிலிருந்து வெளியிட்டுள்ள 85 பக்க அறிக்கையில்.



படிப்பகம்

www.padippakam.com

# இவர்களின்றி

## 'தலித் முரசு' இல்லை

■ ஆர். ஜோன்ஸ் ■ ஜெமிமா ஆலிஸ் ■ சி. ராமன் ■ பிரேமா ■ மு. ரமேஷ் குமார் ■ வி. ஜெயக்குமார் ■ எஸ். கண்ணன் ■ ராதா ■ யாக்கன் ■ த. கணேஷ் மூர்த்தி ■ ஆனந்த் ■ ப. செந்தில் குமார் ■ வி. சந்திரசேகர் ■ சரவணன் ■ டி.ராஜாங்கம் ■ வே. மதிமாறன் ■ பி.பி. மார்ட்டின் ■ சிறீராமன் ■ ரவிக்குமார் ■ மீனாமயில் ■ அழகிய பெரியவன் ■ ராம. பிரபு ■ ஆர்.ஆர். சீனிவாசன் ■ ஜெயராஜ் ரத்னம் ■ கே.எஸ். முத்து ■ ஞானம் ■ குட்டி ரேவதி ■ தம்மதுரை ■ தமிழேந்தி ■ சமூக செயல்பாட்டு இயக்கம் ■ கே. குடியரசன் ■ ஞானசேகர் ■ எஸ்.வி. ராஜதுரை ■ எஸ். நடராஜன் ■ முத்துசாமி ■ வேலு அண்ணாமலை ■ சுப. வீரபாண்டியன் ■ நெடுஞ்செழியன் ■ கிருத்துதாசு காந்தி ■ கவுதம சன்னா ■ தமிழ் மறையான் ■ ப்ரதிபா ஜெயச்சந்திரன் ■ துரைய்யா ■ கே.ஏ.குணசேகரன் ■ அய். இளங்கோவன் ■ நீலகண்டன் ■ இசை அரசு ■ ப. கணேசன் ■ சீ. வெங்கடேசன் ■ ஏபி. வள்ளிநாயகம் ■ விஜய் ஆனந்த் ■ எஸ்.எஸ். அன்பழகன் ■ சொ.சு.தமிழினியன் ■ வ. கீதா ■ 'துடி' ■ ஏ. இளங்கோவன் ■ அர்ச்சுனன் ■ ஆசுர் ராஜ் ■ அசுரன் ■ கோ. சுகுமாரன் ■ கவுதம சக்திவேல் ■ பார்த்திபன் ■ தயானந்தன் ■ அன்புசெல்வம் ■ பாரதி பிரபு ■ தமிழ் பாபு ■ வி.குமார் ■ அரங்க. மல்லிகா ■ செபுலோன் ■ அ.மார்க்ஸ் ■ அயன்புரம் ராசேந்திரன் ■ 'விடுதலை' க. ராசேந்திரன் ■ வசந்தா கந்தசாமி ■ இலங்கேஸ்வரன் ■ பத்மாவதி விவேகானந்தன் ■ சூரியா ஏஜென்சி ■ எம்.கண்ணன் ■ முத்துக் கிருஷ்ணன் ■ என். ஜெய்சிங் ■ 'விடியல்' சிவா ■ லுத்புல்லா ■ வசந்த குமார் ■ வெர்ஜின் விமலா பாய் ■ நல்ல. கிருஷ்ண மூர்த்தி ■ வி. சற்குணம் ■ அன்பரசு ■ ராஜாமணி ■ விழி.பா. இதயவேந்தன் ■ அமைதி அரசு ■ பா. கல்யாணி ■ பொ. ரத்தினம் ■ சாரோன் ■ ஆர். உதயகுமார் ■ எஸ்.பி. விவேகம் ■ செல்வராஜ் ■ சத்ய சீலன் ■ செபஸ்டியன் ■ பால கிருஷ்ணன் ■ 'காஞ்சனை' மணி ■ வாசகர்கள் ■ முகவர்கள் ■ வாழ்நாள் உறுப்பினர்கள்



படிப்பகம்

www.padippakam.com

# "தலித் விடுதலையின்றி இன்னொரு உலகம் சாத்தியமில்லை"

■ கே. எஸ். முத்து




உலக வங்கி, பன்னாட்டு நிதி நிறுவனம், உலக வர்த்தகக் கழகம் போன்ற ஆக்டோபஸ் கரங்களுடைய அமைப்புகளின் பொருளாதார வலிமையும் அரசியல் ஆதிக்கமும், கடந்த பத்தாண்டுகளில் அசுர வளர்ச்சியடைந்து - அவை மூன்றாம் உலக நாடுகளின் 'எமனாக' காட்சியளிக்கின்றன. உலக சண்டியன் அமெரிக்காவையும் அதன் தொங்கு சதைகளான இதர வல்லரசு நாடுகளையும் பாதுகாப்பதற்காகவும் - வளர்ந்து வரும் இந்தியா போன்ற ஏழை நாடுகளை சுரண்டி, ஒடுக்குவதற்காகவுமே இந்த அமைப்புகள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டன.

வளர்ந்து வரும் நாடுகளுக்கு கடனை வழங்கி அக்கடனைத் திருப்பி செலுத்த முடியாமல் திணறும் போது 'அடிப்படை சீரமைப்பு' (Structural Adjustment) என்ற பெயரில் கடன் வலையில் வீழ்ந்த நாடுகளின் மீது வல்லரசுகள் பல கட்டளைகளை விதிக்கின்றன. அடிப்படைக் கல்வி, ஆரம்ப சுகாதாரம், விவசாயம், உணவு, ரேசன் இவைகளுக்காக அரசாங்கம் செய்து வந்த செலவுகளைக் குறைத்து - அனைத்து பொதுத் துறைகளையும் தனியார் மயமாக்க உத்தரவு போடுகின்றன; அரசின் பொதுச் சொத்துகளை விற்பதற்கு ஆணையிடுகின்றன; இறக்குமதிக்கான வரிகளைக் குறைத்து வெளிநாட்டுப் பொருட்களைக் கட்டாயப்படுத்தி இறக்குமதி செய்ய, அதற்கான சட்டங்களை நிறைவேற்ற நிர்பந்திக்கின்றன.

மறு காலனியாதிக்கத்தை 'உலகமயமாக்கல்' என்ற பெயரில் உலக நாடுகளின் மீது குறிப்பாக, மூன்றாம் உலக நாடுகளின் மீது தங்கு தடையின்றி திணித்து வரும் ஏகாதிபத்திய கொள்கைகளுக்கு எதிராக ஆங்காங்கே எதிர்ப்புக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. குறிப்பாக சியாட்டில், பிரேசில், நியூயார்க், அர்ஜென்டினா போன்ற நாடுகள் உலகமயமாக்கலை வன்மையாக எதிர்த்து பல்வேறு வகைப்பட்ட போராட்டங்களையும் நடத்தி வருகின்றன.

உலகமயமாக்கலை வலுவான முறையில் எதிர்க்கும் அமைப்புகளில் ஒன்றுதான் 'உலக சமூக மாமன்றம்'. இது பன்முகத் தன்மையும், வேற்றுமையும் கொண்ட அரசுசாரா, கட்சிசாரா அமைப்பாகும். பிரபஞ்சம் தழுவிய மனித உரிமைகளை மதிப்பதும், சமூக நீதி, சமத்துவம், மக்களுடைய இறையாண்மை ஆகியவற்றை நிலை நிறுத்துவதும் இதன் நோக்கங்களில் குறிப்பிடத்தகுந்தது ஆகும்.

'இன்னொரு உலகம் சாத்தியம்' என்ற நம்பிக்கையூட்டும் முழக்கத்தை முன்னிறுத்தி - கடந்த இரண்டாண்டுகளாக உலக சமூக மாமன்றத்தின் நிகழ்வுகள், பிரேசில் நாட்டில் போர்டோ அலிகிரேவில் சிறப்பாக நடைபெற்று உள்ளன. மீண்டும் 2003 சனவரியில் மூன்றாவது முறையாக உலகமயமாக்கலை எதிர்த்து, உலக அளவிலான சமூக செயல்பாட்டாளர்களின் எதிர்ப்பு நிகழ்வுகள் நடைபெற உள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

அதற்கு வலு சேர்க்கும் வகையில் இந்தியாவில் ஆசிய நாடுகளின் பிரதிநிதிகள் பத்தாயிரம் பேர் கலந்து கொண்ட 'ஆசிய சமூக மாமன்றம்' சனவரி 2 முதல் 7 வரை அய்தராபாத்தில் நடைபெற்றது. ஆந்திராவை தேர்வு செய்தமைக்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், 'வெள்ளைத் தங்கத்தைப் பயிரிடுங்கள்' என்ற அரசின் அறைகூவலைக் கேட்டு பருத்தியைப் பயிரிட்ட ஆந்திர மாநில விவசாயிகள் - உரம், விதை, பூச்சிக் கொல்லி மருந்துகளை கடனுக்கு வாங்கியதால், வாங்கிய கடனைத் திருப்பி அடைக்க முடியாமல் அந்த பூச்சிக்கொல்லி மருந்தையே குடித்து தற்கொலை செய்து கொண்ட துயர சம்பவத்தை அவ்வளவு எளிதாக மறந்துவிட முடியாது.

'ஹைடெக் சிட்டி', 'டிஸ்னி வேர்ல்டு' என்ற கனவுலகில் மயங்கிக் கொண்டிருந்த சந்திரபாபு (நாயுடு)வின் கன்னத்தில் 'பளார்' என விழுந்த அடியாகவும் இச்சம்பவம் அமைந்தது. அந்தப் பின்னணியோடு புத்தாண்டின் முதல் நிகழ்ச்சியாக, அய்தராபாத்தில் நடந்தேறிய அந்த பிரம்மாண்டமான மாநாடு - இந்தியாவை மட்டுமல்ல, உலக நாடுகளின் கவனத்தையும் பெரிதும் ஈர்த்தது. சனவரி முதல் தேதியிலிருந்தே பேருந்துகளிலிருந்தும், தொடர் வண்டியிலிருந்தும் திமுதிமுவென மூட்டை முடிச்சுகளுடன் ஆசியாவின் பல பகுதிகளிலிருந்தும் பலதரப்பட்ட மக்கள் வந்த வண்ணமிருந்தனர்.

அய்தராபாத் நகரில் எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டம். கறுப்பும் சிவப்புமாய், குட்டையும் நெட்டையுமாய் ஆயிரக் கணக்கில் சமூக செயல்பாட்டாளர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள், களப்பணியாளர்கள், பல்வேறு மாநில தலித் தலைவர்கள், தலித் விடுதலை சிந்தனையாளர்கள், ஆதிவாசி குழுக்கள், கதராடை மனிதர்கள், ஜோல்னா பைகளுடன் அறிவு ஜீவிகள், அதி நவீன வீடியோ கேமராக்களுடன் தொலைக் காட்சி நிருபர்கள், நகரமே அதிரும் வகையில் பறையொலி எழுப்பிய வண்ணம் நூற்றுக்கும் மேற்பட்ட பறையிசைக் கலைஞர்கள், போர்முரசு முழங்கியபடியே கொம்பிசைக் கலைஞர்கள், ஒற்றைக் கையில் வீசிய சிலம்பாட்ட வீரர்கள், பிரபல எழுத்தாளர்கள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், மக்கள் தலைவர்கள், வழக்குரைஞர்கள், ஓய்வு பெற்ற நீதிபதிகள், பேராசிரியர்கள், சமூக ஆய்வாளர்கள், செங்கொடி ஏந்தியபடி சி.பி.எம். தோழர்கள், பல்வேறு கலைகளை நிகழ்த்தும் கலைஞர்கள் என பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட - உலகமயமாக்கலை எதிர்க்கும் ஒத்த சிந்தனையாளர்கள் அய்தராபாத் நிஜாம் கல்லூரியை முற்றுகையிட்டனர்.

ஆசிய சமூக மாமன்றம் (Asian Social Forum) ஆசிய இளைஞர் முகாம் (Asian Youth Camp), ஆசிய தலித் முகாம் (Asian Dalit Forum) என்ற மூன்று தலைப்புகளில் தனித்தனி இடங்களில் நிகழ்வுகள் நடைபெற்றன. இம்மூன்று முகாம்களிலும் மய்யத் தளமாக 'ஆசிய சமூக மாமன்றம்' திகழ்ந்தது. அய்தராபாத் நிஜாம் கல்லூரியில் சனவரி 2ஆம் தேதி மதியம் தொடங்கி 7 ஆம் தேதி மாலை வரை இங்கு நடைபெற்ற அனைத்து நிகழ்வுகளும் - உலகமயமாக்கலுக்கு எதிராகவே அமைந்திருந்தன. காலையில் கருத்தரங்கங்களும், மாலையில் வீதி நாடகங்கள், பாடல்கள், ஆட்டங்கள், பல்வேறு இசைக்கருவிகளின் முழக்கங்கள், ஆவணப் படப் பதிவுக் காட்சிகள், சமூக சீரழிவுகளை உணர்த்தும் திரைப்படக் காட்சிகள் என பரபரப்பாக நடந்தேறின.

குறிப்பாக உலகமயமாக்கலின் தாக்கத்தால் கல்வி, பண்பாடு, சுற்றுச் சூழல், இயற்கை வளங்கள், கைவினைத் தொழில் போன்றவை எப்படி பாதிப்புக்குள்ளாகின்றன என்பதை விளக்கும் வகையில் புகைப்படக் காட்சிகள், கார்ட்டூன்கள், துண்டறிக்கைகள், சுவரொட்டிகள், விளம்பரத் துணிகள், ஸ்டிக்கர்ஸ் நூற்றுக்கும் மேற்பட்ட கடைகளில் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன. நாள்தோறும் மாலையில் நடந்த வீதி நாடகங்கள், பிரதிநிதிகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைந்தன.

மொழி புரியாவிட்டாலும் அர்த்தமுள்ள உடலசைவுகளாலும், ஆவேசமான நடிப்புகளாலும், உணர்வு கொப்பளிக்கும் வசனங்களாலும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த கலைக் குழுக்கள் வெளிப்படுத்திய விதம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் பல்வேறு கலை வடிவங்கள், பார்வையாளர்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றன. கலைக் குழுக்களில் பெரும்பாலும் தலித் கலைஞர்களே அதிகமாக ஈடுபட்டிருந்தனர். ஒவ்வொரு நாளும் மாலையில் நடந்த அரிய படப்பதிவுக் காட்சிகளைக் காண்பதற்கு கூட்டம் அலைமோதியது.

குறிப்பாக, காஞ்சனை சீனிவாசன் இயக்கிய ''தீண்டப்படாத தேசம்'' (The Untouchable Country) என்ற ஆவணப் படத்தை திரையிட்டது, பார்வையாளர்களிடையே ஒரு பெரிய விவாதத்தைக் கிளப்பியது. தமிழ் நாட்டிலிருந்து, தலித் இயக்கத் தலைவர்கள், செயல்பாட்டாளர்கள் என 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். தமிழ் நாடு புவியரங்க கலைஞர்கள், உலகமயமாக்கலை தலித்திய பார்வையிலிருந்து எதிர்க்கும் இரண்டு நாடகங்களை நிகழ்த்தி அனைவருடைய பாராட்டுதலையும் பெற்றனர்.

**" உரம், விதை, பூச்சிக்கொல்லி மருந்துகளை கடனுக்கு வாங்கியதால், வாங்கிய கடனைத் திருப்பி அடைக்க முடியாமல் அந்தப் பூச்சிக்கொல்லி மருந்தையே குடித்து தற்கொலை செய்துகொண்ட துயர சம்பவத்தை அவ்வளவு எளிதாக மறந்துவிட முடியாது. "**





படிப்பகம்

www.padippakam.com

ஆசிய இளைஞர் முகாம், அய்தராபாத் தும்மல்குடா பகுதியிலுள்ள பாரத சாரணர் மய்யத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, காஷ்மீர், மகாராட்டிரா, பிலிப்பைன்ஸ், நெதர்லாண்ட் மற்றும் பல்வேறு மாநிலங்களிலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் - பெண்கள் கலந்து கொண்டனர். இங்கும் காலை முதல் மதியம் வரை இளைஞர் பட்டாளத்தின் கலை நிகழ்ச்சிகளும் உலகமயமாக்கல் குறித்த கருத்துரைகளும் நிகழ்ந்தன.

சமூகத்தைப் பற்றி சிந்திக்கக் கூடிய அதே வேளையில், செயலாற்றத் துணியும் துடிப்புமிக்க இளைஞர்களை ஒரே இடத்தில் சந்தித்தபோது சமூக அநீதிகளுக்கெதிராய் குரல் கொடுக்கவும், அதை எதிர்த்துப் போராடி தோள் கொடுக்கவும் 'இன்னும் மனிதர்கள்' இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை அடிமனதில் துளிர்த்தது.

அதுபோலவே, தலித் முகாமில், உலகமயமாக்கலினால் தலித் மக்கள் எந்தெந்த வகையில் பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்பதை பல்வேறு தலைப்புகளின் கீழ் நடைபெற்ற கருத்தரங்குகள் விளக்கின. தலித் விடுதலையில் அக்கறையுடைய சமூக சிந்தனையாளர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள்





ஆர்வமுடன் பங்கேற்ற பெண்கள்

கட்டுரை வழியே உரை நிகழ்த்தினர். 'தமிழ் நாடு - தலித் மனித உரிமைகளுக்கான தேசிய ஆணையம்' அமைப்பினர், நிஜாம் கல்லூரி சமூக மாமன்ற அரங்கில் தீப்பந்தங்களைக் கொளுத்தி நூற்றுக்கும் மேற்பட்டோர் கைகளில் ஏந்திக் கொண்டு - 'தலித் விடுதலையின்றி இன்னொரு உலகம் சாத்தியமில்லை' (ANOTHER WORLD IS NOT POSSIBLE WITHOUT DALIT LIBERATION) என ஓங்கி எழுப்பிய முழக்கங்கள், ஆசிய சமூக மாமன்றத்தினருக்கு சவால் விடுவதாய் அமைந்தது.

இறுதி நாளில் மாலை (7 ஆம் தேதி) இம்மூன்று முகாம் பிரதிநிதிகளால் நடத்தப்பட்ட பேரணியால் அய்தராபாத்



மாநாட்டுப் பிரதிநிதிகளுடன் டாக்டர் கே.ஆர். நாராயணன்



நகரமே நெரிசலில் சிக்கித் திணறியது. நிஜாம் கல்லூரியில் தொடங்கிய பேரணி இந்திரா பூங்காவை அடைந்தபோது திரும்பும் திசை எங்கும் செங்கொடிகள், எதிர்ப்புக் குரல்கள், இசை முழக்கங்கள். அனைத்தையும் பார்த்தபோது இவ்வளவு பேரும் ஏகாதிபத்தியத்திற்கெதிராக அணிதிரள மறுக்கிறார்களே ஏன் என்ற கேள்வி எழுந்தது.

தலித்துகளுக்கும் சாதி இந்துக்களுக்கும் இடையில் தீர்க்க வேண்டிய கணக்குகள் ஏராளம் இருக்கும்போது, எங்கிருந்தோ படையெடுத்து வரும் எதிரியை எப்படி எதிர்ப்பது? 'தென்னை மரத்துக்கு தேள்கொட்ட பனை மரத்துக்கு நெறி கட்டுச்சாம்' இங்கிருக்கும் சாதிவெறியர்கள் திருந்தாத வரை, உலகமயமாக்கலை மட்டுமல்ல, ஒரு மயிரையும் அசைக்க முடியாது என்பது தானே வரலாறு. தலித்துகளின்றி இன்னொரு உலகம் சாத்தியமில்லை என்பதே ஆசிய சமூக மாமன்ற நிகழ்வின் முடிவாக இருந்தது. இறுதி நாளில் நடந்த நிறைவு விழாவில், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் கே.ஆர். நாராயணன் ஆற்றிய உரை, ஆயிரக் கணக்கான பிரதிநிதிகளின் மனதில் ஆணி அடித்தாற்போல இருந்தது. •

புகைப்படங்கள் : ஆர்.ஆர். சீனிவாசன்



படிப்பகம்

www.padippakam.com

# பசி

■ **மீனா மயில்**

இரவுகள் அழியட்டும்
இல்லாத கனவுகள் சாக
சதிராடும் சலங்கைகள் சிதறி
உன் அகங்காரக் குரல் தணிக்கும்

பொதிந்திருந்த புற்றிலிருந்து
சீரியெழும்
பாம்புகளின் கழுத்துக்கு
என் வேர்கள் சுருக்குக் கயிராகும்

பெருவெள்ளம் சீறி வர
அழியட்டும் அநியாயம்
மனிதத்தின் கிளை வளர்த்து
மதச் சுவடழிப்பேன்

எரித்துக் கொல்கிறாய்
என் பிள்ளைகளை...
காற்றெங்கும் நிரம்பும்
அவர்கள் கதறல் கேட்டு
இன்னும் பெற்றுப் போடுவேன்
உனையழிக்கும் உயிர்களை


இன்னொரு விடியல் ஓங்கும்
உள்ளுக்குள் கனக்கும்
ஓங்காரக் கவிதைகளாய்

என்னுள் கிளறும் தீ
துரத்தும் உன் கால்களை
எரித்துப் பசியாறும்
நெருங்காதே!




# மீட்டுருவாக்கம்

■ **ராம. பிரபு**



சிதைமைகளின் குவியல்களிலிருந்து
சேமித்துக் கொண்டிருக்கிறேன் என்னை
கோபத்தின் உக்கிரம் பொங்க

நீ என்னை வீழ்த்திய
ஏதோவொரு புள்ளியிலிருந்து
மீண்டும் உருவாகிறேன் நான்

கண்களில் கசிந்த கடைசிக் காட்சியின்
மீட்டுருவாக்கம் நிகழ்த்துமென்
ஞாபகத் திரள்வில் நீ வரும்பொழுது
என் பேனாவின் முனையோ
பறையின் குச்சியோ
ஏன் என் வாளேகூட
பதம் பார்க்கலாம் உன்னை.



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்ப் பெயர் சூட்டல்

# சாதி ஒழிப்புக்கான முன்னகர்வு

■ சூரிய தீபன்



ஆர்.ஆர். சீனிவாசன்

சேரலாதன், இளம்பரிதி, இளங்கோ, செழியன், தமிழ் மாறன், விடுதலைக் கனல், வெற்றியரசு, தமிழினி, தமிழாள், தமிழ் நங்கை, வீர மங்கை, முல்லை, தாமரை, நிறைமதி, அறிவுக் கனி, கலைமதி, கனலி - ஈழப் போராளிகளின் பெயர்கள் இவை. இனவெறி எதிர்ப்பு யுத்தத்தை முன்னெடுப்பதில், ஆண், பெண் என்ற வேறுபாடு எப்படி அற்றுப் போயிருக்கிறதோ, அது போல் தமிழ்ப் பெயர்கள் சூடிக் கொள்வதிலும் ஈழத் தமிழ்ப் பெண்கள் முன்னிற்கிறார்கள். கடைசிக் காலாட்படை முதல், களப் போராளி வரை பெண்கள் முன் செல்கிறார்கள்.

தோண்டித் தோண்டி, துருவித்துருவி, உள் நுழைந்தாலும், இந்தப் பெயர்களில் சாதியைக் கண்டெடுக்க முடியுமா? முத்திரைகளை வைத்து மதவாசனை கண்டு பிடித்து விடும் எந்த மூக்கும் இந்தப் பெயர்களைக் கொண்டு, மத வாசனையைக் கண்டுவிட முடியுமா?

ராமசாமி, கந்தசாமி, ராமானுஜம், ஜெயராமன், ஜெயந்தி, சரஸ்வதி, விசாலாட்சி, துளசி போன்றவை தெளிந்த இந்து மதப் பெயர்கள் என்பது, பார்த்தவுடனே - கேட்டவுடனே தெரிந்து விடுகின்றன. தொட்டுத் தொட்டு உள்ளே போனால், உள்ளுக்குள் பதுங்கியிருக்கும் சாதி - சாதிக்குள் பம்மியிருக்கும் குலம், கோத்திரம், கொடி வழி இவைகளைத் தெண்ணி எடுத்து விடலாம். சாதி, மத அடையாளம் காட்டுகிற இவை சமஸ்கிருதப் பெயர்கள். சமஸ்கிருத மயமும் நால்வர்ணக் கோட்பாடும் இந்து மதத்துடன் உடன் பிறந்தவை. வர்ணாசிரமக் கொள்கையை விலக்கிவிட்டால், இந்து மதம் கிடையாது. வேறெந்த மதமும் சாதிப் பாகுபாட்டை உயிர் நிலையாகக் கொண்டு எழுந்ததும் இல்லை.

சடங்கு, சாத்திரம், பழக்க வழக்கம், பேச்சு மொழி என சாதியை அடையாளம் காணப் பல வழிகள் உள்ளன. ரத்தத்துக்குள் உறையும் சாதி, மதத்தைக் கண்டு பிடிக்க, ரத்தத்துக்கு மேல் போர்த்தியிருக்கும் தோல், உடல்வாகு, மழித்தலும் நீட்டலும் செய்யப்படுகிற முடி, அணியும் உடை, உடுத்துகிற விதம் என்றெல்லாம் அடையாளங்கள் நீளுகின்றன. ஆனால், முதலில் தூக்கலாக அடையாளம் காட்டுவது பெயர்தான்.

அதியமான், அதியன், அரசு, அழகிய நம்பி, நன்னன், பாடினி, மணிமேகலை, மாதவி - இந்தப் பழந் தமிழ்ப் பெயர்களில், சாதி, மத தடயம் தெரியாது. உற்று, உற்று நோக்கினாலும் உள்ளிருந்து சாதி, மத கறும்புள்ளியைக் கண்டுவிட முடியாது. சாதி, மத அடையாளமற்ற பழைய தமிழ்ப் பண்பாடுகளில் பெயரிடுதல் பண்பாட்டை மீளுருவாக்கம் செய்வதென்பது, சாதி ஒழிப்பை நோக்கிய ஒரு முன்னகர்வு. சாதி வித்தியாசத்தை வேராகக் கொண்ட இந்து மதத்தை எதிர்த்த அசைப்பு; தேங்கிப் போய் நாற்றமடித்த பாசிபடர்ந்த குளத்தில், பழைய பாசியை அகற்றித் தூரெடுக்கும் புதிய பண்பாட்டு அசைவு இது.

ஒட்டுமொத்த, சாதி, மத நம்பிக்கையில் அடி



படிப்பகம்

www.padippakam.com

கொடுக்க இது மட்டுமே போதாது. பலநூறு வழிகளில் சம்மட்டிகள் ஓங்கி பாறைகளைத் தூளாக்க வேண்டியிருக்கும்.

வாழும் மண் சார்ந்து, இடம், ஊர் சார்ந்து, தொழில் சார்ந்து உருவானவை தமிழ்ப் பெயர்கள். பழந்தமிழ்ச் சமுதாயத்தில் காரண காரிய அடிப்படையில் உருவான தமிழ்ப் பெயர்களை, காரண, காரியமற்ற சாதி, மதப் பெயர்கள் உண்டு ஏப்பமிட்டுவிட்டன. ஆதித் தமிழ்க் குடிகளான தலித் மக்கள், 18ஆம் நூற்றாண்டு வரையிலும் நல்ல தமிழ்ப் பெயர்களையே கொண்டிருந்தார்கள். இப்போதும் கூட நல்ல தமிழ்ப் பெயர்களின் அடையாளங்களை அவர்களிடம்தான் காண முடியும்.

சமுதாயம் எப்போதும் வளர்ச்சி நோக்கிய அடிவைப்பிலேயே இருக்கிறது. வளர்ச்சி எப்போதும் போராட்டத்திலேயே தங்கியுள்ளது. ஏற்கனவே கடந்து போன சமுதாயம் பதித்துப் போன தடங்களில், தனிச் சிறப்பான சுவடுகளை எடுத்துக் கொண்டு, ஒவ்வொரு கால கட்டமும் முன்னகர்கிறது. சாதி, மத அடையாளமற்று இருந்த ஒரு பழந்தமிழ்ச் சமூகத்திலிருந்து இன்றைய சமகால இருட்டு வெளிச்சத்தை எடுத்துக் கொள்ள முடியும். பழந்தமிழ்ச் சமூகத்தில் உலவிய அறிவார்ந்ததும், இயற்கை நெறி சார்ந்ததும் அறிவியல் பூர்வமானதுமான அடையாளங்களை இனத்துவ அடையாளங்கள் என்கிறோம். அவ்வாறான அடையாளங்களில் இயல்பாக நிலவியது தமிழ்ப் பெயரிடுதலும் ஒன்று.

சாதி அடையாளமற்று, மத அடையாளமற்றுத் திகழ்ந்தது சங்ககாலம். சாதி, மத அம்மை நோய் கொண்ட முகமாக மாறியது, சோழர்களின் பக்திக் காலம். எனவே, பழைய சங்க கால அடையாளங்கள் அழிபட்டு பார்ப்பனீய, ஆதிக்க சாதி, மத அடையாளங்கள் இடம் பெற்ற காலம் இது. ஆதிக்க சாதி, மதக் கொழுப்புகளுக்கு எதிரானதாக இன்றைய சமகால வாழ்வை முன்னெடுத்துச் செல்ல பழந்தமிழ்ப் பண்புகளை முகம் திருத்தி, பூவிட்டு, அழகு செய்வது தவறில்லை. ஆதிக்க சக்திகளுக்குத் தீங்கும், மக்களுக்கு நலனும் எதெல்லாம் தருமோ, அவற்றை மீட்டெடுப்பது அவசியம்தான்.

••

முந்தைய திராவிட இயக்கத்தினரும், தமிழறிஞர்களும் வடமொழி ஆதிக்கத்துக்கு எதிராகக் கொண்ட தமிழுணர்வு காரணமாக தமிழ்ப் பெயர்களுக்கு மாறினர். தாம் மாறியதோடு அல்லாமல், தம் பிள்ளைகளான அடுத்த தலைமுறைக்கும், தமிழ்ப் பெயர் சூடி மகிழ்ந்தனர். அந்த மகிழ்ச்சி அவர்கள் கண்ணெதிரிலேயே, அழிமானமாகி மறைந்தது.

பேரப்பிள்ளைகளை மறுபடி பெருந்தெய்வங்கள் பறித்துக் கொள்ள, சமஸ்கிருதப் பெயர்களைச் சூடினார்கள் அவர்களைப் பெற்றோர்கள். தமிழ்ப் பெயர் சூட்டலுக்கு எது உயிராதாரமோ, அந்த சாதியற்ற, இந்து மதமற்ற காரியத்தை தொடர்ச்சியாக அவர்கள் முன்னெடுக்கவில்லை. எனவே, அவை ஒரு கட்டத்திற்கு மேல் வேர்பிடிக்க முடியாமலும் போயின. மூலத்தோடு போர் தொடுப்பதை முன்வைக்காத எந்த செயலும், எந்தவொரு சீர்திருத்தமும், மீண்டும் பழமைக்குள் போய் முடங்குவது அதிசயமில்லை.



திராவிட பாரம்பரியத்தினர், தமிழறிஞர்கள் ஆகியோர், வைதீகச் சடங்குகள், கார்த்திகை, தீபாவளி போன்ற பார்ப்பனீயத் திருவிழாக்களுக்கு மாற்று நடவடிக்கையாக தைத் திருநாளை, உழவர் திருநாளைக் கொண்டாடினர். அவற்றின் சாரமான சாதி, மத வாத எதிர்ப்பு, இந்த மாற்றுப் பண்பாட்டு நடவடிக்கையில் முன்வைக்கப்படவில்லை. அதன் காரணமாகவே, அது தமிழர்களின் ஒருமைப்பாட்டுணர்வாக இல்லாமல், பார்ப்பான் தவிர்த்த உயர் சாதி முகமாக வெளிப்பட்டது. பெயர் சூட்டல், தமிழ்த் தேசிய இனத்துவ அடையாளமாக இருந்தாலும் - சாதி, ஒழிப்பு, மத எதிர்ப்பு இச்செயல்பாடுகளின் உள் நரம்பாக இல்லை. இவை வெறும் வடமொழிப் பெயர்கள் அல்ல. இந்து மதப் பெயர்கள். உள்ளே இருவாய் அமர்ந்திருக்கும் சாதி அடையாளங்களுடனானவை.

தூய தமிழ்ப் பெயர்களைச் சூட்டுவது மட்டும் நோக்கமாகக் கொண்டு இவர்களைத் தாண்டி அடுத்த கட்டமாக, சாதியைக் கடந்து, மதத்தை மறந்து புதிய சிந்தனையாளர்கள் போகிறார்கள். எவரொருவர் தன்னை சாதியற்றவராக உணர்கிறாரோ, அதற்கான செயல்பாடுகளில் தன்னை உணர்வுப் பூர்வமாக முன்னிறுத்திக் கொள்கிறாரோ, அப்போதுதான் அவர் சாதி எதிர்ப்புப் போராளி. சாதியை எதிர்க்கிறபோது, சாதிப் பாகுபாடுகளைத் தனக்குள் வரித்துக் கொண்ட இந்து மதத்தையும் எதிர்ப்பவராக ஆகிறார்.

**“உரிமைக் கோரலின் போராட்டத் தொடக்கமே - தமிழ்ப் பெயர் சூட்டல். ஆதிக்க சாதிக் கொழுப்பை உருக்கித் தீமூட்டலுக்கு முன்கை எடுத்தல் இது.”**

சாதி ஒட்டுக்களை, மத ஒவ்வாமைகளைத் தூக்கியெறியும் புதிய போராளிகள் தமிழ்க்களத்துக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். ஆதிக்க சாதியினர் செய்ய மறுப்பதை ஒடுக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, காலம் காலமாக உதாசீனம் செய்யப்பட்ட மக்கள் முன்வந்து செய்கிறார்கள். 'விடுதலைச் சிறுத்தை'கள் அமைப்பாளர் திருமாவளவன், அய்யாயிரம் பேருக்குத் தமிழ்ப் பெயர் சூட்டுகிறார். விழா மேடையிலேயே அய்யாயிரம் என்பது எட்டாயிரமாக உயருகிறது. சாதி, மத எதிர்ப்புக் கொடியை முழு மூச்சாய் பறக்கவிட்டு அடித்தள மக்களின் உணர்வு மேலோங்கியது மட்டுமல்ல, அவர்களின் மொழியும் முன்னிறுத்தப்பட்டது.

தன் தந்தைக்கு தொல்காப்பியன் என்று பெயர் சூட்டியதோடு, தன் குடும்ப உறுப்பினர்களுக்கும் சாதி, மத அடையாளமற்ற பெயர்களைச் சூடி, தன் சொல்லுக்குத் தானே செயல்படும் முதல் ஆள் என நிறுவினார் திருமாவளவன். முதன் முதலாக ஓர் இயக்கம், இந்த மீட்டுருவாக்கத்தை முன்னெடுத்திருக்கிறது. அமைப்பின் மாநில, மாவட்டப் பொறுப்பாளர்கள் அனைவரின் பெயர்களையும் தமிழ்ப் பெயர்களாக மாற்றி, மக்கள் மேல் சுமத்தப்பட்ட இழிந்த அடையாளங்கள் தூக்கி வீசப்பட்டன.

••

உலகமயமாதல் என்ற ராட்சத சிலந்தி, கோடிக்கால்களால் வலை விரித்து மக்களின் தனி அடையாளங்களை விழுங்கி முன்னேறி வருகிறது. தேசிய இனத்தின் அடையாளங்களை அழித்தல் என்ற மய்யம் நோக்கி நகர்கிறது. மொழி, பண்பாடு, அரசியல், பொருளியல் போன்ற இனத்துவ அடையாளங்களே இல்லாமல் விழுங்குதல், உலக சந்தைக்கு தேவையானதாகி விட்டது.



படிப்பகம்

www.padippakam.com

தனக்கென்று சொந்த வரலாறு, சொந்த மொழி, சுயபண்பாடு, சுயமான பொருளியல், சுதந்திரமான அரசியல் செயல்பாடு எதுவொன்றும் தலையெடுக்க விடாமல் அடித்து வீழ்த்துகிறது. உலக முழுவதுக்குமான சந்தையின் ஊடக மொழியாக ஆங்கிலத்தை முன்னிறுத்தி, அதை நோக்கி முழு உலகையும் நகரச் செய்துவிட்டதும், எல்லோருக்கும் எல்லாப் பகுதிக்கும் ஒன்றே என்பதான நுகர்வுக் கலாச்சாரத்தை பரவலாக்கி விட்டதும் இனத்துவ அடையாள அழிப்பின் எடுத்துக் காட்டுகள்.

அது, பெயர் சூட்டலில் ஆங்கில மயம், சமஸ்கிருத மயம் இரண்டையும் தன் குணமாக சுவீகரித்து வெளிப்படுத்துகிறது. ராஜேஷ், ஆகாஷ், திவ்யேஷ், நிஷாந்த், நிர்ஜித், நீரஜா, ஜானவி, திரிஷா, மோனிகா, ஸ்வேதா, ரேகா என்று சமஸ்கிருதமும் ஆங்கிலமுமான உச்சரிப்புடன் கூடிய நவீனப் பெயர்களாக வெளிக்காட்டிக் கொள்கிறது.

சட்டம், தொழில்நுட்பம், அறிவியல், மருத்துவம், உயர்கல்வி பயின்று அரசுத் துறைகளிலும், கொழுத்த தனியார் நிறுவனங்களிலும் தங்களைப் பொருத்திக் கொண்ட படித்த ஆதிக்க சாதி வர்க்கம், இன்னும் இன்னும் 'மேன்மக்களாய்' தங்களை ஆக்கிக் கொள்ள ஆசை கொள்கிறது. இந்த ஆசையின் செயல்பாடாக பழம் சமஸ்கிருதப் பாரம்பரியத்தையும், நவீன உலகமயமாக்கத்தையும் இணைத்து தங்களோடு பொருத்திக் கொள்கிறார்கள்.

சாதாரண தமிழ் மகன் கூட இப்படித் தன்னை உயர்த்திக் காட்ட ஆசை கொள்கிறான். சாதிப் புத்தியை துளியளவும் இறக்கி வைக்காமல் உலக மயத்தை முடிந்தளவு தாவிப் பிடித்துக் கொள்ள முயல்கிற நவீன வர்க்கம், இப்படி ஒளிமயத்தைத் தேடிக்கொள்கிறது.

பூங்குன்றன், செழியன், நன்மாறன் போன்ற பெயர்களில் இருக்கிற தமிழ் இன அடையாளம் தேவையற்றது என இவர்கள் கருதுகிறார்கள். தமிழன் என்ற இன அடையாளம் பாமரத் தனமானது, மேனிலையாக்கத்துக்குத் தடையாக நிற்பது என்று புதிதாய் உருவான இந்த வர்க்கத்துக்கு ஒருவகை மனவியல் உருவாகியிருக்கிறது. எனவே, தமிழன் என்ற இனத்துவ அடையாளத்தைச் சிதைத்து நாங்கள் எங்கேயும் போய்விடவில்லை; உங்களோடுதான் இருக்கிறோம் என்று உலகமயத்தில் அய்க்கியமாகி இருக்கிறார்கள்.

பல்வேறு இன, மொழி மக்களின் அடையாளங்களைச் சிதைத்தல் என்ற இடத்திற்கு நீள்வது ஒற்றை உலகம். பல்வேறு இன, மொழி, பண்பாடுகளை அழிப்பதோடு, பல்வேறு மத அடையாளத்தையும் அழிக்கிற வெறிகொண்டது. ஒற்றை மதம், ஒற்றை உலகத்தை முன்வைக்கிற உலக மயத்துக்குள்ளும் ஒற்றை மதத்தை முன்வைக்கிற இந்துத்துவாக்குள்ளும் அடைக்கலமாகிறார்கள் புதிய வர்க்கத்தினர்.



❝ முதன் முதலாக ஓர் இயக்கம், இந்த மீட்டுருவாக்கத்தை முன்னெடுத்திருக்கிறது. அமைப்பின் மாநில, மாவட்டப் பொறுப்பாளர்கள் அனைவரின் பெயர்களையும் தமிழ்ப் பெயர்களாக மாற்றி மக்கள் மேல் சுமத்தப்பட்ட இழிந்த அடையாளங்கள் தூக்கி வீசப்பட்டன. ❞

ஆண், பெண் என்ற பாலின வேறுபாடற்ற பெயர்களைச் சூடுதல், அடுத்த கட்ட நடவடிக்கையாக அமையும். அமைய வேண்டும். ஒருமுறை பெரியார், ஒரு குழந்தைக்கு 'ருஷ்யா' என்று பெயர் சூட்டினார். பெண் குழந்தைக்கு ருஷ்யா என்று பெயர் வைக்கிறீர்களே என்று கேட்டபோது. 'ஆண் என்ன, பெண் என்ன? பெயரில் ஆண், பெண் வித்தியாசம் என்ன வேண்டிக் கிடக்கு? அதனால்தான் ருஷ்யா என்று வைத்தேன்' என்றார். பெயர்களிலேயே பாலின வேறுபாட்டை அழித்தல், பெரியாரின் பெண் விடுதலைச் செயல்பாடுகளில் ஒன்றாக ஆனது. பால் அடையாளம் தவிர்த்த தமிழ்ப் பெயர்கள் தங்கம், மாணிக்கம், ரத்தினம் எனப் பல உள்ளன.

தமிழ் அடையாளங்களை ஏற்றுக்கொள்ளல் என்பதன் கூடவே சில கேள்விகள் தொத்திக் கொண்டு உடன் வருகின்றன. இவ்வகை முன்னடி வைப்பால் இறுக்கமான சாதிக் கட்டமைப்பும் அதன் தீண்டாமைக் கொடுமையும் தீர்ந்து போய்விடுமா? எல்லா சாதி வீடுகளிலும், எல்லா சாதியினருக்கும் தாகத்துக்குத் தண்ணீர் கொடுத்து விடுவார்களா? தலித்துகளை மலம் தின்ன வைத்த திண்ணியங்களை மரணம் தின்னச் செய்து விட முடியுமா? தலித் சகோதரரை மனிதத் தன்மையுடன் நடத்த வேண்டுமென்று உரிமை கோரல் முடியுமா?

இவ்வாறான பல உரிமைக் கோரலின் போராட்டத் தொடக்கமே தமிழ்ப் பெயர் சூட்டல். ஆதிக்க சாதிக் கொழுப்பை உருக்கித் தீ மூட்டலுக்கு முன்கை எடுத்தல் இது. ஒன்றைத் தொட்டு இன்னொன்று. அந்த இன்னொன்றைத் தொட்டு மற்றொன்று என வற்றாது புரளும் தீராநதியின் தொடக்கப் புள்ளி இது. தமிழ்ப் பெயர்கள் சூடிக்கொண்டவர்கள் தங்கள் கிணற்றுக்குள் படர்ந்த சாதிப் பாசியை அகற்றி, தொடர்கிளர்ச்சிகளின் தோள்களாக எப்படித் தங்களை ஆக்கிக் கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்தது.

சாதி நீக்கத்துக்கு அடிப்படையாக அமைவது ரத்த உறவு என்கிற சொந்த சாதி திருமண ஒழிப்பு. பிறகு வேற்றுமையில்லாத பிற சாதிகளில் கொள்ளும் திருமணக் கலப்பு. இப்படி ரத்த உறவுத் திருமணங்களை அறுத்து நடக்கும் சாதி மறுப்புத் திருமணங்களே சாதி ஒழிப்புக்கு நீர் பாய்ச்சும். இப்படிப் பல்வேறு தளங்கள் பலப்பல வடிவங்களில் தாக்குதல் தொடுத்தால் தவிர, சாதிவேர் சாயாது. ●




படிப்பகம்

www.padippakam.com


# திருக்குர்ஆன்

## முஸ்லிம்களின் குலச் சொத்தல்ல!

**உலக மக்கள் அனைவருக்கும் இது ஒரு நல்லுரை**
**நெஞ்சுக்கு நிம்மதி அளித்து நேர்வழி காட்டும் அருளுரை**




"தலித் விடுதலை - மனித விடுதலை குறித்து குர்ஆன் பேசுகிறதா?"

"நல்லா கேட்டீங்க போங்க...! குர்ஆனின் மையக்கருத்தே மனித விடுதலைதான்...! சில வசனங்களைப் பார்ப் போமோ?"

✶ மனிதர்களில் ஏற்றத்தாழ்வு இல்லை; நீங்கள் அனைவரும் ஓர் ஆண் - பெண்ணிலிருந்து படைக்கப்பட்டவர்களே! (குர்ஆன் 49 : 13)

✶ உங்கள் மீதுள்ள சுமைகளை (இறைத்தூதர்) இறக்குகின்றார்... உங்களைப் பிணைத் திருக்கின்ற விலங்குகளை உடைத்தெறி கின்றார். (குர்ஆன் 7 : 157)

✶ அடக்கி ஒடுக்கப்பட்ட ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோருக்காக இறை வழியில் போராடாமல் இருக்க என்ன காரணம்? (குர்ஆன் 4 : 75)

✶ பூமியில் ஒடுக்கப்பட்டிருந்தவர்கள் மீது நாம் அருள் புரியவும், அவர்களைத் தலைவர் களாக்கவும், அவர்களை வாரிசுகளாக்கி பூமியில் ஆட்சியதிகாரத்தை வழங்கவும் நாம் நாடியிருந்தோம். (குர்ஆன் 28 : 5)

**● மூலம் ● தமிழாக்கம்**
**எளிய தமிழில்; இனிய நடையில்!**

## கையடக்கப் பிரதி

**1264** பக்கங்கள்
விலை ரூ. **100**
அஞ்சல் செலவு ரூ. **23**
(வி.பி.பி. கிடையாது)












**இன்னும்... நபிமொழி தமிழாக்கங்களும், இஸ்லாமிய வாழ்வியல் குறித்து 150-க்கும் அதிகமான தலைப்புகளில் நூல்களும் கிடைக்குமிடம்...!**

**இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்,**
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 600 012.போன்: 2662 4401, 2662 0091.
பேக்ஸ் : 044 - 2662 0682 E-mail: iftchennai12@email.com Website: www.iftchennai.org


படிப்பகம்

www.padippakam.com

# மரண வலையில் பட்டுத்தறி குழந்தைகள்

■ ஆசூர் ராஜ்



வெளிச்சந்தையில் அந்தப் பட்டுச் சேலையின் மதிப்பு ரூபாய் 2500. நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட, கலை நயமிக்க வேலைப்பாடுகளை 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள்தான் செய்கிறார்கள் என்பது ஆச்சரியமல்ல - வேதனை, கொடுமை, சுரண்டல்... என என்ன சொன்னாலும் தகும். பட்டுச் சேலைகளோடு சேர்த்து தங்களுக்கு மரண வலைகளையும் அவர்கள் நெய்து கொண்டிருப்பது, பலரும் அறியாத ஒன்று. பட்டு நூல்களைக் கோர்த்து வாங்கும் பணிகளிலும், பட்டு நூல்களை சிக்கல் இல்லாமல் பிரித்தெடுக்கும் பணிகளிலும், குழந்தைகள்தான் ஈடுபடுத்தப்படுகிறார்கள். எங்கேயோ அல்ல, பட்டுக்குப் புகழ்பெற்ற காஞ்சிபுரத்தில்தான்.

காவியம் படைக்க வேண்டிய பிஞ்சுக் கைகள், பட்டுச் சேலைகளுக்கு பாடர் கட்டி, வாழ்க்கையின் பாதை தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆரோக்கிய உணவு, உடல் வலிமைக்கு விளையாட்டு, சமூகத்தைப் புரிந்து கொள்ள படிப்பு - இவையெல்லாம் இவர்களுக்கு எட்டாக்கனியாகி விட்டது. காஞ்சிபுரத்தில் மட்டும் 30,000 குழந்தைகள், பட்டு நெசவுப் பணியில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்ற தகவல், 'குழந்தைகள் உழைப்பு எதிர்ப்புப் பிரச்சாரம்' மற்றும் காஞ்சிபுரத்தில் செயல்பட்டு வரும், 'சமூக செயல்பாட்டு இயக்கம்' இணைந்து நடத்திய ஆய்வின் முடிவில் அறிவிக்கப்பட்டது. இவ்விரு அமைப்பினரும் இணைந்து, சனவரி 21 அன்று காஞ்சிபுரத்திலுள்ள அண்ணா அரங்கத்தில், பட்டு நெசவில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள குழந்தைகள் குறித்த பொது விசாரணையை நடத்தின.

துன்புறுத்தலுக்கும் முதலாளிகளின் தாக்குதலுக்கும், கொடுமைகளுக்கும் ஆட்பட்ட 32 குழந்தைகளும் படுகொலை செய்யப்பட்ட இரண்டு குழந்தைகளின் பெற்றோர்களும் - இப்பொது விசாரணையின் நீதிபதிகள் முன்பு தங்களுக்கு நேர்ந்தவற்றை விவரித்தனர். ''அண்டான், குண்டான், தங்க நகைகளை அடகு பிடிப்பதுபோல், எங்களையும் ரூ.1,000 முதல் 10,000 வரை அடகு பிடித்து, கொத்தடிமைகளாக வைத்துக் கொள்கிறார்கள். எங்களால் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. இதனால் முதலாளிகளின் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டு வேலை செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது'' என்பதையும் அவர்கள் நடுவர் குழுவிடம் விவரிக்க மறக்கவில்லை.

நடுவர் குழுவில் நீதிபதிகளாகப் பங்கேற்ற 'தமிழ் நாடு பெண்கள் ஆணையத் தலைவர்' டாக்டர் வி. வசந்தி தேவி, ஆர். ரத்தினசாமி, வி. ஆர். லட்சுமி நாராயணன், பேராசிரியர் பாபுமேத்யு, சிவகாமி, அய்.ஏ.எஸ்., என்.ஜி.ஆர். பிரசாத், வழக்குரைஞர் சுதாராமலிங்கம், எழுத்தாளர் பாமா ஆகியோர் அடங்கிய குழு - குழந்தைகளின் பிரச்சனைகளையும், அவர்களின் அனுபவங்களையும் கவனமுடன் கேட்டறிந்தது.



படிப்பகம்

www.padippakam.com

இப்போது விசாரணையில் பங்கேற்ற இரண்டு குழந்தைகள் அளித்த வாக்கு மூலம் கேட்போரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது : எம். அண்ணாமலை, 9 வயது சிறுவன், நடுவர் குழு முன்பு அமர்ந்தவுடன் வேகமாகப் பேசினான். தனக்கு நேர்ந்த அவமானங்களையும், கொடுமைகளையும் ஒவ்வொன்றாக அடுக்கினான். ரூ. 1,500 கடன் பெற்று, பிள்ளையார் பாளையத்திலுள்ள புண்ணியகோட்டி என்ற தறி முதலாளியிடம் இவனை வேலைக்கு அனுப்பினார்கள். அங்கு ஒன்பது தறிகள் உள்ளன. ''மூன்று சிறுவர்கள் என்னுடன் வேலை செய்கிறார்கள். எனக்கு மாத சம்பளம் ரூ. 100. என்னை முதலாளி தினசரி அடிப்பார், தலையில் குட்டுவார், இதனால் எனக்கு வேலைக்குச் செல்ல பிடிக்கவில்லை''.

''ஆகையால் நானும், எனது நண்பர் இம்ரானும் வீட்டைவிட்டு ஓடிவிட்டோம். காஞ்சிபுரத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள ராஜகுளம் என்ற ஊரில் எனது மாமா வீட்டில் இருந்தோம். ஒரு வாரத்திற்குப் பிறகு எங்களைக் கண்டு பிடித்தார்கள். ஆனால், மீண்டும் அதே முதலாளியிடம் வேலைக்கு விட்டு விட்டனர்'' என்றவன் தொடர்ந்து கூறும் போது, ''மார்கழி தொடங்கி தை மாதம் முடிய ஒரு மாதம் குழந்தைகளுக்கு தண்டனைக் காலம் என்று கூறுமளவிற்கு (பொங்கல் விழா தை மாதம் வருவதை முன்னிட்டு அதிக வேலை) காலை 5.00 மணிக்கே வேலைக்குச் சென்றுவிட வேண்டும். இரவு 9.00 மணிக்குதான் வீடு திரும்புவார்கள். பல குழந்தைகள் முதலாளிகளின் வீட்டிலேயே தங்கி வேலை செய்ய வேண்டும்.''

''விடியற்காலை வேலைக்குச் செல்வதால் குளிர்ந்த நீரில் குளிக்க முடியவில்லை. 3.12.2002 அன்று நான் வேலைக்குச் சென்றபோது உன் மேல் நாற்றமடிக்கிறது; ஏன் குளிக்காமல் வந்தாய் என என்னை அடித்தார்கள். முதலாளி தலையில் கொட்டினார். வேலை செய்பவர்கள் கட்டையாலும் என் தலை மயிரைப் பிடித்து சுவற்றிலும் மோதினார்கள். இதனால் எனக்கு கை, கால்களில் வீக்கம் ஏற்பட்டது. ஒரு பல்லும் ஆடியது. உடனே நான் அழுது கொண்டு என் தந்தையிடம் கூறினேன். என் தந்தை முதலாளியிடம் போய், உன் பணத்தைத் திருப்பித் தருகிறேன், பையன் இனிமேல் வேலைக்கு வர மாட்டான் என்று கூறிவிட்டார். அன்று முதல் நான் வேலைக்குச் செல்லவில்லை'' என குழுவினரிடம் தனது வேதனைகளைப் பதிவு செய்தான்.

அதைத் தொடர்ந்து பேசிய சிறுவனின் பெயர் எல். அருள், வயது 14. காஞ்சிபுரத்திலிருந்து 9 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள வேடல் கிராமம் இவனது சொந்த ஊர். தினசரி காஞ்சிபுரத்திற்கு வேலைக்கு வந்து செல்கிறான். ஒரு கால் ஊனமான இச்சிறுவனின் மாத ஊதியம் ரூ.300. பெற்றோர்கள் இவன் மீது பெற்றிருக்கும் கடனோ அய்ந்தாயிரம். தனது அக்காவின் திருமணத்திற்காக கடன் பெற்றதாகக் கூறும் இச்சிறுவன், தினமும் வேலைக்கு வரும்போது பேருந்தில் வருகிறான். திரும்ப வீட்டிற்குச் செல்லும் போது நடந்து செல்கிறான். ''ஒரு நாள் பேருந்து செலவு, போகவும் வரவும் சேர்த்து ஒன்பது ரூபாய். நான் சம்பாதிப்பது பஸ்சுக்கே செலவாகி விடுகிறது. என்ன செய்ய'' என்று பெருமூச்சு விடுகிறான். இது மட்டுமல்லாமல், வேலைக்குத் தாமதமாகப் போனால் அடி, உதை வாங்குவதையும் நடுவர் குழுவிடம் விவரிக்க இவன் தவறவில்லை.

21.8.1999 அன்று பட்டுத்தறி வேலையில் ஈடுபடுத்தப்பட்ட பாலசுப்பிரமணி (எ) ஜீவானந்தம் வயது 14, முதலாளி வீட்டிலேயே அடித்து தூக்கில் போடப் பட்டிருந்ததாக, அவரது தந்தை நடராசன் நடுவர் குழு முன்பு சாட்சியளித்தார் :

''நான் தூசி மாமண்டூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு ஒரே மகன். படிப்பு சரியாக வரவில்லையென, 6 ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தவனைப் பாதியில் நிறுத்தி தறி வேலைக்கு அனுப்பினேன். மூன்றரை ஆண்டுகள் ராம நாயக்கன் வீட்டில் வேலை செய்தான். ராம நாயக்கனும் அவரது மருமகளும் உடலுறவில் ஈடுபட்டிருந்தபோது எனது மகன் பார்த்துள்ளான். இதை எங்கே தனது மகனிடம் கூறி விடுவானோ என்று அடித்துக் கொன்றுவிட்டு தூக்கு மாட்டி விட்டிருந்தனர்.''

''நான் நேரில் சென்று பார்த்தபோது, வீடெல்லாம் ரத்த காயங்கள் இருந்தன. நிச்சயம் எனது மகனை அடித்துக் கொலை செய்திருக்கிறார்கள் என்று தூசி காவல் நிலையத்தில் புகார் செய்தேன். சந்தேக மரணத்தின்படி வழக்குத் தொடர்ந்து விசாரித்தனர். ஆனால், குற்றவாளிகள் யாரும் கைது செய்யப்படவில்லை. நான் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தேன். நீதிமன்றம் கொலை வழக்காக 302, அய்.பி.சி. இன் கீழ் விசாரணை செய்ய காவல் துறைக்கு ஆணையிட்டது. ஆனால், இன்று வரை வழக்கின் விசாரணை நடைபெறவில்லை.''



“காஞ்சிபுரத்தில் மட்டும் ஆயிரக்கணக்கில் குழந்தைகள் வேலை செய்வதாகப் பல ஆண்டுகளாக செய்திகள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், இன்றுவரை யாரையும் தண்டித்ததாக செய்திகள் வரவில்லை.”



படிப்பகம்

www.padippakam.com

## பொது விசாரணையில் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் :

• பட்டு நெசவில் குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்த வேண்டும். • வாழ்வூதியம் வழங்கி வயது வந்தோரை மட்டும் வேலைக்கு அமர்த்த வேண்டும். • அனைத்துக் குழந்தைகளுக்கும் பனிரெண்டாம் வகுப்பு வரை தரமான, இலவச கட்டாயக் கல்வி தருவதை உறுதி செய்ய வேண்டும். • குழந்தைகளை வேலைக்கமர்த்தியுள்ள அனைத்து முதலாளிகளின் மீதும் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்புச் சட்டத்தின்படி சட்டபூர்வ நடவடிக்கை எடுத்திட வேண்டும். • 18 வயது வரையுள்ள எந்தக் குழந்தையையும், எந்தத் தொழிலிலும் ஈடுபடுத்துவதைத் தடை செய்திட வேண்டும். • குழந்தைப் பருவத்தையும், அவர்களின் ஆரோக்கியத்தையும் மறுக்கும் போக்கை நிறுத்த வேண்டும். • குழந்தைகளின் பங்கேற்பு உரிமைக்கும், வெளிப்படுத்தும் உரிமைக்கும் மதிப்பளித்திட வேண்டும். • குழந்தைகளின் விளையாடும் உரிமைக்கும், ஓய்வெடுத்துக் கொள்ளும் உரிமைக்கும் மதிப்பளித்திட வேண்டும். ■

தனக்கு நீதி வழங்க வேண்டுமென கண்ணீர் விட்டு அழுதார்.''

டாக்டர் அம்பேத்கரின் கூற்றுப்படி, எந்த நல்ல சட்டமாக இருந்தாலும், அதை நடைமுறைப்படுத்துவதில் தவறுகள் நேர்ந்தால், அச்சட்டம் பயனற்ற சட்டமாக மாறிவிடும். அந்த வகையில், 1986, குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புச் சட்டமும், இந்திய அரசியல் சாசனப் பிரிவு 45ம் இதற்கு மிகச் சரியாகவே பொருந்துகிறது.

குழந்தைத் தொழிலாளர்கள் கேட்பதெல்லாம், அரசு அதிகாரிகள் உதவி செய்யவில்லை என்றாலும் உபத்திரம் பொறுப்புள்ள அதிகாரிகளாக நடந்து கொள்ளுங்கள்' என்றுதானே கேட்கிறார்கள்.

பொது விசாரணையில், தொழிலாளர் நலத்துறை, காவல் துறை, முதலாளி சங்கத்தைச் சேர்ந்தவர்கள், தொழிற் சங்கத் தலைவர்கள் உரை நிகழ்த்தினர். இறுதியாக உரை நிகழ்த்திய நடுவர் நீதிபதி ஆர். ரத்தினசாமி, ''குழந்தைத் தொழிலாளர் சட்டங்களைக் குப்பையில் போட வேண்டும் என்று கூறுகிறார்கள். சட்டங்களைக் குப்பையில் போடலாம். ஆனால், குழந்தைகளைப் போட முடியாது. இதில் வலுவான திருத்தங்கள் தேவை. இச் சட்டத்தை நடைமுறைப்படுத்த தவறுப



செய்ய வேண்டாம் என்கிறார்கள். 'எங்களைப் போன்ற குழந்தைகளை நேசிக்க வேண்டாம், குழந்தைகளைக் கொஞ்சி மகிழ வேண்டாம், குழந்தைகள் தாக்கப்படும்போதும் கொல்லப்படும்போதும், வர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார்.

''குழந்தைகளைக் கொண்டுதான் இந்தத் தொழில் செய்யப்படுமானால், அந்தத் தொழிலே தேவையில்லை'' என்றார், டாக்டர் வி. வசந்திதேவி. புதிய புதிய தொழில் நுட்ப யுக்திகள் தோன்றிவிட்ட இத்தருணத்தில், இத் தொழிலில் மட்டும் ஏன் மாற்றத்தைக் கொண்டு வரக்கூடாது. இருட்டறையில் வேலை, 12 மணி நேர உழைப்பு, வயதிற் கேற்ற வளர்ச்சியில்லை, ஓய்வு நேரமில்லை என குழந்தைகள் வாக்கு மூலம் அளித்தார்கள். இதன் மூலம் குழந்தைகள் கொடுமைப்படுத்தப்படுவது உறுதியாகத் தெரிகிறது. அதற்கு அரசு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்'' என்றார்.

பெண் குழந்தைகளுக்கு நேரிடும் கொடுமைகளுக்கு அளவே இல்லை. தறியில், ஆண்கள் பக்கத்தில்தான் பெண் குழந்தைகள் அமர்ந்து வேலை செய்ய வேண்டும். 14 வயதில், பாலியல் கொடுமைகளுக்கும் சித்திரவதைகளுக்கும் ஆட்படும் பெண் குழந்தைகளின் மீது நடைபெறும் வன்முறைகள், வெளி வராத ஒன்றாகவே உள்ளது. சிறுமிகளும் பாலியல் வல்லுறவுக்கு ஆட்படுகின்ற கொடுமையான நிகழ்வுகளும் உண்டு. முதலாளிகளின் வீட்டு வேலைகளையும் சேர்த்தே செய்ய வேண்டிய கட்டாயம் இவர்களுக்கு.

அரசையும், அதிகாரிகளையும், சர்க்கஸ் கம்பி மீது நின்று சாதனை செய்யச் சொல்லவில்லை. அவர்கள் கையில் தரப்பட்டிருக்கிற துலாக்கோலை சாய்த்துப் பிடிக்காமல், மனிதர்களாக நடந்து கொள்ள வேண்டுமென்றுதான் சமூக அக்கறையுள்ளவர்கள் கேட்கிறார்கள். அவர்களுக்கு கல்வி புகட்டி ஆக்கப்பூர்வமான வழிகளுக்கும், வாழ்க்கைக்கும் இட்டுச் செல்லும்போதுதான் இந்த சமூகம் வளர்ச்சி பெறும். ●



படிப்பகம்

www.padippakam.com

# கவனமிருக்கட்டும்

■ ஞானப்பறை



பழங்குடிப் பெண்கள் நள்ளிரவில் தாங்கள் பயந்து ஊரைவிட்டு ஓடி ஒளிந்த சம்பவத்தை அழுது கொண்டே மாவட்ட வருவாய் அலுவலர் காலில் விழுந்து கூறுகின்றனர்

உங்கள் காதுகள்
படிப்புத் திமிறால்
அடைபட்டிருக்கின்றன
கல்வி உங்கள் கண்களை மூடிவிட்டது
அறிவின் நஞ்சு
கரைத்திருக்கிறது உங்கள் நெஞ்சங்களை.

எதற்காகப் படித்தீர்கள்?
அடிமைகளிடம்
அதிகாரத்தைக் காட்டவா?

நினைவில் கொள்ளுங்கள்
பணத்தை வீசிட
நீங்கள் வாங்கும் கல்வி
ஆயிரம் அம்பேத்கரால்
ஆனது

குளிரூட்டப்பட்ட
அலுவலகங்களிலிருந்து
வெளியே வாருங்கள்
எங்களை
உட்கார வைத்து
குறைகேட்க மறுத்தால்
கோமணக் குண்டிகளுடன் உங்கள்
எதிரில் அமர்வோம்

மனு கொடுப்பதற்கு
நாய் போல் நிற்க வைத்தால்
காற்றென நுழைவோம்

காலில் விழச்செய்தாலோ
கவனமிருக்கட்டும்
உங்கள் கால்கள்
எங்கள் கைகளின் பிடியிலிருக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# தலித் பொருளாதாரம் கட்டி எழுப்பப்பட வேண்டும்

■ நல்லான்



தலித் மக்கள் பசியால் செத்துப்போகும் அவலம் சென்ற ஆண்டிலிருந்து தொடர்கிறது. முன்பு, சாப்பிட சோறின்றி பள்ளி செல்லும் வழியில் சுருண்டு விழுந்து இறந்த சிறுவன் ஒரு தலித் சிறுவன். பசிக் கொடுமையாலும், பயிர்கள் கருகும் வேதனையின் துக்கத்தாலும் இதுவரை இறந்திருக்கும் எட்டு விவசாயிகளில் முதலில் பலியான சிலர் தலித்துகள்.

கடந்த ஆண்டு நவம்பரில் ஊத்தங்கரை அருகே நக்சல்பாரிகள் என்ற பெயரில் காவல் துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சிவா, அப்பகுதி தலித் மக்கள் சுயமரியாதையுடன் வாழ காரணமாய் இருந்தவர். நக்சல்பாரிகள் என்ற பெயரில் கைது செய்யப்பட்டு சிறையிலிருக்கும் பலர், வேலையில்லாத தலித் இளைஞர்கள். இப்படி வரும் செய்திகள் ஒவ்வொன்றையும் ஆய்ந்தால் பசியால் மடிவதும், வேலையின்மை, வறுமை ஆகியவற்றை எதிர்த்துக் கலகம் செய்வதும் தலித்துகளே என்பது தெரிய வரும்.

இந்த நிலைமை தமிழகத்தில் மட்டுமில்லை, இந்தியா முழுமைக்குமே பொதுவாக இருக்கிறது என்பது, இவ்வாண்டின் தொடக்கத்தில் சனவரி 4 அன்று அய்தராபாத்தில் நடைபெற்ற 'ஆசிய சமூக பொது மன்ற'த்தின் மாநாட்டுச் செய்திகளைப் படிக்கிறபோதும் புரிகின்றது. தனக்குத் தரப்படும் குறைந்த கூலியை உயர்த்தித் தரும்படி கேட்டதற்காக - ஆதிக்கச்சாதி நிலவுடைமையாளர்களால் தாக்கப்பட்டு, தன் இரு கால்களையும் இழந்த லட்சுமண் சிங், செயற்கைக் கால்களுடன் அந்த மாநாட்டிற்கு வந்திருந்தார்.

நேபாளத்திலிருந்து வந்திருந்த லட்சுமண் நேபாளி, ''இருநூற்று இருபது ரூபாய்க்கு இரண்டு கால் சராய்களை நான் தைக்கிறேன். இருநூற்று அய்ம்பது ரூபாய்க்கு சீன இறக்குமதி கால் சராய்கள் இரண்டு கிடைக்கின்றன. என்னால் வெளிநாட்டு நிறுவனங்களுடன் போட்டிப் போட முடியவில்லை. இது என்று மாறும்?'' என்று கேள்வி எழுப்பியிருக்கிறார்.

அதே மாநாட்டில் தாக்ரி என்கிற தலித் பெண் எழுப்பிய கேள்வி, இன்றைய எல்லா ஏழை தலித் மக்களின் கேள்வியாகவும் உள்ளது. ''வேலை இல்லை. டெல்லியின் தெருக்களில் பிச்சையெடுப்பதைத் தடை செய்து விட்டார்கள். வேலை செய்யவும் உரிமையில்லை. பிச்சையெடுக்கவும் உரிமையில்லை. வாழவாவது உரிமையுள்ளதா?'' இக்கேள்வி மனதை நொறுக்குகிறது.

தனியார் மயமாக்கல், உலக மயமாக்கல், தாராள



படிப்பகம்

மயமாக்கல் போன்ற கொள்கைகளாலும், மழை, ஆறுகளில் நீர்வரத்து ஆகியவை இல்லாமையாலும் இந்தியாவின் கிராமப் பொருளாதாரமே சிதைந்து போயுள்ளது. இந்தச் சிதைவுகளின் முதல் பலியாக தலித்துகள் உள்ளனர். ஆளும் கட்சியினரின் குரல்களே கூட வேதனையுடன் ஒலிக்கின்றன.

விவசாயிகள் பிச்சைக்காரர்களைப் போல் உணவுக்குக் கையேந்தி நிற்பதைக் கண்டு, மதுரை வள்ளியான்குன்றம் அ.தி.மு.க. பிரமுகர் எஸ். அம்பலவாணன், ''கிராம பொருளாதாரமே சீர்குலைந்து விட்டது. இதே நிலை தொடருமானால், தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை'' என்றிருக்கிறார். மனசாட்சியின் உறுத்தலில் வெளிவந்த அவ்வார்த்தைகள்,

ளாதாரம் போன்றது. வெற்றிடத்திலிருந்து ஒன்றைக் கட்டியெழுப்புவது போலவே, தலித்துகளின் பொருளாதாரமும் இனி கட்டி எழுப்பப்பட வேண்டியுள்ளது.

நாட்டிலும், மாநிலத்திலும் அய்ந்தில் ஒருவராக உள்ள தலித் மக்களில் சுமார் எண்பது விழுக்காட்டினர், வேளாண்மையையும் அதைச்சார்ந்த தொழில்களையும் நம்பியிருக்கும் கூலித் தொழிலாளர்கள். நாட்டில் இன்று இருக்கும் 30% வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களிலும், எந்த நேரமும் வறுமை கோட்டுக்குக் கீழே போய்விடும் சாத்தியக்கூறுகளுடன் வசிக்கும் 20% மக்களிலுமாக - சுமார் 50சதவிகிதத்தினரில் பெரும்பான்மையினர் தலித்துகளே. 1960களில் நாட்டின் பொருளாதாரப்

னத்துவத்துடனான போட்டியில் தலித்துகளின் பங்கேற்பு ஒன்றுமில்லை. பெரும் தொழில் போட்டியில் அவர்கள் போட்டியிட வணிக அறிவும், வாய்ப்புகளும், பயிற்சியும் என்று அவர்களிடம் எதுவுமே இல்லை.

நகர்ப்புறத்தைக் காட்டிலும் கிராமப்புறங்களில் உள்ளவர்கள்தான் தமது அன்றாட உணவுக்காக, தங்களின் வருவாயில் சுமார் 63 சதவிகிதத்தினை செலவு செய்கின்றனர். இவர்களின் உணவு நுகர்வு என்பது சென்ற புள்ளிவிவரப்படி, 15.3 கிலோவிலிருந்து இன்று ஒரு மாதத்துக்கு 13.4 கிலோவாக (தானிய நுகர்வு) குறைந்துள்ளது. நீரின்றி வேளாண்மை தடைபட்டுள்ள இடங்களில் இதுவும் கூட கிடைக்காததால், பட்டினிச் சாவுகள் நேர்கின்றன.

**❝ பட்டினிச் சாவுகளைத் தடுக்க இலவச மதிய உணவுத் திட்டம், வேலைக்கு உணவு போன்ற திட்டங்களை அரசு அறிவித்தாலும் அவற்றின் செயலாக்கங்கள் அதிருப்தியானதே ❞**

பட்டினிச் சாவுகளைத் தடுக்க இலவச மத்திய உணவு திட்டம், வேலைக்கு உணவு போன்ற திட்டங்களை அரசு அறிவித்தாலும் அவற்றின் செயலாக்கங்கள் அதிருப்தியானதே. அப்படியிருந்தும் மதிய உணவு வேண்டி 8.94

உண்மைகளாக மாறிக்கொண்டு வருகின்றன என்பது, கசப்பான மற்றொரு உண்மை.

இந்தியாவின் வறுமையை ஒழிக்க வேண்டும். வேலை வாய்ப்புகளைப் பெருக்க வேண்டும் என்றெல்லாம் பல்வேறு நோக்கங்களுடனும், இலக்குகளுடனும் 10ஆவது 5 ஆண்டுத் திட்டம் போடப்பட்டுள்ளது. அதையொட்டி தமிழகத்தில் போடப்பட்டுள்ள அய்ந்தாண்டுத் திட்டம், வாழ்வாதாரப் பாதுகாப்பு, உறைவிடப் பாதுகாப்பு, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான புதிய அணுகுமுறை உள்ளிட்ட 15 அம்சங்களைக் கொண்டுள்ளது.

வறுமையை நீக்குதல், தனி நபர் வருவாயை இரட்டிப்பாக்குதல், வேலை வாய்ப்பைப் பெருக்குதல், விவசாய மற்றும் தரிசு நிலங்களைத் தனியாருக்குத் தந்து விவசாயத்தை தோட்டக்கலை துறை மூலம் வாணிப பயிராக்குதல் போன்ற இலக்குகளும் அதில் உள்ளன. இந்தச் சூழ்நிலைகளில், தலித்துகளுக்கு எந்தெந்த அம்சங்கள் பயனுடையதாய் இருக்கும் என்பதையே நாம் தேடி களைப்புற வேண்டிய அவலச் சூழல் உள்ளது. தலித் பொருளாதாரம் என்ற ஒன்று, இல்லாத கனவுப் பொரு



பங்களிப்பில் பாதியளவை தந்த வேளாண்மை, இன்று வெறும் 17 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.

வேளாண்மையைச் சாராத தொழில்களின் பொருளாதாரப் பங்களிப்பு, இன்று 51 சதவிகிதமாக மாறியுள்ளது எனில், வேளாண்மையை மட்டுமே நம்பியிருக்கும் தலித் மக்கள் இன்று வாழ வழியின்றி நிர்கதியாய் நிற்கும் நிலை உருவாகியுள்ளது. இன்று வளர்ந்து வரும் தொழில் நுட்பம் மற்றும் நவீ

லட்சம் மக்கள் தமது பெயர்களைப் பதிந்துள்ளனர். சென்ற ஆண்டு பட்டினியால் இறந்த சிறுவனின் தந்தை, வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் குளம் தூர்வாரியும் - அதற்குரிய அரிசி தனக்குத் தரப்படவில்லை என்று கூறியிருக்கிறார். இந்திய உணவுக் கழகத்தின் மூலம் வழங்கப்படும் உணவு தானியங்கள், சுமார் 16 ஆண்டுகள் வரை கூட அடைவில் இருந்து வழங்கப்படுபவை. அத்தனை ஆண்டுகள்



படிப்பகம்

www.padippakam.com

இருப்பில் மக்கி புழுக்கும் அரிசி, ஒரு மனிதனின் பசியைப் போக்க உதவுவது அதிகாரிகளுக்குப் பிடிப்பதில்லை.

பசிக் கொடுமையினால் கிராமங்களை விட்டு நகரங்களுக்கு ஓடும் தலித்துகளை அங்கும் வேலையில்லா திண்டாட்டமே வரவேற்கிறது. விவசாய பரப்பு குறைந்ததாலும் மழை இல்லாததாலும், கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பு இல்லாமல் போகிறது என்றால் நகரில் வேறு காரணங்கள் வேலைவாய்ப்பின்மைக்குக் காரணமாய் இருக்கின்றன.

அக்காரணங்களை, 10ஆவது 5 ஆண்டுத் திட்ட அறிக்கையே கூறுகிறது: ''பொருளாதார வளர்ச்சி, பெண் கல்வி, தகவல் தொடர்பு வசதிகள் ஆகியவற்றால் 15 முதல் 60வரை வயதுள்ள உழைக்கும் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். வேலை தேடும் நிலை பெருகும்.'' ஆண்டுக்கு சராசரியாக 0.11 சதவிகிதம் என்கிற மந்தமான தொழில் வளர்ச்சிச் சூழலில், நகர மயமாக்கப்பட்ட பகுதிகளில் வேலை தேடும் ஒவ்வொரு 24 பேர்களிலும் ஒருவர்தான் வேலை பெறுவதாக தேசிய வேலைவாய்ப்பற்றோர் கணக்கெடுப்பு கூறுகிறது.

இப்படி வேலை பெறும் நபர் தலித்தாக இருக்கும் வாய்ப்பு மிகக் குறைவே. தலித்துகளில் வேலை வாய்ப்பற்றோர் மற்றவர்களைவிட மிக அதிகம் என்பது அறிக்கைகள் தரும் உண்மை. தமிழகத்தில் வேலையற்றோரின் 12.05%இல் தலித்துகளின் எண்ணிக்கை கணிசமானது.

இப்படியான நிலைமைகளில் தலித்துகள் தங்களின் பொருளாதார நிலைமையைப் பெருக்கிக் கொள்ள, தொலைநோக்குத் திட்டங்களை வலியுறுத்திப் பெற வேண்டியுள்ளது. தலித் மக்களுக்கென்று நிலங்களைப் பெறுதல்; அரசின் நலத்திட்டங்கள் ஒவ்வொன்றிலும் போதிய அளவு நிதியை கோரிப் பெறுதல்; அதை செலவழிக்கும் முறையைக் கண்காணித்தல்; தனியார் துறைகளில் இட ஒதுக்கீடு; வறுமையை ஒழிக்க குடும்ப நிதி மற்றும் உணவுப் பொருட்களை வழங்குதல், வேளாண்மை தொடர்பான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுதல். தொழில் முனையும் தலித்துகளுக்கு முன்னுரிமைகளும், சலுகைகளும் என்பன போன்ற அம்சங்களாகத் தொலைநோக்குத் திட்டங்களை சொல்லலாம்.

தமிழகத்தில் தரிசு நிலங்களைத் தனியாருக்கு குத்தகைக்கு விடுவதென முடிவெடுத்து செயல்படுத்த முனைந்துள்ளது அரசு. சுமார் 50 லட்சம் ஏக்கர் நிலங்கள் தனியாருக்குத் தரப்படுவதால், அப்பகுதி கூலித் தொழிலாளர்கள் வேலைதேடி இடம் பெயர்வார்கள். கால் நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் கிடைக்காமல் அழியும். அந்நிலங்களைதலித் மக்களுக்கு வழங்க வேண்டும் என்று பல அரசியல் அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன. இந்நிலங்களைதலித் மக்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும்.


அவற்றில் வேளாண்மை செய்ய கடனுதவி அளிக்கப்படவும் வேண்டும். சென்ற ஆண்டு மட்டும் மத்திய ஊரகத் துறை, தமிழக தரிசு நில மேம்பாட்டுக்கென ரூ. 231.25 லட்சம் நிதியுதவி அளித்துள்ளது. இவ்வளவு தொகையும் தலித் அல்லாத பெருநில விவசாயிகளுக்கே சென்று மேலும் விவசாயக் கூலி, முதலாளி ஆகியோரின் இடைவெளியையே அதிகமாக்கும்.

தலித்துகளுக்கு இருக்கின்ற சொற்பமான சாகுபடி நிலங்களுக்கு அரசின் தொடர்ந்த வேளாண்மைக் கடன்கள் உள்ளிட்ட உதவிகள் தேவை. இந்திய வேளாண் ஆய்வு நிறுவனத்தின் உதவி இயக்குநர் பி.எஸ். ஹன்ஸ்ரா, கிராமப்புற வேளாண்மை சீரமைப்புப் பற்றி கூறுகையில், 1979இல் தலித் மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கு தொடங்கப்பட்ட ஓ.ஆர்.பி. திட்டம் பற்றி சிறப்பாய் குறிப்பிடுகிறார்.

''தலித்துகள் இடையே விவசாயம் சார்ந்து இருக்கும் தொழில்களைப் பட்டியலிட்டு அந்தந்தப் பகுதிகளில் இருக்கும் தலித்துகள் வேளாண்மைத் தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளும் வகையில், ஓ.ஆர்.பி. திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பயிர் மேம்பாடு, பழத்தோட்டம், ஆடு, மாடுகள் மற்றும் மீன் வளர்ப்பு போன்ற அம்சங்களுடன் தலித்துகளின் சமூக, பொருளாதார, பண்பாட்டு அடிப்படைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டு செயல்படுத்தும் திட்டமாய் இது அமையும்'' என்கிறார் அவர். நவீன வேளாண் முறைகளால் மலடாகியிருக்கும் நிலங்களிலிருந்து தவித்துக் கொண்டிருக்கும் தலித் மற்றும் பிற விவசாயிகளுக்கு மரபையும், இயற்கை சார்ந்த அணுகுமுறையும் கொண்ட திட்ட செயலாக்கங்களே தேவை.

திட்டக் குழுவின் நிதியை போதிய அளவு அரசுகள் தலித்துகளுக்கு ஒதுக்கு

**❝ 5ஆவது திட்டக் குழுவின் தலித் நிதி ஒதுக்கீட்டு வரம்பு 35 ஆயிரம் கோடி. ஆனால், ஒதுக்கீடு சுமார் 1300 கோடிமட்டுமேயாகும். அத்திட்டக் குழுவில் தலித்துகளுக்கு ஒதுக்கப்பட்டதைக் காட்டிலும் மிருக நலன்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டது. ❞**






படிப்பகம்

வதில் சுணக்கம் காட்டுகின்றன. 5ஆவது திட்டக் குழுவின் தலித் நிதி ஒதுக்கீட்டு வரம்பு 35 ஆயிரம் கோடி. ஆனால், ஒதுக்கீடு சுமார் 1300 கோடிமட்டுமே யாகும். அத்திட்டக் குழுவில் தலித்து களுக்கு ஒதுக்கப்பட்டதைக் காட்டிலும் மிருக நலன்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டது. ஒவ்வொரு கிராமத் திற்கென்றும் ஒரு தலித் சூழல் நிதியை அமைப்பதும் தேவையாகிறது. நாடெங்கிலும் உள்ள 6.23 லட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்களில் தலித் மக்களின் சுய உதவிக் குழுக்களில் தலித் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கூடுதல் நிதி தேவை.

தனியார் துறைகளில் இடஒதுக்கீடு என்பதைத் தொடர்ந்து வலியுறுத்த வேண்டியுள்ளது. அரசின் சலுகைகளை அந்நிறுவனங்கள் கோரிப் பெறுவதால், இட ஒதுக்கீட்டை அரசின் சட்டப்படி அந்நிறுவனங்கள் வழங்க வேண்டியது கட்டாயம் போபால் பிரகடனமும், சென்னை பிரகடனமும், தலித் மற்றும் பழங்குடியினர் நலக்குழுவின் அறிக்கையும் இதை வலியுறுத்தினாலும் தனியார் நிறுவனங்களின் மவுனமும், அரசு தலைமை வழக்கறிஞர் மூலம் தெரிவித்துள்ள கருத்தும் இக்கோரிக்கைக்கு மாறாக உள்ளன.

வளர்ந்து வரும் தமிழகத் தொழில்களைப் பட்டியலிட்டால் உணவு பதப்படுத்துதல், துணியாலைகள், சிமென்ட், உரம், பட்டாசு, தோல், தீப்பெட்டி, மாட்டுத் தீவனம் தயாரிப்பு என்று பல தொழில்கள் அமைகின்றன. இந்தத் தொழில் துறைகளில் தலித் தொழில் முனைவோரின் பங்கேற்பு என்பது மிகக் குறைவு. இதற்கு நிதி இன்மையும் தொழில் திட்ட வரைவு இல்லாததும், தொழில் நடத்தப் போதிய இடம் மற்றும் பிற வசதிகள் இல்லாததும் காரணமாகலாம். கோவை மற்றும் ஈரோடு நகரங்களுக்கருகில் அமைந்துள்ள தொழிற்பேட்டைகளில் யாரும் கோராத காலியான 246 தொழிற் கூடங்களை, தலித் மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்கு ஒதுக்குவதாய் அரசு அண்மையில் அறிவித்துள்ளது.

இதற்கு முன் நிபந்தனையாக வணிகரீதியாக வெற்றியடையக் கூடிய ஒரு திட்ட வரைவை கேட்டுள்ளார்கள். தொழில் தொடங்க இருபது லட்சத்திலிருந்து ஒன்றரைக் கோடிவரை கடனுதவி அளிக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதை சிறந்த அறிவிப்பாகக் கருதினாலும் நடைமுறை சிக்கல்கள் அதிகம் உள்ளன. தொழில் தொடங்க குறைந்த பட்ச அடிப்படை



பி. கிரண் குமாரி

நிதி கூட இல்லாத தலித் தொழில் முனைவோர்தான் இருக்கிறார்கள். 1991இன் அகில இந்திய கடன் மற்றும் முதலீடு ஆய்வறிக்கையின்படி, ரூபாய் 20 ஆயிரத்துக்கும் குறைவானவர்கள் தங்கள் தொழில் முதலீட்டுக்கு நிறுவனங்களையும் அரசின் மானியங்களையுமே நம்பியிருக்கின்றனர்.

ஆனால், அவர்களுக்குக் கிடைக்கும் நிதியுதவியோ 35லிருந்து 37 சதவிகிதமாகவே இருக்கிறது. இதுவே, அதிக உடைமையுடையவர்களின் கடன் பெறும் சதவிகிதம், 70 சதவிகிதம் என்று உள்ளது.

இது, பொதுத்துறை மற்றும் தனியார் வங்கிகளும், அரசும் தலித் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ளோருக்குக் காட்டும் பாரபட்சமாகும். பெண் தொழில் முனைவோருக்கென்று தனியான தொழிற்பேட்டைகள் அமைக்கும் திட்டமிருப்பதுபோல, தலித் தொழில் முனைவோருக்கென நாடெங்கும் தனியான தொழிற்பேட்டைகளோ, ஏற்கனவே இருக்கும் தொழிற்பேட்டைகளில் ஒதுக்கீடுகளோ வேண்டும். கூடவே ஏராளமான நிதியுதவிக்கென தனியார் வங்கிகள் அரசினால் அறிவுறுத்தப்படுவது அவசியம். உள்நாட்டு வங்கிக் கடன்களில் பொதுத்துறை வங்கிகள் நலிவடைந்த பிரிவினருக்கு கடன் வழங்க இலக்காகக் கொண்டுள்ள 10 சதவிகிதத்தில், 7.30 சதவிகிதத்தைப் பூர்த்தி செய்துள்ளன. ஆனால், தனியார் வங்கிகளிலோ இது வெறும் 1.82 சதவிகிதமாகவே உள்ளது.

அரசின் 'சொர்ண ஜெயந்தி' திட்டத்தின் கீழ் சுய வேலை வாய்ப்புக்கென கடன் உதவி பெற்ற (2001 - 2002இல்) தலித் பழங்குடிகள் 43.49% தொழில்களுக்காக வழங்கப்படும் வங்கிக் கடன்களிலோ அதே ஆண்டில் 24.51% தாழ்த்தப்பட்ட / பழங்குடியினரே கடன் உதவியைப் பெற்றுள்ளனர். தொழில் வளர்ச்சிப் போட்டியில் தலித்துகளும் பங்கேற்க, வங்கிகளின் கடன் உதவி பெருமளவில் உதவும்.

தலித்துகளின் பொருளாதாரம் பெருகும் போதுதான் தனிநபர் வருவாய் இருமடங்காகும். இந்த இலக்கை அரசாலும் அடைய முடியும் என்பதை நாம் கூறத் தேவையில்லை. (தமிழகத்தின் தனிநபர் வருவாய் 12,504) இந்திய அளவில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருக்கும் தலித்துகளின் தனிநபர் செலவிடும் சக்தி ஆண்டொன்றுக்கு ரூ.3,268 என்றே இன்னும் உள்ளது. தலித்துகள் பொருளாதாரத்தில் நிலைபெறத் தங்கள் தொழில் வாய்ப்புகளைத் தேடிப் போராட வேண்டும். அரசும் ஆதிக்க சக்தியினரும் தமது 'கொடியங்குள' மனப்பான்மையைக் கைவிட வேண்டும். ●

புகைப்படங்கள் : குட்டி ரேவதி




www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# கட்டுடைக்கிறார்கள் கடவுள்கள்

■ வே. மதிமாறன்



பாலியல் உறவுகள் பற்றி பகிரங்கமாக எழுதி கலகக் குரலை (முக்கல் - முனகலோ) ஏற்படுத்தி கட்டுடைப்பது; ஆண்-பெண் பிறப்பு உறுப்புகளைப் போற்ற வேண்டும். உடலைக் குறித்து உயர் மதிப்பீடு வேண்டும். அப்போதுதான் சமூக அக்கறை கூடுதல் வலுப்பெறும்.''

''ஓரினச் சேர்க்கை என்பது ஆணாதிக்கத்தைத் தகர்ப்பது. அது பெண்ணுரிமை அல்லது ஆணின் உரிமை'' இப்படி 'மனிதர்களின் ஒட்டு மொத்தப் பிரச்சனையும் இடுப்புக்குக் கீழேதான் இருக்கிறது' என்பது மாதிரியான போக்கு - இன்றைய இலக்கிய, தத்துவ(?) சூழலில் நவீனத்துவத்திற்கும் பிந்தைய நவீனத்துவமாக இன்னும் வெவ்வேறு பெயர்களில் விளக்கப்படுகிறது.

இந்த உறுப்புகளின் உறவு குறித்தும், உறுப்புகளின் நலன் விசாரிப்புக் குறித்தும் தீவிரமாக எழுதுகிற இந்த 'டிகிரி' எழுத்தாளர்கள் - சரோஜாதேவியின் பிழைப்பைக் கெடுத்து, 'பருவகாலம்', 'விருந்து' இதழ்களின் விற்பனையை பாதித்திருக்கிறார்கள். ஆம், சரோஜா தேவி, 'பருவகாலம்', 'விருந்து' - இவைகளின் இலக்கிய வடிவமே இந்த டிகிரி எழுத்தாளர்கள். சரோஜாதேவியும், 'விருந்து'ம் தடை செய்யப்பட்ட தலைமறைவு இயக்கப் பத்திரிகைகள்; எழுத்தாளர்கள் (UG Movement) பிந்தைய நவீனத்துவ டிகிரி எழுத்தாளர்கள்; பத்திரிகைகள், வெகுஜன இயக்கப் பிரச்சார பீரங்கிகள்!

சரி. இப்படி கட்டுடைத்துக் கலகம் செய்யும் எழுத்தை, தத்துவத்தை (?) மதங்கள் எப்படிப் பார்க்கின்றன என்பதைக் கொஞ்சம் பார்ப்போம். (தத்துவத்திற்கு முன்னால் கேள்விக்குறி போட்டிருப்பது, 'தத்துவங்களை எல்லாம் கேள்விக்குட்படுத்த வேண்டும்' என்ற பின் நவீனத்துவ பாணியில் அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக!)

**இஸ்லாம் :** இந்த பிந்தைய நவீனத்துவத்தை அல்லது வேறு, வேறு பெயர்களில் அழைக்கப்படுகிற இந்த ஆபாச தத்துவத்தை(?) தனது இடது காலால் எட்டி உதைக்கிறது.

**கிறித்துவம் :** கட்டுடைத்தலிடம் பழைய ஏற்பாடு கொஞ்சம் பாசம் காட்டினாலும், புதிய ஏற்பாடு 'தூரப்போ சாத்தானே' என்று விரட்டி அடிக்கிறது.

**இந்து மதம்:** கை கொட்டி சிரிக்கிறது. 'அடப்பாவிகளா, பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எங்க வேதத்திலேயும், புராணத்திலேயும் நாங்க கட்டுடைச்சதில பாதிகூட நீங்க உடைக்கல, அதுக்குள்ளே ரொம்ப பீத்திக்கிறீங்களே?'

''எங்க பாஞ்சாலி அய்ந்து கணவன்களோட ஒரே வீட்டில் வாழ்ந்தாள்; எங்க பிரம்மா மானோடே உறவு கொண்டார், மகளோடு உறவு கொண்டார்; மாமனும் - மச்சானுமான சிவனும் - திருமாலும் செய்யாதஓரினச் சேர்க்கையா நீங்க செஞ்சிடப் போறீங்க? அவுங்க 'ஓமோ செக்ஸ்'ல ஈடுபட்டு 'அய்யப்பன்'னு ஒரு சக்தி மிக்க புள்ளையையே பெத்தவங்க.

சிவனும்-பார்வதியும் ஆண்-பெண் குறிகளாக மாறி இன்னும் சிவலிங்கமாக இருந்து மக்களுக்கு அருள் பாலிக்கிறாங்க. எங்க இயற்கை நாயனாரை, ஊரே கூடி உதைக்க வந்தபோதும் அஞ்சாமல், தன் பொண்டாட்டிய சிவனடியாருக்கு கூட்டிக் கொடுத்தாரு.

கொழந்தையிலேயே கொய்யாப் பழமான திருஞான சம்பந்தரு, 'கடவுள் இல்லைன்னு சொல்றவன் பொண்டாட்டிக் கூட நான் படுக்கனும்ம்னு' அற்புதமான தமிழால், ரொம்ப நாகரீகமாக பாட்டெழுதினாறு.

இன்னும் கோயில் சிற்பங்களில் உடல் உறவுக் காட்சிகளை தத்ரூபமா சித்தரிச்சி, எங்க புனிதத்தை நாங்களே உடைச்சிருக்கோம். உலகத்தில வேறு எந்த மதக் கோயி



படிப்பகம்

லிலாவது இதை உங்களால பார்க்க முடியுமா? நீங்கள் என்ன பெரிய மஞ்சள் கலர் எழுத்தாளர்? எங்க ஆண்டாளு, 'என் உடல் முழுதும் திருமாலுக்கே' என பச்சைக் 'கலர்ல' பாட்டெழுதி இருக்காங்க.

இப்படி மிகப் பழமை வாய்ந்த கலை, இலக்கியத்துக்கு வாரிசா இருக்கிற நீங்க, எங்கள இருட்டடிப்புப் பண்ணிட்டு, எங்கோ இருக்கிற வெள்ளை கிறிஸ்தவனுங்களோட பேரை எல்லாம் சொல்லி, ரொம்ப புதுசு மாதிரி பிந்தைய நவீனத்துவம்னு பொய் சொல்லி இந்து மதப் பெருமைகளை இருட்டடிப்பு செய் றீங்களே, நியாயமா இது?'' என்ற உரிமையோடு கோபப்படுகிறது இந்து மதம்.


ஆம். வேதத்தின் - பார்ப்பனீயத்தின் இந்த ஆபாசக் குவியலையும், ஒழுக்கக் கேட்டையும் கண்டித்து, புத்தர் ஒழுக்கத்தையும், நன்னடத்தையையும் உயர்த்திப் பிடித்தார். அவர் வழி வந்த டாக்டர் அம்பேத்கரும் தலித் மக்களுக்கு கட்டளைகளாக, ஒழுக்கத்தையும் - தூய்மையையும் வலியுறுத்தினார்.

கிராமங்களில் ஜாதி இந்துக்களின் முன்னால் வெள்ளையும் சொள்ளையுமாக தலித் மக்கள் போவதே, ஜாதி இந்துக்களின் ஜாதி திமிர்த்தனத்தை உடைப்பதாக இருக்கிறது. தேநீர்க் கடையில்தான் இரட்டை டம்ளர் முறை இருக்கிறது. சாராயக் கடையில் சகஜநிலைதான். கல்யாணத்திற்குதான் ஜாதி பார்க்கிறார்கள். கள்ளக் காதலுக்கு ஜாதி பார்ப்பதில்லை. சமூகம் எதையெல்லாம் கவுரவம் என்று கருதுகிறதோ, அங்கெல்லாம் தலித் மக்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. சமூகம் எதையெல்லாம் அகவுரவம் என்று கருதுகிறதோ அங்கெல்லாம் தலித் மக்களுக்கே முன்னுரிமை அளிக்கிறது. சாக்கடையை சுத்தப்படுத்துதல் போன்ற 'அரசு உத்தியோகத்திற்கு' தலித் மக்களைத் தவிர வேறு யாரும் விண்ணப்பிப்பதுகூட இல்லை என்பதை கவனிக்க வேண்டும்.

இந்த சமூகக் கட்டுகளை உடைத்துக் கொண்டு, தலித் மக்கள் உரிமைகளோடு எழும்போதே - 'தன் கை மீறிப் போகிறார்கள்' என்கிற பொறாமையே, வெறுப்பே, இயலாமையாகமாறி கோபமாக ஜாதி இந்துக்களிடம் வெளிப்படுகிறது. இவற்றோடு, டாக்டர் அம்பேத்கர் சொன்ன 'தூய்மை' என்கிற சொல்லைப் பொருத்திப் பார்த்தால், அது எவ்வளவு அர்த்தமுள்ள வலுவான சொல்லென்று விளங்கும்.

தந்தை பெரியாரும், பக்திக்கு எதிரான நிலையில் ஒழுக்கத்தை நிறுத்தி, 'ஒரு மனிதனுக்கு பக்தி முக்கியமா? ஒழுக்கம் முக்கியமா? என்பதோடு பக்தி, தனிமனித, சமூக ஒழுக்கத்திற்கு எதிரானது என்று நிறுவினார்.

முற்போக்குப் போர்வையில், சில நேரங்களில் மார்க்சியத்தின் பேரிலும் நடக்கிற இந்த ஆபாசக் கூத்தை, தலைவர் லெனின் கடுமையாகக் கண்டிக்கிறார், கிளாரா ஜெட்கினுடன் நடந்த உரையாடலில்:



லெனின்

''ஆண்-பெண் உறவுகள் பற்றி வியன்னாவிலுள்ள ஒரு கம்யூனிஸ்ட் நூலாசிரியை எழுதியுள்ள புத்தகம், இங்கு மிகவும் பிரபலமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. அந்தப் புத்தகம் எத்தகைய குப்பைக் கூளம்!

இந்த நூலில், ப்ராய்டின் சித்தாந்தம் பற்றிக் குறிப்பிட்டிருப்பது அறிவியல் மணம் இருப்பதாகக் காட்டி ஏமாற்றவேயாகும். இந்த நூல் ஒரு கேவலமான குப்பையாகவே இருக்கிறது. ப்ராய்டின் சித்தாந்தம், இப்பொழுது ஒரு புது மோகம் போல இருக்கிறது. முதலாளித்துவ சமூகத்தின் சாணிக்குவியலிலிருந்து இத்தனை செழிப்பாக முளைத்தெழுந்துள்ள - இங்கே குறிப்பிட்ட நூலிலும், இதைப்போன்ற நூல்கள், கட்டுரைகள், அறிவியல் பத்திரிகைகள் இவற்றில் வெளியிடப்பட்டுள்ள ஆண்-பெண் உறவு பற்றிய கொள்கைகள் பற்றியும் எனக்கு நம்பிக்கை இல்லை.

இந்தியப் பக்கிரி ஒருவன் தனது தொப்புளைப் பற்றியே தன் சுயநலத்தை நினைத்துக் கொண்டிருப்பது போல, எப்பொழுது பார்த்தாலும் ஆண் - பெண் உறவு பற்றிய பிரச்சினைகளில் இடைவிடாமல் மூழ்கிக் கிடப்பவர்களையும் நான் நம்பவில்லை. இவ்வாறு ஆண்-பெண் உறவிலேயே அளவுக்கு மீறி அபரிதமாகக் காணும் சித்தாந்தங்கள், பெரும்பாலும் உத்தேசங்கள் மட்டுமே. பெரும்பாலும் எதேச்சதிகாரமான போக்குகளே. இவை எல்லாம் சொந்தத் தேவையிலிருந்து எழுபவையே யாகும். முதலாளித்துவ ஒழுக்க முறையின் முன்னால், தனது அசாதாரணமான அளவு மீறிய ஆண்-பெண் உறவு வாழ்க்கையை நியாயப்படுத்துவதற்கும், தன்னோடு பிறர் சகிப்புத் தன்மை காட்ட வேண்டும் என்று கோரியுமே இவற்றை எழுப்புகின்றனர்.

ஆண்-பெண் உறவுகள் பற்றிய பிரச்சனைகளில் ஆழ முழுகிக்கிடப்பது எத்தனை வெறுக்கத்தக்கதாக இருக்கிறதோ, அதே போல முதலாளித்துவ ஒழுக்க முறைக்குத் திரைகட்டி



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

மதிப்புக் கொடுக்க முயல்வதும் வெறுக்கத்தக்கதாகவே இருக்கிறது. 'இந்த முயற்சி கலகமயமானது; புரட்சிகரமானது' என்று வெளித்தோற்றத்தில் மிகையாகக் காணப்பட்டாலும், இறுதியாக இது முற்றிலும் முதலாளித்துவப் போக்கில் செல்வதாகவே அமையும். இந்தப் பொழுதுபோக்கு வேலையை சிறப்பாக அறிவு ஜீவிகளும் அவர்களது வர்க்கத்தோடு ஒட்டிய உறவுகள் வட்டத்தில் உள்ளவர்களுமே மிகவும் விரும்புகிறார்கள்.

பிரதானமான சமூகப்பிரச்சினையில் ஒரு பகுதியான ஆண்-பெண் உறவு, விவாகம் முதலிய பிரச்சினைகள் என்று மீண்டும் எடுத்துக் கொள்ள முடியாத ஒரு நிலைமையில்தான் இது கொண்டுபோய் விடும். இதற்கு மாறாக, மிகப் பெரிய சமூகப் பிரச்சினை ஆண்-பெண் உறவுப் பிரச்சினையின் ஒரு பகுதியாகி அதன் அனுபந்தமாகக் கருதப்படும் நிலை ஏற்பட ஏதுவாகும்.

“இந்த முயற்சி கலகமயமானது; புரட்சிகரமானது' என்று வெளித்தோற்றத்தில் மிகையாகக் காணப்பட்டாலும், இறுதியாக இது முற்றிலும் முதலாளித்துவப் போக்கில் செல்வதாகவே அமையும்.”

பிரதானமான பிரச்சனை பின்னணிக்குத் தள்ளப்பட்டு, இரண்டாந்தரப் பிரச்சினையாகிறது. இதனால் இந்தப் பிரச்சினையில் தெளிவு ஏற்படாமல் தவிப்பது மட்டுமல்ல, பொதுவாக சிந்தனையையே மூட்டமிட்டு மறைப்பதுடன் தொழிலாளி மற்றும் பெண்களின் வர்க்க பேதத்தையும் ஒளித்து மறைக்கும் நிலை நேருகிறது.

மேலும், ஒரு கருத்தை இங்கே குறிப்பிடுவது மிகையாக இருக்காது. ஒவ்வொன்றுக்கும் உரிய காலமுண்டு என்று அறிவாளியான சாலமன் நமக்குக் கூறியிருக்கிறார். தொழிலாளி மாதக்கணக்கில் ஒரேயடியாக காதல் செய்வது எப்படி? காதலிக்கப்படுவது எப்படி? மணக்கக் கேட்பது எப்படி? மணக்கும்படி கேட்கப்படுவது எப்படி? என்ற விஷயங்களில் மும்முரமாக இறங்கச் செய்வதற்கு இதுதான் நேரமா?

முதலாளித்துவ சாயம் பூசிய முட்டைகளிலிருந்து வெளிவரும் மஞ்சள் மூக்கு குஞ்சுகள் மெத்த கெட்டிக்காரர்கள்தான். நமது வழிகளைத் திருத்திக் கொள்ளாமல் இந்த நிலைமையை ஏற்க வேண்டியது அவசியமே. ஆண்-பெண் உறவு பற்றிய நவீன விளக்கத்தின் விளைவாகவும், அதில் அளவு மீறிய அக்கறை காட்டியதாலும் இளைஞரியக்கமும் பாதிக்கப்பட்டுள்ளது.

இளைஞர்களிடம் துறவியின் புலனடக்கம் பற்றியும், குப்பைத்தனமான முதலாளித்துவ ஒழுக்க முறையின் புனிதத் தன்மையைப் பற்றியும் போதனை செய்வதை விடப் பொய்யான வேலை வேறு எதுவும் இல்லை. என்றாலும், இந்த நாட்களில் ஆண்-பெண் உறவுப்பிரச்சினைகள் இயற்கையான காரணங்களால் வலுக்கட்டாயமாக முன்னணிக்குத் தள்ளப்பட்டுள்ளன. இது, இளைஞர் மனநிலையின் நடு அம்சமாக ஆகி வருகின்றன. இது நல்லதுதான் என்று ஒருவர் கூறுவது அரிது. இதன் விளைவுகள் சில நேரங்களில் படுநாசகரமானவையாக முடியும்.

ஆண்-பெண் வாழ்க்கை உறவு பற்றிய பிரச்சினைகளில் இளைஞர்களின் மாறுபட்ட



போக்குகள், கொள்கையின் பேரிலுள்ள கோட்பாடு விஷயத்தை அடிப்படையாக்கியே எழுந்துள்ளன. பலர் தாம் எடுத்துக் கொண்டுள்ள நிலைமை 'புரட்சிகரமானவை' 'கம்யூனிஸ்ட் நிலைமை' என்று கூறுகிறார்கள். இது அப்படித்தான் என்று மனப்பூர்வமாக நம்புகிறார்கள்.

நான் ஒரு கிழவன். இதை என் மனது ஏற்கவில்லை. நான் எக்காரணம் கொண்டும் ஒரு துக்கம் நிறைந்த துறவியாக இல்லை. என்றாலும், இளைஞர்களின் இந்தப் 'புதிய ஆண்-பெண் வாழ்க்கை' என்று அடிக்கடி அழைக்கப்படும் இந்த விஷயத்தை, வயது வந்தோரும் அடிக்கடி சுட்டிக்காட்டுவது முற்றிலுமாக முதலாளித்துவப் போக்குள்ளதாகவே எனக்குத் தோன்றுகிறது.

கம்யூனிஸ்டுகளாகிய நாம் புரிந்து கொண்டுள்ள வகையில் சுதந்திரமான காதலின் சிறு சுவடு கூட இதில் இல்லை. கம்யூனிஸ்ட் சமூகத்தில் ஒருவர் தமது ஆண்-பெண் உறவு இன்பத்தை அனுபவிப்பதும், காதலுக்காக ஏங்குவதும், எல்லாம் ஒரு டம்ளர் தண்ணீரைக் குடிப்பது போல சாதாரணமானது. சில்லறை வேலை என்று பெயர் போன கொள்கை பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். நமது இளைஞர்கள் இந்த 'ஒரு கிளாஸ் தண்ணீர்' கொள்கை பற்றிப் பித்தேறி - முழு பித்தேறி அலைகிறார்கள்.

இது, பல இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் அழிவைத் தந்திருக்கிறது. இதனை வலியுறுத்துகிறவர்கள், இதுவும் மார்க்சிய சித்தாந்தம் என்று கூறுகின்றனர். சமூகத்திலுள்ள சித்தாந்த ரீதியான சகல போக்குகளையும் மாறுதல்களையும் நேரடியாக தவறிவிடாமல், ஒரே ஒரு அடிப்படையில், பொருளாதார அடிப்படையில் இருப்பதாகக் கூறும் அத்தகைய மார்க்சியத்திற்கு நல்லது நடக்கட்டும். இது அத்தனை எளிதான விஷயமல்ல. இந்த உண்மையை, வரலாற்று இயல் பொருள் முதல் வாதம் தொடர்பான உண்மையை, நீண்ட நாட்களுக்கு முன்னால் பிரடரிக் ஏங்கெல்ஸ் நிரூபித்திருக்கிறார்.

பெயர்போனதான 'ஒரு கிளாஸ் தண்ணீர்' கொள்கையை நான் மார்க்சிஸ்ட் கொள்கை என்று கருதவில்லை. மாறாக, அது சமூக விரோதமானது என்று நினைக்கிறேன். ஆண்-பெண் வாழ்க்கையில் முக்கியமானது, இயற்கை உதவியுள்ள விஷயங்கள் மட்டுமல்ல. மேல் மட்டத்திலாயினும் சரி கீழ்மட்டத்திலாயினும் சரி, கலாச்சாரத்திலிருந்து வந்த கலவைப் பண்புகளும் முக்கியமானதாகின்றன. ஏங்கெல்ஸ் தனது 'குடும்பத்தின் தொடக்கம்' என்ற நூலில், சாதாரணமான ஆண் - பெண் உறவுக்கான ஆவல் தனிப்பட்டவர்களது ஆண் - பெண் காதலாக வளர்ச்சியடைந்து, உயர்ந்த தரத்தை எய்தியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

ஆண் - பெண் இரு சாராரிடையே உள்ள உறவுகள், வெறும் சமூகப் பொருளாதாரத்திற்கும் உடலின் தேவைக்கும் இடையே உள்ள விளையாட்டு மட்டுமல்ல. இந்த உறவுகளில் ஏற்படும் மாறுதல்களை, தத்துவத்துடன் உள்ள தொடர்பிலிருந்து தனிமைப்படுத்தி சமூகத்தின் பொருளாதார அடிப்படையுடன் மட்டும் பொருத்துவது மார்க்சியமாகாது. அது பகுத்தறிவு வாதமாகும். தாகத்தை தணிக்க வேண்டியதுதான். ஆனால், எளிய மனிதன் சாதாரணமாக உள்ள நிலையில் சாக்கடைக்குள் படுத்து - ஒரு சேற்றுமடைத் தண்ணீரைக் குடிப்பானா? பலர் எச்சிற்படுத்திக் குடித்த கிளாசிலிருந்து குடிக்க விரும்புவானா?

சமூக அம்சம்தான் இதில் மிக மிக முக்கியமானது. தண்ணீர் குடிப்பது என்பது தனி ஒருவரின் விஷயம். ஆனால், காதல் செய்வதில் இரண்டு பேர் பங்கு கொள்கின்றனர். மூன்றாவது புது உயிர் பிறக்கிறது. இங்குதான் சமூக நலவுரிமை, கூட்டான அமைப்போடு உள்ள கடமை இவை எல்லாம் எழுகின்றன.

'விடுதலை பெற்ற காதல்' என்ற ஆழமான முத்திரையுடன் காணப்பட்ட பொழுதும் 'ஒரு கிளாஸ் தண்ணீர்' கொள்கையை ஒரு கம்யூனிஸ்ட் என்ற முறையில் நான் விரும்பவில்லை. மேலும் இது புதிதுமல்ல, கம்யூனிசம் அடிப்படையானதுமல்ல.''

*கிளாரா ஜெட்கினின் 'லெனின் நினைவுக் குறிப்புகள்' என்ற நூலிலிருந்து.*



படிப்பகம்

www.padippakam.com



## கோவையில்

# உலக மகளிர் நாள்



பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக
மாபெரும் அணிவகுப்பு

▪

தலித் முன்னணியினர், முற்போக்குச்
சிந்தனையாளர்கள் பங்குபெறுகின்ற
பெண்களின் சமுக விடுதலைக்காக முரசொலிக்கும்
எழுச்சிமிகு கருத்தரங்கம்

▪

அனைவரையும் அழைக்கிறோம்.

இடம் : நல்லாயன் திருமண மண்டபம்
(வின்சன்ட் சாலை, டவுன் ஹால்)

நாள் : 08.03.2003

நேரம் : சனிக்கிழமை காலை 10 மணி முதல்
மாலை 6 மணிவரை



**அ. தீபா**
மகளிர் அணி செயலாளர்

**ஆதித் தமிழர் பேரவை**

---

# தமிழினி

ப தி ப் ப க ம்

எண். 342, டி.டி.கே. சாலை
சென்னை - 600 014

**ராஜ்கவுதமன் :**

| | |
|---|---|
| சிலுவை ராஜ் சரித்திரம் - நாவல் | ரூ. 260 |
| கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக - ஆய்வு நூல் | ரூ. 60 |
| புதுமைப்பித்தன் எனும் பிரம்மராக்ஷஸ் - ஆய்வு நூல் | ரூ. 50 |

**அழகிய பெரியவன்**

| | |
|---|---|
| தகப்பன் கொடி - நாவல் | ரூ. 65 |
| தீட்டு - சிறுகதைகள் | ரூ. 50 |
| நீ நிகழ்ந்தபோது - கவிதைகள் | ரூ. 15 |

**என்.டி. ராஜ்குமார்**

| | |
|---|---|
| ரத்த சந்தனப்பாவை - கவிதைகள் | ரூ. 20 |

**நிர்மால்யா**

| | |
|---|---|
| கேரளத்தின் முதல் தலித் போராளி அய்யன்காளி - வரலாறு | ரூ. 65 |

படிப்பகம்

www.padippakam.com

# அண்ணல் அம்பேத்கரின் இறுதி நாட்கள்

■ நானக்சந்த் ரட்டு



பத்து ஆண்டுகளாகவே பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கரின் உடல் நல்ல நிலையில் இல்லை. சிறிது காலம் குடல் அழற்சியினாலும், ரத்தக் கொதிப்பினாலும் வேதனைப்பட்டார். ஆண்டுகள் செல்லச் செல்ல, அவர் உடல் நிலையை மிகவும் பாதிக்கும் வகையில் நீரிழிவு நோயும் உருவாகியது. ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அவரின் நீண்ட நாள் போராட்டங்களும், வேதனைகளும், ஓய்வில்லாத தொடர்ச்சியான படிப்பும், எழுத்தும் அவரின் உடல் நிலையை வெகுவாகப் பாதித்தன.

டாக்டர் அம்பேத்கர் நடத்திய இயக்கத்தை அவருக்குப் பிறகு வழி நடத்திச் செல்லுவார்கள் என்று அவர் நம்பியிருந்த துணை நிலைத் தலைவர்களின் நம்பிக்கையற்ற செயல்களினாலும், அவர்களுக்குள் தலைமைப் பதவிக்கு நடந்த போட்டிகளாலும், அவரது போராட்டங்களினால் கிடைத்த அரசு உயர் பதவிகளில் அமர்ந்தவர்களின் வெட்கக்கேடான நடத்தைகளினாலும் அவர் மனம் உடைந்து போனார். ஒடுக்கப்பட்ட மக்களைப் பற்றி சிறிதும் அக்கறையின்றி, அவரது அமைப்பிலிருந்து பிரிந்து சென்றவர்களின் நடத்தைகளினால் - அவரது உடல்நிலைக் குறைவு இன்னும் தீவிரமடைந்தது.

அவரது டாக்டர் பரிந்துரைத்த மருந்து - மாத்திரைகள், எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. சனவரி 1955 முதல் அவரது உடல்நிலை கவலையை அளித்தது. அவர் எடை குறைந்து, தளர்ச்சியுற்று, சுருங்கி காணப்பட்டார். அவரது கோடை மற்றும் பனிக் கால உடைகள், இப்போது அவருக்குப் பெரிதாக இருந்ததால் சுருக்கி தைக்கப்பட்டன. அவரது கம்பீரமான உடம்பை அவரது மெல்லிய கால்கள் தாங்க முடியாமல் போனதால், உடம்பின் எடை குறைந்தது.

அவரது மிகப் பெரிய நூலகத்தில் நடமாடும் போதும், தோட்டத்தில் உலாவும்போதும், காரில் ஏறி

**"என் மக்களுக்காக நான் சாதித்தவைகளெல்லாம், தனி ஆளாக நின்று கொடுமையான துயரங்களையும் முடிவற்ற சிரமங்களையும் கடந்து எல்லா பக்கங்களிலிருந்தும், குறிப்பாக இந்து பத்திரிகை களிடமிருந்து வந்த அவதூறுகளுக்கு எதிராகவும், என் எதிரிகளுக்கெதிராகவும் என் வாழ்நாளெல்லாம் போராடிப் பெற்றவையே. என் வாழ்நாளின் இறுதிவரை ஒடுக்கப்பட்ட எனது சகோதரர்களுக்காகவும், இந்நாட்டிற்காகவும் எனது பணியைத் தொடர்வேன்."**



படிப்பகம்

www.padippakam.com

அமரவும், இறங்கவும், நாடாளுமன்றத்திற்கும், வேறு எங்கேயும் செல்வதற்கும், குளிப்பதற்கும், படுக்கைக்குச் செல்வதற்கும், எழுவதற்கும், உடையணிந்து கொள்வதற்கும் அவருக்கு மற்றவரின் உதவி தேவைப்பட்டது. சில சமயங்களில், சாப்பிட மனமில்லாமல் அவர் படுக்கையில் படுத்திருப்பார். அப்போது அவருக்கு நான் உதவ வேண்டியிருந்தது.

டாக்டர் அம்பேத்கரின் மகிழ்ச்சியற்ற வாழ்நிலை, ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்தது. அவ்வப்போது அவர் அழுவது, எனக்கு மிகப்பெரும் வேதனையாக இருந்தது. அவரது அழுகைக்கான காரணத்தை அறிய நான் முயற்சித்துக் கொண்டிருந்தேன். எதிர்கொள்ள முடியாத எரிமலையின் சீற்றம் போன்ற அவரது கோபத்திற்குப் பயந்து நான் அதுபற்றி கேட்கத் தயங்கினேன்.

சூலை 30 அன்று, என் அலுவலகத்திலிருந்து சற்று முன்னதாகவே அம்பேத்கர் பங்களாவுக்குச் சென்றேன். அன்றைய செய்தித் தாள்களையும், நான் கொண்டு வந்திருந்த மாலை நேரச் செய்தித் தாள்களையும் படித்து எனக்கு சில குறிப்புகளை அம்பேத்கர் கொடுத்தார். பிறகு, கையால் எழுதப்பட்ட, சில புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டிருந்த 50 பக்கங்களைக் கொடுத்துக் கொண்டே - 'இந்த ஆவணங்கள், 'புத்தரும் கார்ல் மார்க்சும்', 'பழைய இந்தியாவின் புரட்சியும் எதிர்ப் புரட்சியும்' மற்றும் 'இந்து மதத்தின் புதிர்கள்' ஆகிய நூல்களுக்காகத் தயாரிக்கப்பட்டவை. என் வாழ்நாளில், இந்தப் புத்தகங்களை என்னால் வெளியிட முடியாது என்று நினைக்கிறேன்' என்று சொன்னார். அப்போது அவர் கண்களில் நீர் திரண்டிருந்தது.

மேலும் அவர் என்னைப் பார்த்தபடியே, ''நீ எனது தனிப்பட்ட வாழ்க்கையில் எனக்காக நிறைய இழந்திருக்கிறாய். வேதனைகளையும் சந்தித்திருக்கிறாய். உனது நலத்தைப் பற்றிக்கூட அக்கறைப்படாமல், 'புத்தரும் அவர் தம்மமும்' என்ற நூலை தட்டச்சு செய்ததற்கு சிறிதும் பலன் எதிர்பாராமல் முடித்துக் கொடுத்ததையும் நான் நினைத்துப் பார்க்கிறேன். தொடர்ந்து துடிப்புடனும், தியாகத்துடன் செயல்பட வேண்டியிருக்கிற எனது சூழ்நிலையை நீ புரிந்து கொள்வாய் என்று நான் உறுதியாக நம்புகிறேன்'' என்று கூறினார்.

அடுத்த நாள் செவ்வாய் சூலை 31, 1956. 26, அலிப்பூர் சாலைக்கு மாலை 5.50 மணிக்குச் சென்று வழக்கம் போல, அன்று வந்திருந்த அனைத்து தபால்களையும் எடுத்துக் கொண்டு அவரிடம் சென்றேன். என் அறைக்கு எதிரே உள்ள வராந்தாவில் ஸ்டூலின் மேல் உள்ள சிறு மெத்தையில் காலை வைத்துக் கொண்டு அமர்ந்தவாறு குறிப்புகள் சொல்ல ஆரம்பித்தார்.

ஆனால், இடையிலேயே கண்களை மூடி, தலையை நாற்காலியில் சாய்த்தவாறு கண்ணயர்ந்து விட்டார். நான் அமைதியாக உட்கார்ந்து அவரது களைத்த முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரம் கழித்து அவர் எழுந்தார். கடிதங்களை நான் வாசிக்க, விரைவாக அடுத்தடுத்து பதில் குறிப்புகள் கொடுத்தார். அதன் பின்னர் என் தோள் மேல் கை போட்டுக் கொண்டு படுக்கை அறைக்குச் சென்றார். அடுத்த கையில் உள்ள புத்தகம் கீழே விழ படுக்கையில் படுத்துக் கொண்டார். சிறிது நேரம் அவர் ஒரு வார்த்தைகூட பேசாமல் இருந்தது, என்னை மிகவும் வேதனைப்படுத்தியது. அதற்குள் நான் அவரது தலையையும் காலையும் பிடித்து விட்டேன். அது அவருக்கு ஓரளவு தெம்பைக் கொடுத்தது.

அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்தேன். அவரிடம் கேட்பதற்கு நான் தயக்கப்பட்ட அந்தக் கேள்வியை - தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, அவரது படுக்கைக்கு அருகில் ஒரு ஸ்டூலில் அமர்ந்தபடியே அந்தக் கேள்வியைக் கேட்டேன். ''அய்யா, கொஞ்ச நாட்களாக ஏன் நீங்கள் அதிக வருத்தத்துடன் இருக்கிறீர்கள், சில சமயங்களில் அழுகிறீர்களே ஏன்? இந்த கேள்வியைக் கேட்டதற்காக என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்று பணிவுடன் அவர் பாதத்தை தொட்டுக் கொண்டே கேட்டேன்.

**என் வாழ்க்கையில் நான் எடுத்துக் கொண்ட சேவையை என்னால் முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை. என் மக்களை ஆளும் வர்க்கமாக, அரசியல் அதிகாரங்களை மற்ற வகுப்பினரோடு சமமான முறையில் பகிர்ந்து கொள்ளும் நிலையில் பார்க்க வேண்டும் என ஆசைப்பட்டேன்.**

கொஞ்ச நேரத்திற்கு அவர் எவ்வித பதிலும் சொல்லாமல் அமைதியாக இருந்தார். சிறிது நேரம் கழித்து, எனது கேள்வியால் பாதிக்கப்பட்ட அவர், உணர்ச்சிவயப்பட்ட குரலில் கைகளை உயர்த்தி, அவரது நெற்றியில் வைத்துக் கொண்டு சொன்னார் : ''இந்தப் பையன் பிடிவாதக்காரனாய் இருக்கிறான், ரொம்பப் பிடிவாதக்காரனாய் இருக்கிறான்''.

அதற்கு பிறகு கொஞ்ச நேரம் முற்றிலும் அமைதி நிலவியது. நான் அவரது முகத்தை ஆராய்ந்தேன். கண்களை வெறித்தபடி அவர் கூறினார் : ''நீங்களோ, அல்லது வேறு யாருமோ எனது வருத்தத்தைப் பற்றியும், எனது வேதனைகளைப் பற்றியும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. எனக்கிருக்கும் முதல் கவலை, என் வாழ்க்கையில் நான் எடுத்துக் கொண்ட சேவையை என்னால் முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை. என் மக்களை ஆளும் வர்க்கமாக, அரசியல் அதிகாரங்களை மற்ற வகுப்பினரோடு சமமான முறையில் பகிர்ந்து கொள்ளும் நிலையில் பார்க்க வேண்டும் என ஆசைப்பட்டேன்.''

''நான் இப்போது எனது உடல் நலமின்மையால், ஊனமாகிப் படுக்கையில் வீழ்ந்து கிடக்கிறேன். நான் எனது போராட்டங்களினால் சாதித்துக் காட்டியவற்றையெல்லாம் அனுபவித்து வரும் படித்தவர்கள், தங்களது இரக்கமற்றத் தன்மையாலும், வஞ்சகத்தாலும், தங்களை ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்று நிரூபித்து வருகிறார்கள். அவர்



படிப்பகம்

www.padippakam.com

களுக்கு, ஒடுக்கப்பட்ட அவர்களது சகோதரர்கள் மேல் எவ்வித இரக்கமும் இல்லை. நான் எண்ணியிருந்ததைவிட அவர்கள் கேடு கெட்டவர்களாய் இருக்கிறார்கள்.''

''அவர்கள் முழுவதும் தங்களது சுயநலத்திற்காகவே வாழ்கிறார்கள். அவர்களில் ஒருவர்கூட சமூகத் தொண்டில் அக்கறை காட்டவில்லை. அவர்களை அழித்து விடும் பாதையில் அவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். இப்போது நான், கிராமங்களில் - மாற்ற முடியா வறுமையில் தொடர்ந்து உழன்று கொண்டிருக்கும் படிப்பறிவற்ற என் மக்களுக்காகப் பாடுபட விரும்புகிறேன். ஆனால், என் வாழ்நாள் குறுகியதாய் இருக்கிறது.

என் வாழ்நாளில், தாழ்த்தப்பட்ட மக்களிலிருந்து யாரேனும் ஒருவர் முன்னேறி வந்து அம்மக்களுக்காக நடத்தப்படும் இயக்கத்தில், பெரிய பொறுப்பை ஏற்றுக் கொள்வதைப் பார்க்க வேண்டும் என நினைக்கிறேன். ஆனால், இப்போதுவரை அச்சூழ்நிலைக்கு யாரும் வரவில்லை. இயக்கத்தின் இரண்டாம் நிலைத் தலைவர்களில்,

**எனது போராட்டங்களினால் சாதித்துக் காட்டியவற்றையெல்லாம் அனுபவித்து வரும் படித்தவர்கள், தங்களது இரக்கமற்றத் தன்மையாலும், வஞ்சகத்தாலும், தங்களை ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்று நிரூபித்து வருகிறார்கள். அவர்களுக்கு, ஒடுக்கப்பட்ட அவர்களது சகோதரர்கள் மேல் எவ்வித இரக்கமும் இல்லை.**

நம்பிக்கைக்குரியவராகவும், உண்மையானவராகவும் யாரையெல்லாம் நினைத்தேனோ, அவர்களெல்லாம் பதவிக்காகவும் தலைமைக்காகவும் அவர்களுக்குள் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். அவர்களின் மேல் விழுந்த அந்த மிகப் பெரும் பொறுப்புகளைப் பற்றி கவலைப்படாமல், அப்படி நடந்து கொள்கிறார்கள்'' என்றார். இப்படி அவர் பேசுகிறபோதெல்லாம் அவரது கண்கள் கோபத்தில் கனன்று கொண்டிருந்தன.

மேலும் அவர், ''என் வாழ்நாளுக்குள் எனது எல்லா புத்தகங்களையும் வெளியிட்டு விட வேண்டும் என எண்ணுகிறேன். வரலாற்று முக்கியத்துவமிக்க எனது 'புத்தரும் கார்ல் மார்க்சும்', 'பழைய இந்தியாவில் புரட்சியும் எதிர்ப் புரட்சியும்' மற்றும் 'இந்து மதத்தின் புதிர்கள்' போன்ற புத்தகங்களை வெளியிட எனக்கு யாரும் உதவ முன்வரவில்லை. எனக்குப் பிறகு இவற்றை யாரும் வெளியிடப் போவதுமில்லை என்பதை நினைத்து வேதனைப் படுகிறேன்'' என்று மிகவும் உணர்ச்சிப்பூர்வமாகக் கூறினார். நான் இடையில் பேச முற்பட்டபோதும் அவரே தொடர்ந்து பேசினார்.

அவரது கண்கள் வெறித்தபடியிருந்தது. கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது. அவர் என்னைத் திரும்பிப் பார்த்தபோது, நானும் அழுது கொண்டு அவரைப் பார்த்தேன். இதற்கு முன்னால் பலமுறை அவர் கவலையோடு அழுது கொண்டிருந்ததைப் பார்த்திருக்கிறேன். ஆனால், இப்போது நான் பார்த்தவை, என் கற்பனைகளையும், கடந்தகால அனுபவங்களையும் தாண்டியதாக இருந்தது.

நான் எழுந்து அவர் பாதங்களைத் தொட்டு வணங்கினேன். சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, களங்கமற்ற முகத்தில் வேதனைகளை வெளிப்படுத்தியபடி, கம்மிய குரலில், ''தைரியமாக இரு. மனம் தளர்ந்து விடாதே. ஒரு நாளில்லை ஒரு நாள், வாழ்க்கை ஒரு முடிவுக்கு வரும்'' என்றார். நான் அதிர்ச்சி அடைந்தேன். ஏன் அவர் இப்படியெல்லாம் பேசுகிறார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. வெறுமையோடு அவரை உற்றுப் பார்த்தேன்.

சிறிது இடைவெளிக்குப் பிறகு, கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சொன்னார் : ''என் மக்களுக்குச் சொல் நானக்சந்த், என் மக்களுக்காக நான் சாதித்தவைகளெல்லாம், தனி ஆளாக நின்று கொடுமையான துயரங்களையும் முடிவற்ற சிரமங்களையும் கடந்து எல்லா பக்கங்களிலிருந்தும், குறிப்பாக இந்து பத்திரிகைகளிடமிருந்து வந்த அவதூறுகளுக்கு எதிராகவும், என் எதிரிகளுக்கெதிராகவும் என் வாழ்நாளெல்லாம் போராடிப் பெற்றவையே. என்னோடு சேர்ந்து போராடிய சிலரும் இப்போது தங்களது சுய லாபங்களுக்காக என்னை ஏமாற்றத் துணிந்து விட்டனர்.''

''ஆனால், என் வாழ்நாளின் இறுதிவரை ஒடுக்கப்பட்ட எனது சகோதரர்களுக்காகவும், இந்நாட்டிற்காகவும் எனது பணியைத் தொடர்வேன். என் மக்கள் பயணிக்கும் இந்த ஊர்தியை மிகவும் சிரமப்பட்டே - இப்போது இருக்கும் இடத்திற்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறேன். வழியில் வரும் தடைகளையும் மேடுபள்ளங்களையும் சிரமங்களையும் பொருட்படுத்தாமல் இந்த ஊர்தி முன்னேறிச் செல்லட்டும். மாண்புடனும் மரியாதையுடனும் என் மக்கள் வாழ நினைத்தால், இச்சமயத்தில் அவர்கள் கிளர்ந்தெழ வேண்டும். என் மக்களும், என் இயக்கத்தினரும் அந்த ஊர்தியை இழுத்துச் செல்ல முடியாது போனால், அது இப்போது எங்கே நிற்கிறதோ, அங்கேயே விட்டுவிட்டுச் செல்லட்டும். ஆனால், எந்தச் சூழ்நிலையிலும் அந்த ஊர்தியை பின்னோக்கித் தள்ளிவிட வேண்டாம். இதுவே என் செய்தி.''

''உண்மையில், எல்லா வகைகளிலும் தீவிரம் மிகுந்த எனது இந்த கடைசி செய்தி, நிச்சயமாக கவனிக்கப்படாமல் போகாது. போய் என் மக்களுக்குச் சொல். போய்ச் சொல். போய்ச் சொல்.'' என்று மூன்று முறை திரும்பத் திரும்பக் கூறினார். இவ்வாறு சொல்லிக் கொண்டே, கண்ணீர் திரண்டு முகத்தில் வழிய, தேம்பித் தேம்பி அழுதார். பெரிதும் நம்பிக்கை இழந்து காணப்பட்டார். அவரது தாங்க முடியாத அந்தத் துயரத்தை, கசப்பு மிகுந்த நோயின் தீவிரத்தை வெளிக்காட்டிய அவரது முகத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியவில்லை. அழுகையுடனும் பெருமூச்சுடனும் - தனது ஒடுக்கப்பட்ட சகோதரர்களுக்காக அவர் கூறிய, நெஞ்சை உலுக்கக் கூடிய அவரது கடைசி செய்தியைக் கேட்டுத் திகைத்து நின்றேன். அதற்குப் பிறகு தான், அதுவே டாக்டர் அம்பேத்கரின் கடைசி செய்தி என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. ●

தமிழில் : அகன் கிளாடிஸ்



படிப்பகம்

www.padippakam.com


NRI

# N.R. INTERNATIONAL CARGO CO. AGENCIES

- Shippping
- Clearing
- Forwarding
- Ware Housing
- Transporting

**Head Office :**

1, Andiappa Gramani Street
Royapuram, Chennai - 600 013
Phone : 25985987, 25987346, 25986965
Telefax : 91 - 44 - 25986965
E-mail : nri_cargo@sifymail.com


படிப்பகம்




தலித் முரசில் பத்து மாதங்கள் தொடராக வெளிவந்த இந்தக் கட்டுரை, தற்பொழுது நூல் வடிவம் பெற்றுள்ளது. இந்துத்துவம் கோலோச்சத் துடிக்கும் இக்காலகட்டத்தில், தமிழ் வாசகர்கள் பாரதியைப் பற்றி கொண்டுள்ள, ஏற்கனவே தேசிய - பொதுவுடைமை - இலக்கிய வாதிகளால் ஏற்படுத்தி வைக்கப் பட்டுள்ள பொதுப் புத்தியை இந்நூல் கிளறிவிடும்.

## 'பாரதி'ய ஜனதா பார்ட்டி

விலை : ரூ. 30/-

■ ஆசிரியர் : **வே. மதிமாறன்** ■ வெளியீடு
தாத்தா ரெட்டமலை சீனிவாசனார் பேரவை
7, 12ஆவது நிழற்சாலை, அசோக் நகர்
சென்னை - 600 083 ■ பக்கங்கள் : 136



காவல் நிலைய மரணங்கள் மற்றும் பாலியல் வன்முறைகளைத் தடுப்பது, மோதல் சாவுகள் பற்றிய உண்மைத் தகவல்கள், சிறைச் சாலைகளில் மனித உரிமைகள், கையால் மலம் அள்ளுவதை முடிவுக்குக் கொண்டுவருதல் உள்ளிட்ட பல்வேறு உரிமைகள் குறித்த விரிவான தகவல்கள் அடங்கியுள்ளன.

## தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் முக்கிய உத்தரவுகளும், வழிகாட்டுதல்களும்

விலை : ரூ. 40/-

■ வெளியீடு : மக்கள் கண்காணிப்பகம்
6, வல்லபாய் சாலை, சொக்கிகுளம்
மதுரை - 625 002 ■ பக்கங்கள் : 172




சாதி, மத அடையாளங்களைத் எதிர்க்கும் வகையில் - 'இந்துப் பெயர்களைக் கைவிடுவோம்' என்று விடுதலைச் சிறுத்தைகள் அறிவித்துள்ளது. சாதி, மத சார்பில்லாத தமிழ்ப் பெயர்களைச் சூடிக்கொள்ள - தமிழ்ப் பெருங்குடி மக்களை அணியப்படுத்தும் பெருமுயற்சியின் ஒரு பகுதியாக, தமிழில் பெயர் மாற்றும் விழாவில் இந்நூல் வெளியிடப்பட்டது. இதில் 2000 இனிய தமிழ்ப் பெயர்கள் அடங்கியுள்ளன.

## இனிய தமிழ்ப் பெயர்கள்

விலை : ரூ. 12/-

■ தொகுப்பு : **அ.சி. சின்னப்பத் தமிழர்**
■ வெளியீடு : 'தாய் மண்' 16, சின்னய்யா தெரு
தியாகராய நகர், சென்னை - 600 017 ■ பக்கங்கள் : 48




ஜெயலலிதா அரசு கொண்டு வந்துள்ள மதமாற்றத் தடைச் சட்டத்தின் உண்மையான நோக்கத்தையும் ஜெ. - சங்கராச்சாரி கும்பலின் ரகசிய செயல் திட்டத்தையும் புரிந்து கொண்டால்தான், இச்சட்டத்தை சரியான கோணத்தில் எதிர்க்க முடியும்; பாசிச சக்திகளை முறியடிக்கவும் முடியும். இந்து கும்பலின் வாதங்களுக்கு மறுப்புரையாக இந்நூல் வெளிவந்துள்ளது.

## மதமாற்றத் தடைச் சட்டம் : தமிழ் நாட்டை பார்ப்பன நாடாக்கும் சதியே !

விலை : ரூ. 10/-

■ வெளியீடு : மக்கள் கலை இலக்கியக் கழகம்
18, முல்லை நகர் வணிக வளாகம், 2ஆவது நிழற்சாலை,
அசோக் நகர், சென்னை - 600083 ■ பக்கங்கள் : 50

www.padippakam.com



''ஓங்கிட்ட வேல கேட்டனா? இல்ல வேற எதாச்சும் ஓதவி கேட்டனா? எம்புட்டு மரியாதையாப் பேசினேன்? அந்த மரியாத ஒனக்கு எளக்காரமாப் போச்சு இல்ல? மனுசனுக்கு மனுசன் காட்டுற மரியாத - ஒனக்கு ஓஞ்சாதித் திமிரக் காட்டச் சொல்லிச்சா? ஒனக்கும் எனக்கும் எப்பிடிடா ஆகாமப் போச்சு? ஓந்தங்கச்சிய பொண்ணு கேட்டனா? இல்ல, ஒம் வாசப்படியவாச்சம் மிதிச்சனா? இதுக்கு மின்னாடி ஒன்னிய நாம் பாத்ததே இல்லியே? ''

■ ஆசிரியர் : **ராஜ்கவுதமன்** ■ வெளியீடு : தமிழினி 342, டி.டி.கே. சாலை, சென்னை - 600 014
■ பக்கங்கள் : 600

## சிலுவைராஜ் சரித்திரம்

விலை ரூ. 275/-




அண்ணல் அம்பேத்கர் 1936ஆம் ஆண்டு பம்பாயில் நடைபெற்ற மாநாட்டில் ஆற்றிய பேருரை, தலித் முரசில் இடம் பெற்றது. இது, சிறு நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இத்துடன் பெரியாரின் உரையும் இணைக்கப்பட்டுள்ளது. மதமாற்றத் தடைச் சட்டத்தை எதிர்க்கும் ஒவ்வொருவரும் இதைப் படித்தே தீர வேண்டும்.

■ வெளியீடு : தாத்தா ரெட்டமலை சீனிவாசனார் பேரவை 7, 12ஆவது நிழற்சாலை, அசோக் நகர் சென்னை - 600 083 ■ பக்கங்கள் : 20

## மதமாற்றமே முழு சுதந்திரத்தை அளிக்கும்

விலை : ரூ. 3/-




இந்தப் புத்தாயிரம் ஆண்டில் தலித்துகளுக்கான செயல் திட்டத்தை முன்வைக்கிறது இந்த ஆவணம். தனியார் துறையை, அறிவுத் துறையை, கலை - இலக்கிய மய்யங்களை ஜனநாயகப்படுத்தவும், இந்தியாவின் வளங்களில் தலித்துகளுக்கு உரிய பங்கினைப் பெறவும் வழி காட்டுகிறது இந்த ஆவணம். போபால் மாநாட்டில் விவாதிக்கப்பட்டு ஏற்கப்பட்ட இந்த ஆவணம், அம்பேத்கருக்குப் பிறகான தலித் வரலாற்றில் மிக முக்கியமான பங்களிப்பாகத் திகழ்கிறது.

■ வெளியீடு : 'தலித்'
■ கிடைக்குமிடம் :669, கே.பி. சாலை நாகர் கோயில் - 629 001 ■ பக்கங்கள் : 192

## தலித் காலம்

போபால் மாநாட்டில் விவாதிக்கப்பட்ட ஆவணம்

விலை : ரூ. 80/-




மொழியை சோதித்துக் கொண்டிருக்கும் புதுவகை எழுத்துகளில் காணக்கிடைக்காத நேசத்தை, தன்னெ முச்சியை, நுட்பத்தை முன்வைக்கின்றன, சாணக்யாவின் கதைகள் சமூகத்தின் ஆதிக்க மதிப்பீடுகளால் தமது கவுர வத்தைப் பறிகொடுத்த மனிதர்கள், இவர் கதைகளின் ஊடாக மீண்டும் அதைக் கண்டடைகிறார்கள்.

■ ஆசிரியர் : **ஜே.பி. சாணக்யா**
■ வெளியீடு : காலச்சுவடு, 669, கே.பி. சாலை நாகர் கோயில் - 629 001 ■ பக்கங்கள் : 176

## என் வீட்டின் வரைபடம்

விலை : ரூ. 75/-






படிப்பகம்

www.padippakam.com



# "அரசியலை - மத உணர்வுகளுக்கு ஆட்படுத்தினால் உள்நாட்டுப் போர் மூளும்"

**பேராசிரியர் மான்பிரெட் ஸ்டாசன்** (Prof. Manfred Stassen) ஜெர்மனியை சேர்ந்தவர். இவர், அண்மையில் சென்னை வந்திருந்தார். தத்துவத்தில் முனைவர் பட்டம் பெற்ற இவர் - அரசியல், அறவியல், தத்துவம் ஆகிய துறைகளை முறையாகப் பயின்றவர். தற்பொழுது அமெரிக்க பல்கலைக்கழக மொன்றில், 'விசிடிங் பேராசிரிய'ராகப் பணியாற்றி வருகிறார்.

பேரா. ஸ்டாசன், சிலகாலம் இந்தியாவில் வாழ்ந்தவர். இந்திய சமூக நிகழ்வுகளை ஆழமாகவும் கூர்மையாகவும் விமர்சிக்கக் கூடியவர். சென்ற மாதம் சென்னையில் நடைபெற்ற 'போஸ்டர்' கண்காட்சி ஒன்றை திறந்து வைத்துப் பேசினார். இக்கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த போஸ்டர்கள், ஜெர்மானிய கலைக்கல்லூரி மாணவர்கள் உருவாக்கியவை. ஜெர்மனியில் வாழும் வேற்று இனத்தவர்களுக்கு எதிராக, அவ்வப்பொழுது கட்டவிழ்த்து விடப்படும் வன்முறையையும் வெறுப்பையும் வலதுசாரி கருத்தியலையும் விமர்சிக்கும் முகமாக எழுதப்பட்ட சித்திரங்களை உள்ளடக்கியவை.

ஜெர்மனியில் நாஜிகள் வளர்த்த இனவெறி, அவர்கள் மேற்கொண்ட இனப் படுகொலை, இரண்டாம் உலகப்போரில் நாஜிகள் (ஜெர்மனியும்) தோல்விய டைந்த பின்னர், ஜெர்மானிய சமுதாயம் தன்னை மீள்உருவாக்கம் செய்து கொண்டது. நாஜிகால கொடூரங்களுக்காக மனம் வருந்தியது. இருப்பினும், ஜெர்மானியர் அல்லாதாருடன் நெருக்கமான உறவுகளை வளர்த்துக் கொள்ளத் தயங்கியது. தற்கால இன வெறுப்புச் செயல்கள், அவற்றுக்கு எதிரானப் போராட்டங்கள் - இவை குறித்து அக்கண்காட்சித் திறப்பு விழாவில் பேரா. ஸ்டாசன் உரையாற்றினார்.

இதைத் தொடர்ந்து, திறப்பு விழா நடந்து முடிந்த மறுநாள் ஒரு கருத்தரங் கில் பங்கேற்று இதே விஷயங்களை மேலும் ஆழமாக விவரித்தார், விளக்கி னார். இனவேறுபாடு என்பது, எத்தகைய வரலாற்றுச் சூழலில் இனவெறியாக உருமாறுகிறது; இனங்கள், சமுதாயங்களின் தனித்த தன்மைகளைப் புரிந்து கொள்ளும் அதே வேளையில், இவற்றுக்கிடையே வளமான உறவுகளை, இவற்றை இணைக்கக் கூடிய பொது அறங்களை வளர்த்தெடுப்பதன் தேவை குறித்தும் அவர் பேசினார்.

இன வெறி, பாசிசம் குறித்து அவர் கூறிய தகவல்களின் பின்னணியில், சாதிய சமுதாயமான இந்தியாவில் இன்று வெகுவிரைவாக வளர்ந்து வரும் 'இந்துத்துவ' கருத்தியலைப் பற்றிய ஒரு பேட்டியை 'தலித் முரசு'க்கு அளித்தார்.

*நேர்காணல் :* **வ.கீதா**

> **"சாதி - சமுதாய வேறுபாடு களைத் தளர்த்தி சாதிகளை ஒன்று சேர்ப்பதாகப் பிரகடனம் செய்யும் இவர்கள், சாதி சமுதாயத் துக்குரிய பண்பினை மற்றொரு தளத்தில் வளர்த் தெடுக்க முயற்சி செய்து வருகின்றனர்."**



படிப்பகம்

www.padippakam.com

**◇ இனவெறி, இனப்படுகொலை ஆகியவற்றுக்கு ஆதாரமாக இருப்பவை எவை என்று நினைக்கிறீர்கள்?**

இனவுணர்வு, சாதி உணர்வு என்பன போன்றவை 'அடையாள அரசியல்' பாற்பட்ட விஷயங்கள்தான். முதலில் இந்த 'அடையாள சிக்கல்' குறித்துப் பேச விரும்புகிறேன்.

ஒவ்வொரு சமுதாயமும் கடும்போராட்டங்களுக்குப் பிறகே தனக்கென தனிச்சிறப்பானதொரு அடையாளத்தை உருவாக்கிக் கொள்கிறது. அடையாளத்தினை நோக்கிய போராட்டங்கள்- தத்துவம், உளவியல், பண்பாடு என்று பல தளங்களில் நடைபெறுவதை நாம் காணலாம். இப்போராட்டங்களினூடாக ஒரு சமுதாயம் தனது 'சுய'த்தை நிலைநிறுத்தி அதற்குரிய பண்புகளை வரையறுத்துக் கொள்கிறது. அதே நேரம் இக் குறிப்பிட்ட 'சுய'த்திலிருந்து வேறுபடுபவற்றின் தன்மையை வரையறுத்தும் தனக்குரிய தன்மைகளைப் பெறுகிறது. 'நான்' 'அவன்' 'தான்' 'மற்றவன்' என்ற பாகுபாடுகளை மானுட வரலாறு நெடுக நாம் காணலாம்.

உலகினை இவ்வாறு பாகுபடுத்திப் பார்ப்பதில் அடிப்படையில் தவறு ஏதுமில்லை. 'என்'னிலிருந்து 'பிற'ரை வேறுபடுத்திப் பார்ப்பதால்தான் 'என்'னால் 'பிற'ருடன் உறவுகளை வளர்த்துக் கொள்ள முடிகிறது. 'பிற'ரை குறிப்பிட்ட வகைகளில் வரையறுத்துப் புரிந்து கொள்வதனாலேயே 'என்'னால் அவர்களை 'என்'னுடையவராக ஆக்கிக் கொள்ள முடிகிறது.

'நம்மவர்' 'மற்றவர்' என்றும், நாம் உலகினை பாகுபடுத்திப் புரிந்து கொள்கிறோம். 'நம்மவர்' என்று கூறுவதும், அந்த அடிப்படையில் அந்நியோன்மையான உறவுகளை வளர்ப்பதும் நமக்குப் பிடித்திருக்கிறது. இவ்வாறு சொல்லிக் கொள்வதில் மன நிறைவு கொள்கிறோம், 'நம்மவரது' அரவணைப்பில் வாழ்வது நமக்கு வசதியாகவும் இருக்கிறது.

எனவே, நமக்கு 'நம்மவருடன்' இணைவதும், நம்மிலிருந்து வேறுபடுவோருடன் குறிப்பிட்ட வகைகளில் உறவு கொள்வதுமான இருவித விஷயங்களும் தேவைப்படுகின்றன. 'நான்' 'மற்றவனு'டன் உறவு கொள்ள விரும்புகிறேன். அதே சமயம், 'மற்றவனைத்'தவிர்த்த 'எம்மவருடனும்' வாழ விரும்புகிறேன். 'நான்' என்ற சொல் தன்னளவில் பொருள் பெறுவதில்லை. 'மற்றவன்' என்ற சொல்லுடன் உறவு கொள்ளும் போதுதான் தனக்குரிய கனத்தினை, வெகுமதியை அது பெறுகிறது.

எனவேதான், மற்றவன் என்ற பாகுபாட்டினைத் தவறு என்று கொள்ளாமல், அத்தகைய பாகுபாட்டிற்கு ஆதாரமாக விளங்குபவற்றை அடையாளங்கண்டு விமர்சிப்பதும் ஏற்றுக் கொள்வதும் அவசியம்.

**◇ குறிப்பிட்ட சமுதாயங்கள் 'தம்மவரை'யும் 'பிற'ரையும் எவ்வாறு பாகுபடுத்திப் பார்க்கின்றன?**

முதலில், பாரம்பரிய கிரேக்க சமுதாயத்தையும் பழைய மேற்கு ஆசிய சமுதாயங்களையும் (மத்திய கிழக்குப் பகுதி நாடுகளையே ஸ்டாசன் இவ்வாறு குறிப்பிடுகிறார்) எடுத்துக் கொள்வோம். இச்சமுதாயத்தினர் 'மற்றவர்'களையும் 'அந்நியர்'களையும் விருந்தாளிகளாக வரவேற்று மதித்தனர். தம்மை நாடி வந்த 'அந்நியர்' களைப் 'புனிதர்'களாகக் கருதினர். தமது கடவுள்களுக்கு பூசை செய்து இவர்களைப் பாதுகாக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

இத்தகைய சமுதாயங்களைப் போல் அல்லாது, யூத, இஸ்லாமிய சமுதாயங்கள் வேறு வகையில் 'மற்றவர்'களை வகைப்படுத்தின. யூதர்களும் சரி, இஸ்லாமியர்களும் சரி, கடவுளின் சிறப்பு கவனத்துக்கும் ரட்சகத்திற்கும் உரியவர்களாகத் தம்மை கருதிக் கொள்பவர்கள். 'கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட' மானுடர்களாகத் தம்மை அடையாளப் படுத்திக் கொள்பவர்கள். தாம் வணங்கும் கடவுளை ஏற்காத, அக்கடவுளின் மீது நம்பிக்கை வைக்காதவர்களை - தம்மிலும் முற்றிலும் வேறுபட்டவர்களாகவும், அந்நியர்களாகவும் நம்பிக்கையற்ற ஜென்மங்களாகவும் கருதுபவர்கள்.

யூத, இஸ்லாமிய சமுதாயங்களைப் பொருத்தவரை, உலக மக்கள் இரு கூறுகளாகப் பிரிக்கப்பட வேண்டியவர்கள். யூதர்கள் × யூதர் அல்லாதார்; முஸ்லிம்கள் × காபிர்கள். இந்தப் பாகுபாட்டினை, தான் செய்யவில்லை என்றும் இது கடவுளின் ஏற்பாடு என்றும் இச்சமுதாயங்கள் கருதுவதால், இதன் அடிப்படைகளை விமர்சிப்பதென்பது அத்தனை எளிதல்ல. 'தான்' 'மற்றவன்' என்ற வேறுபாடு மத நம்பிக்கையின்பாற்பட்டதால், தீராபகைக்கும் வன்மத்துக்கும் வழிவகுப்பதாய் அமைந்துள்ளது.

மேற்கு ஆசிய, யூத, இஸ்லாமிய சமுதாயங்களின் தனித்த அடையாளங்களுக்கு ஆதாரம் பிறப்பல்ல. ஆனால், ஜெர்மனியிலும், இந்தியாவிலும் பிறப்பின் அடிப்படையிலேயே ஒருவரை 'தம்மவராக'வும் 'பிறத்தியானாக'வும் அடையாளப்படுத்தும் போக்கு காணப்படுகிறது. மிக அண்மைக்காலம் வரை, பிறப்பிலேயே ஒருவர் ஜெர்மானியராக இருந்தால் மட்டுமே அவரை 'தம்மவராக' அச்சமுதாயம் ஏற்றுக் கொண்டது. அதாவது, ஜெர்மானிய 'இன ரத்தம்' அவர் உடம்பில் ஓடினாலொழிய அவர் உண்மையான ஜெர்மானியராக இருக்க முடியாது என்று நம்பப்பட்டது. குறிப்பிட்ட இனங்களை அவற்றிர்க்குரிய 'ரத்த' பண்புகளைக் கொண்டு பிரிக்கையில், இவ்வினங்களின் ரத்தத்தூய்மை குறித்த கேள்விகள் எழுவது இயல்பு.

இனங்களை 'தூய்மை'யானவையாகவும் 'ரத்தக்கலப்புக்கு ஆட்பட்ட தூய்மையற்ற' இனங்களாகவும் பாகுபடுத்திப் பார்க்கும் போக்கு - இத்தகைய 'ரத்தத்தூய்மை' வாதங்களின் மூலம் வெளிப்படுகிறது. நாஜிகள் இதைத்தான் செய்தனர் - தம்மை





படிப்பகம்

www.padippakam.com

'தூய்மை'யான 'ஆரிய' இனமாகக் கருதினர். தாம் 'தூய்மை'யானவர்களாக இருப்பதாலேயே தாம் ஆளப் பிறந்த இனம் என்றும் அறிவித்தனர். நாஜிகள் மட்டுமல்ல, பிறப்பால் தம்மை சிறந்த இனமாக, ஆளும் வகுப்பாக கருதிக் கொள்வோர் அனைவருமே ஜனநாயகத்திற்கு விரோதிகளாவார்கள். 'ஆளப்பிறந்த' தனியொரு தலைவனின் சொற்கேட்டு சிரம் தாழ்த்தி செயல்படுவதையே அவர்கள் விரும்புகிறார்கள்.



**◇ எப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இனப்பாகுபாடுகள் இனப் போர்களாக உருமாறுகின்றன? சாதிய சமுதாயத்தில் இத்தகைய வெறியும் வெறுப்பும் எவ்வாறு வெளிப்படுகின்றன?**

இந்திய சாதி சமுதாயத்திலும் மிக எதேச்சையான வகையில் நிகழும் பிறப்பு என்பது தான், அடையாளத்துக்கு ஆதாரமாக உள்ளது. பிறப்பின் அடிப்படையில் மக்கள் பல்வேறு சாதிகளாகப் பிரிக்கப்படுவதுடன், இச்சாதிகள் மேல் கீழ் வரிசையில் நிறுத்தப்படுகின்றன. மேலும், அவை மேற்கொள்ளும் பிரத்யேகப் பணிகளின் அடிப்படையில் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டு காட்சியளிக்கின்றன. சாதி சமுதாயத்தில் ஒவ்வொரு சாதிக்கும் அதற்கேயுரிய தகுதியும் பண்பும் பணியும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட சாதிக்குரியதை வேறொரு சாதி தன தாக்கிக் கொள்ள முடியாது.

கடவுள் நம்பிக்கை, மத உணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் எழுப்பப்பட்டுள்ள சாதி சமுதாயத்தில் - 'தான்' 'பிறத்தியான்' என்ற பாகுபாடு 'உயர்சாதி' 'தாழ்ந்த சாதி' என்றே பரிணமித்துள்ளது. மேலும், 'தான்' என்ற உணர்வு தனிப்பெரும் சாதியுணர்வாகவே வெளிப்படுகிறது. வேறு எந்தவொரு சனநாயக நாட்டிலும் இதுபோன்ற சமுதாய முறைமை இருக்கிறதா என்று தெரியவில்லை. இதனால்தான் அரசியல், சமூக முரண்பாடுகள் இங்கு மேலோங்கி காணப்படுவதுடன், குழப்பத்துக்கும் கலகத்துக்கும் வழிவகுப்பவையாகவும் அவை உள்ளன.

இன்று வேறொரு பிரச்சனையும் தோன்றியுள்ளது. 'இந்துத்துவம்' என்ற பெயரால் சாதி வித்தியாசம் பாராட்டுவது தவறு என்றும், இந்து பண்பாட்டுக்கு இது அழகல்ல என்றும் சிலர் கூறிவருகின்றனர். ஆனால், சாதி சமுதாய வேறுபாடுகளைத் தளர்த்தி சாதிகளை ஒன்று சேர்ப்பதாகப் பிரகடனம் செய்யும் இவர்கள், சாதி சமுதாயத்துக்குரிய பண்பினை மற்றொரு தளத்தில் வளர்த்தெடுக்க முயற்சி செய்து வருகின்றனர்.

இந்துக்கள் அனைவரையும் ஒரு 'சாதி'யாகவும், இந்த சாதி சமுதாயத்துக்கு அப்பாற்பட்ட முஸ்லிம்களை 'அந்நியரா'கவும் பகைவராகவும், உள்நாட்டு துரோகிகளாகவும் இவர்கள் உருவகப்படுத்தி வருகின்றனர். சாதி சமுதாயத்தில் எல்லா சாதிகளும் ஒதுங்கி ஒதுங்கி வாழ்வது போல, சில சாதிகள் ஒதுக்கப்படுவது போல, முஸ்லிம்களினின்று இந்துக்கள் ஒதுங்கி வாழ்வதையும், முஸ்லிம்களை ஒதுக்கி வைப்பதையும் இந்துத்துவம் பேசுவோர் தீவிரமாக செயல்படுத்தி வருகின்றனர்.

இங்கு வேறொரு விஷயத்தையும் நாம் காண வேண்டும். 'தான்' 'மற்றவன்' என்ற பாகுபாட்டினை மேற்கூறிய வகையில் கறாராக ஏற்படுத்த விரும்புவோர் வரலாற்றில் நம்பிக்கையற்றவர்கள். பிறப்பை ஆதாரமாகக் கொண்டு வரையறுக்கப்படும் அடையாளத்தை யாரும் மாற்ற இயலாது என்றால், அங்கு வளர்ச்சிக்கு இடமில்லை, மாற்றங்களுக்கு வாய்ப்பில்லை. 'நாம் பிறந்தது இதற்குதான்' என்று கூறி பிறப்பின் நிழலில் வாழ நினைப்பவர்கள், தவிர்க்க முடியாத வகையில் பிற்போக்குவாதிகளாக, வலது சாரி அரசியல் அமைப்புகளைச் சார்ந்தவராகத்தான் இருப்பர்.

மேலும், தம்மிலிருந்து பிறரை வேறுபடுத்தவும் 'பிறர்' மீது ஆதிக்கத்தைச் செலுத்தவும் இவர்கள் விரும்புவதால், 'பிற'ரைக் குற்றங்கூறுவர். தம்மை நிராயுதபாணிகளாக, 'பிற'ரது அச்சுறுத்தலுக்கு ஆளாகிவருபவராக இனங்காட்டிக் கொள்வர். நாஜிகளாகட்டும், 'இந்து ராஷ்டிர'த்தை அமைக்க விரும்புவோர் ஆகட்டும் - பிறரைக் குறை கூறி, ஒதுக்கி, அடக்கியொடுக்கவே முற்படுவர். ''இருந்தால் எங்களைப் போல இருங்கள், உங்களது தனித் தன்மையை விட்டுக் கொடுத்து எங்களில் ஒருவராக ஆகிவிடுங்கள். அல்லது 'பிறத்தியாராக' இருந்து மாண்டு போங்கள்'' என்ற ரீதியில் தான் இவர்களது சிந்தனை ஓடும்.

'தமது' தன்னிலையை நிலைநிறுத்த 'பிற'ரையும், தம்மைப் போல் இருக்க விரும்பாதவரையும் கொல்லவும், பூண்டோடு அழிக்கவும் இவர்கள் தயங்க மாட்டார்கள். 'தமது' தன்னிலையை நிலைநிறுத்த இவர்களுக்குத் தகுந்த 'பிறர்' வாய்க்காவிட்டாலும் அத்தகைய பிறத்தியார்களை இவர்கள் உருவாக்கவும் செய்வர். ஜெர்மனியில் நாஜிகளின் தன்வயப்பட்ட இனவுணர்வும் வெறுப்பும், யூதர்கள் - நாஜிகளின் தன்னிலையை குலைக்கவல்ல 'பிறத்தியார்கள்' ஆனார்கள். இன்று இந்தியாவிலும் இத்தகைய போக்கைக் காணலாம். இந்துத்துவம் பேசுபவன், இந்து தேசியத்தைக் கட்டியமைக்க விரும்புவான். தனது 'இந்து' அடையாளத்தை நிலைநிறுத்துவதற்காக 'முஸ்லிம்' என்ற (பொய்) எதிரியை ஏற்படுத்திக் கொண்டுள்ளான். தனது 'இந்து' அடையாளத்தை வெளிப்படுத்த 'அவனை' - 'முஸ்லிமை' வெறுக்கிறான்.

**◇ நாஜிகளுடைய கருத்தியலுக்கும் இந்துத்துவ தத்துவத்திற்கும் இடையே எத்தகைய தொடர்புகள் இருப்பதாக நினைக்கிறீர்கள்?**

இந்துத்துவவாதிகள் நாஜிகளிடமிருந்து கற்றுக் கொண்ட விஷயங்களை வரலாற்றாசிரியர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இன்று நாம் கவலையுடன் எதிர்கொள்ளும் விஷயங்கள் இவைதாம். இந்துத்துவம் செயலாக வெளிப்படுகையில் இந்தியாவின் பெயர் போன சகிப்புத்தன்மை, அமைதியை விரும்பும் மனப்பான்மை, இங்குள்ள பல்வேறு பண்பாடுகள், சமுதாயங்கள் - இவை அனைத்துமே தவிடுபொடியாகிவிடும். இது எப்போது நடக்கும்?

**"இருந்தால் எங்களைப் போல இருங்கள். உங்களது தனிதன்மையை விட்டுக் கொடுத்து எங்களில் ஒருவராக ஆகிவிடுங்கள். அல்லது 'மற்றவராக' இருந்து மாண்டு போங்கள், என்ற ரீதியில்தான் இவர்களது சிந்தனை இருக்கிறது."**



படிப்பகம்

www.padippakam.com


சமத்துவத்திற்கான போராட்டங்கள் தோற்றுவிக்கும் எதிர்பார்ப்புகளை சனநாயக அரசால் நிறைவேற்ற இயலாது போகும் தருவாயில், பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கைத் தரத்தை அழிக்கும் வண்ணம் இங்கு பொருளாதாரத் திட்டங்கள் தீட்டப்படுமேயானால், நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு விடைகளைக் காண முயற்சிக்காமல் போலிச் சாக்குகள் சொல்லி குறிப்பிட்ட சமுதாயத்தினரின்மீது மக்களின் கோபத்தை திசைதிருப்பிவிடும் முயற்சிகளில் அரசியல் தலைவர்கள் ஈடுபட்டால், இயலாமையும் பொறாமையும் மக்களை வெறுப்புப் பாதைக்கு இட்டுச் சென்றால், இந்துத்துவம் வெற்றி பெற்றுள்ளதாகத்தான் நாம் கொள்ள வேண்டும்.

இத்தகைய வெற்றியை தேடிக்கொள்ள இந்துத்துவம் அணிவகுத்துத் தயாராக உள்ளது. சங்பரிவாரம் மிக சாதுர்யமாக சமுதாயத்தின் அடிமட்டத்தில் தொடங்கி எல்லா மட்டங்களிலும் தனது கைவரிசையைக் காட்டி வருகிறது. மக்களின் பிரச்சனைகளை தனக்கு சாதகமாக்கிக் கொண்டும், அவர்களது ஆழ் மனக் குழப்பங்களுக்கும் கேள்விகளுக்கும் அரசியல் விளக்கங்கள் அளித்தும், அவர்களிடம் கணிசமாகவே உள்ள மத உணர்வைத் தூண்டிவிட்டும், கடவுளின் பாதுகாப்பில்தான் தாம் இதையெல்லாம் செய்வதாகக் கூறியும் 'சங்பரிவாரம்' பல இடங்களில் வன்முறையிலும் கொலையிலும் ஈடுபட்டு வருகிறது. மக்களில் சிலரும் 'சங்பரிவார'த்தின் விஷமத்தனமான பிரச்சாரத்தை ஏற்று, 'தமது' மதத்தின் பெருமையை நிலைநாட்டுவதற்காக எதையும் செய்யலாம் என்று தர்க்கம் செய்து - தம்மை இழக்கவும், தியாகம் செய்யவும் தயாராகவுள்ளனர்.

உற்சாகத்துடன் பிறரை துன்புறுத்த முன் வருகின்றனர். இவ்வாறு செய்வதை அறமாகவும் கருதுகின்றனர், மறுமையில் தமக்கு மோட்சம் கிடைக்கும் என்றும் நம்புகின்றனர். இவர்களை - தான் / மற்றவன் என்ற பாகுபாட்டினை நாசகரமான வகையில் புரிந்து கொண்டு செயல்படுபவரைத் தடுத்து நிறுத்துவது எப்படி என்ற கேள்வியை நாம் தொடர்ந்து எழுப்பியாக வேண்டும். 'தான்' 'மற்றவன்' என்ற பாகுபாட்டினை வளமான, சீரான முறைகளில் புரிந்து கொண்டு செயல்படுவது முக்கியம். பண்டைய கிரேக்கர்கள் தமது பண்பாட்டினைப் போல் உலகில் வேறு எங்கும் இல்லை என்று கூறினர். என்றாலும் அப்பண்பாட்டினைப் பிறருக்கு கற்பிக்க முன்வந்தனர். பிறருடன் உறவு கொண்டனர் - அவர்களையும் இணைத்துதான் - தமது பண்பாட்டு அடையாளத்தை உருவாக்கினர்.

1789 ஆம், ஆண்டு நடந்த பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு பிரெஞ்சு மக்கள் 'தான்' 'மற்றவன்' என்ற பாகுபாட்டினைக் கடந்த, அதனை உள்ளடக்கிய பொது அடையாளத்தை முன்வைத்தனர். அதுதான் 'குடிமகன் / குடிமகள்' என்ற அடையாளம். பலதரப்பட்ட மக்களும் தஞ்சங்கொள்ளக் கூடிய பொதுவான, பரந்துபட்ட அடையாளங்களை உருவாக்கியவர்கள், பிறப்பு என்ற நிகழ்வுக்கு முக்கியத்துவம் அளித்தவர்கள் அல்ல. மாறாக, வளர்தல், மாறுதல், முன்னேறுதல் ஆகியவற்றையே போற்றிப் பின்பற்றினர்.

அமெரிக்கர்கள் தமது நாட்டைப் புனிதமானதாகக் கருதுவதால்தான், பிறநாடுகளையும் புனிதம் × புனிதமற்றவை என்ற அளவுகோல் கொண்டு மதிப்பீடு செய்கின்றனர். இதனால்தான் முன்னாள் சோவியத் யூனியனை 'சாத்தானின் பேரரசாக' அவர்கள் விளித்தனர். இதே காரணத்தால் தான் இஸ்லாமிய உலகினை தமது பரம எதிரியாக, பகைவனாக, கிறித்துவ உலகத்துக்கு விரோதியாக விளிக்கின்றனர். உலக நாடுகளின் அனுபவங்களின் பின்னணியில், இந்தியாவின் தற்கால நிலைமைகளை ஆராய்ந்தால் இதைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது.



வேற்றுமைகளைப் பாராட்டிப் பராமரிக்க, சனநாயக நாடாக இந்தியா நீடிக்க வேண்டுமேயானால், பொது அறங்களையும் மதச்சார்பற்ற விழுமியங்களையும் பின்பற்றி, தனது அரசியல் வாழ்க்கையை வடிவமைத்துக் கொள்ள வேண்டும். சாதி வேறுபாடுகளை நிலைநிறுத்தி, மத அடையாளங்களை வளர்த்துக் கொண்டே போனால், இங்கு உள்நாட்டுக் கலகங்களும் கொந்தளிப்புகளும் அதிகரிக்கவே செய்யும். உள்நாட்டுப் போர்கள் கூட ஏற்படலாம். அரசியலை 'மதவுணர்வுகளுக்கு ஆட்படுத்தியதன் விளைவாக உலகெங்கும் போர்கள் பல ஏற்பட்டுள்ளன, பல்வேறு சமுதாயங்களின் தனித் தன்மைகள் அழிந்து போயுள்ளன. மதத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் அரசியல் செயல்பாடானது, தான் அல்லாத பிறத்தியார்களின் அழிவையே நாடுகிறது. ஆனால், காலப் போக்கில் 'பிறத்தியார்'களுக்கு எதிரான செயல்பாடுகள் 'தம்மவரு'க்கு எதிராகவும் திரும்பும். இதையும் நாஜிகளின் வரலாற்றில் நாம் காணலாம்.

**❝ நாஜிகள் மட்டுமல்ல, பிறப்பால் தம்மை சிறந்த இனமாக, ஆளும் வகுப்பாக கருதிக் கொள்வோர் அனைவருமே ஜனநாயகத்திற்கு விரோதிகளாவார்கள். ❞**

எனவே, இந்தியாவில் இதைச் செய்யும் அமைப்புகளை எதிர்க்க பலரும் முன்வர வேண்டும். அரசியல் வாழ்வில் ஆழ வேரூன்றிவிட்ட ஊழலை களைந்தெடுத்து விட்டு, அரசியல் அதிகாரத்திற்குரிய மதிப்பினை இந்தியர்கள் ஏற்படுத்திக் கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன். நல்ல அரசியல் தலைமையினால் மட்டுமே இந்துத்துவத்தை முறியடிக்க முடியும். பலதரப்பட்ட மக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய முற்போக்குத் தலைமையை வளர்த்தெடுப்பதும், சனநாயக உணர்வைப் பாதுகாப்பதும் இந்தியர்கள் அவசியம் செய்ய வேண்டிய பணிகளாகும். ●



படிப்பகம்

www.padippakam.com

# மரணத்தை நோக்கி சில அடிகள்



**மால்கம் எக்ஸ் : ஒரு போராளியின் வரலாறு - 20**

■ **ரவிக்குமார்**

ஒரு வீட்டின் மீது தனக்கிருந்த உரிமை பறிக்கப்பட்டதை எண்ணி மால்கம் கலங்கி விடவில்லை. உலகம் முழுவதும் தனக்குச் சொந்தம் என்ற உணர்வே அவருள் பெருகியது. 1964 செப்டம்பரிலிருந்து நவம்பர் 24 வரை மூன்றாவது முறையாக, ஆப்ரிக்க நாடுகளுக்கு அவர் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். இம்முறை கென்யட்டாவையும் ஒபோட்டேவையும் அவர் சந்தித்தார்.

ஜோமோ கென்யட்டா, கென்யாவின் அதிபர். கிகுயு மக்களின் தலைவர். மாங் மாங் கலகத்தை வழி நடத்திச் சென்றவர். அதனால் பல ஆண்டுகளை சிறையில் கழித்தவர். மில்டன் ஒபோட்டே - உகாண்டா அதிபர். உகாண்டா விடுதலை பெறப் போராடியவர். கென்யட்டாவும், ஒபோட்டேவும் ஆப்ரிக்க ஒற்றுமையை மிகவும் விரும்பியவர்கள். காலனிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற ஆப்ரிக்க நாடுகளின் மேம்பாட்டுக்காகப் பாடுபட்டவர்கள்.

அக்டோபர் மாதத்தில், மால்கம், ஆப்ரிக்க நாடுகளைச் சேர்ந்த பதினோரு அதிபர்களைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார். அய்.நா. சபை போன்ற உலக அமைப்புகளின் கவனத்தை கறுப்பின மக்களின் பிரச்சனையை நோக்கி எப்படி ஈர்ப்பது என்பது பற்றி அவர்கள் ஆலோசித்தனர்.

அமெரிக்க ஆதிக்கத்தையும், ஆப்ரிக்காவில் காலனிய ஆட்சி முறையைத் தக்க வைத்துக் கொண்டிருந்த பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் போர்ச்சுகல் ஆகியவற்றின் மேலாதிக்கத்தையும் எதிர்த்து ஒரு அரசியல் கூட்டணியை உருவாக்குவதே மால்கமின் திட்டமாக இருந்தது. மால்கமின் இந்த நடவடிக்கைகள், அமெரிக்க உளவு நிறுவனமான சி.அய்.ஏ.வுக்கு அதிர்ச்சியளித்தன. மால்கமின் திட்டத்தை முறியடிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்படி, ஆப்ரிக்க நாடுகளிலிருந்த சி.அய்.ஏ. அலுவலகங்களுக்கு தாக்கீது அனுப்பப்பட்டது.



ஆப்ரிக்க நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தபோது, அந்த நாடுகளின் அரசாங்கங்கள் தமது நாடுகளில் அரசுப் பதவிகள் பலவற்றை மால்கமுக்கு வழங்க முன் வந்தன. அவரது ஆற்றலைப் பார்த்து வியந்ததால் மட்டுமின்றி, அமெரிக்காவுக்குத் திரும்பினால் அவருக்கு ஏற்படப் போகும் ஆபத்தை எண்ணி அஞ்சியதாலும்தான் - அவருக்கு அந்தப் பதவிகளை வழங்க அவை முன் வந்தன. ஆனால், அவற்றை மால்கம் பெருந்தன்மையோடு நிராகரித்து விட்டார்.

கானா நாட்டின் அதிபர் நுருமா, தனது அமைச்சரவையில் மால்கமுக்கு இடமளிக்க முன் வந்தார். அல்ஜீரியாவின் அதிபர் தபன் பெல்லாவும், எகிப்து அதிபர் நாசரும்கூட மால்கமை அமைச்சர் ஆக்குவதற்கு முன் வந்தனர். தனக்கு அமெரிக்காவில் செய்ய வேண்டிய பணிகள் அதிகம் உள்ளதைச் சுட்டிக் காட்டி, மால்கம் எல்லாவற்றையும் மறுத்து விட்டார். இஸ்லாமைப் பற்றி கற்க விரும்பும் அமெரிக்க முஸ்லிம்கள் இருபத்தைந்து பேர்களுக்கு உதவித் தொகை வழங்க சவுதி அரேபியா முன்வந்தது. மால்கமே அந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பட்டும் என அந்த நாடு கூறிவிட்டது.

அதுமட்டுமின்றி, இஸ்லாமிய அறிஞரான அகமது அசன் என்பவரை மால்கமுடன் அமெரிக்காவுக்கு அனுப்பி, மால்கமின் அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு உண்மையான இஸ்லாம் கொள்கைகளைப் போதிக்கவும் ஏற்பாடு செய்தது. அமெரிக்காவில் ஏதாவதொரு இடத்தில் மிகப்பெரும் மசூதி ஒன்றைக் கட்டுவதற்கு நிதி உதவி செய்வதாகவும் சவுதி அரேபியா அறிவித்தது. சவுதி அரேபியாவின் உதவியோடு கட்டப்படுவதாக இருந்த அந்த மசூதி, லாஸ் ஏஞ்செல்சில் கட்டப்படும் எனவும், அதற்கு எலிஜா முகம்மதுவின் இளைய மகன் அக்பர் பொறுப்பாயிருப்பார் எனவும் மால்கம் அறிவித்தார்.

மால்கம், ஆப்ரிக்க நாடுகளில் இருந்தபோது நவம்பர் 5 ஆம் தேதி அவரது ஆதரவாளரான கென்னத் மார்ட்டன் என்பவர், எலிஜா முகம்மதுவின் ஆட்களால் தாக்கப்பட்டார். நவம்பர் 24 ஆம் தேதி மால்கம் அமெரிக்காவுக்குத் திரும்பினார். நியூயார்க்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பத்திரிகையாளர் சந்திப்பில் தனது ஆப்ரிக்க பயணம் குறித்து மால்கம் பேசினார். ''அமெரிக்கா தனது நாட்டிலிருக்கும் ஆப்ரிக்க - அமெரிக்கர்களின் மனித உரிமைகளை நசுக்குகிறது. அதை எதிர்த்து அய்.நா. சபையில் மனு ஒன்றை சமர்ப்பிக்கப் போகிறேன். அந்த மனுவுக்கு ஆப்ரிக்க நாடுகள் ஆதரவு தர சம்மதித்துள்ளன'' என மால்கம் அறிவித்தார்.

அமெரிக்காவிலிருந்த பெரும் பத்திரிகைகள் அனைத்தும் மால்கமைப் பற்றி



படிப்பகம்

www.padippakam.com

எழுதின. 'சாட்டர்டே ஈவ்னிங் போஸ்ட்' என்ற பத்திரிகை, மால்கமைப் பற்றி மிக நீண்ட கட்டுரை ஒன்றை வெளியிட்டது. அதே சமயத்தில், மால்கமுக்கு நேரடியான கொலை மிரட்டலை எலிஜா முகமது விடுத்தார். மால்கமால் தொடங்கப்பட்டு, அப்போது எலிஜா முகமதுவால் நடத்தப்பட்டு வந்த 'முகமது ஸ்பீக்ஸ்' பத்திரிகையில் 1964 டிசம்பர் 4 ஆம் தேதி கட்டுரையொன்று வெளியானது. மால்கமின் ஆதரவாளராக இருந்து அப்புறம் முகமதுவின் கையாளாக மாறிவிட்ட லூய் பராக்கன் என்பவர்தான் அந்தக் கட்டுரையை எழுதியிருந்தார்.

மால்கமுக்கு சாவுமணி அடிக்கப்பட்டு விட்டதாகவும், அதிலிருந்து அவர் தப்பவே முடியாது எனவும் அந்தக் கட்டுரையில் எழுதப்பட்டிருந்தது. அதனருகில் எலிஜா முகமதுவின் புகைப்படம் வெளியிடப்பட்டிருந்தது. முகமது அலி சகோதரர்களுக்கு நடுவில் எலிஜா முகமது அமர்ந்திருக்கிறார்; கையில் குர் ஆன் உள்ளது. அதை அவர் சுட்டிக் காட்டியபடி இருக்கிறார். மால்கம் கொல்லப்படுவது அல்லாவின் ஆணை என்று அர்த்தப்படுவதாக அது இருந்தது.

"நான் கொண்டிருப்பது போன்ற நம்பிக்கைகள், என்னுடைய குணம், நான் நம்புவதன்பால் நான் காட்டுகிற அர்ப்பணிப்பு... இவற்றை வைத்துப் பார்த்தால், நான் மற்றவர்களைப் போல முதுமை அடைந்து அதற்குப் பிறகே மரணமடைவேன் என்று சொல்ல முடியாது."



ஆப்ரிக்க நாடுகளிலிருந்து திரும்பிய உடனேயே மால்கம் லண்டனுக்குப் பயணமானார். அங்கு 'ஆக்ஸ்போர்டு யூனியனில்' அவர் பேசினார். 'லண்டன் ஸ்கூல் ஆப் எகனாமிக்சிலும்' அவர் உரை நிகழ்த்தினார். அங்கிருந்து அமெரிக்காவுக்குத் திரும்பியதும் ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் அவர் உரை நிகழ்த்தினார். தனக்கு விடப்பட்டுள்ள கொலை மிரட்டல்களைக் கண்டு அவர் அஞ்சவில்லை. அமெரிக்க உளவு அமைப்புகளும் மால்கமைப் பின் தொடர்ந்து கொண்டிருந்தன. 1964இன் இறுதியில் அமெரிக்க உளவு அமைப்பான எப்.பி.அய்.இல் இருந்த மால்கமின் கோப்பில், நான்காயிரத்துக்கும் மேற்பட்ட பக்கங்கள் சேர்ந்துவிட்டன. மால்கம் எப்படி கண்காணிக்கப்பட்டார் என்பதற்கு அதுவே ஒரு சான்றாகும்.

எலிஜா முகமதுவின் மகன்கள் வாலஸ் மற்றும் அக்பர் ஆகிய இருவரும் மால்கமை ஆதரித்த காரணத்தால், எலிஜா முகமதுவால் நிராகரிக்கப்பட்டனர். மால்கமைப் போல தனது மகன்களும் போலிகளாகி விட்டனர் என எலிஜா முகமது பேசினார்.

1964 டிசம்பர் 25, கிறிஸ்துமஸ் தினம். மால்கமின் நெருங்கிய நண்பர்களில் ஒருவரான லியோன் 4 எக்ஸ் அமீர் என்பவர், எலிஜா முகமதுவின் கையாட்களால் கடுமையாகத் தாக்கப்பட்டார். கராத்தே வீரரான அமீரைப் பலபேர் சேர்ந்து தாக்கி, அவர் செத்துப்போய் விட்டதாக எண்ணி போட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். பல நாட்கள் அவர் கோமாவில் இருக்க நேர்ந்தது. நினைவு திரும்பிய பின், தன்னைத் தாக்கியவர்களை அமீர் அடையாளம் காட்டினார். ஆனால், அமெரிக்க காவல் துறை அந்தக் குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை.

எலிஜா முகமதுவின் கொலைக் கரங்கள் தன்னை நெருங்கி வந்து விட்டதை மால்கம் தெளிவாகப் புரிந்து கொண்டார். டிசம்பர் 29 ஆம் தேதி ஒரு வானொலி நிகழ்ச்சிக்குச் சென்றபோது - மால்கமின் பாதுகாவலர்களுக்கும், எலிஜா முகமதுவின் ஆட்களுக்கும் கைகலப்பு ஏற்பட்டது. இப்படியான தருணங்களில் அமெரிக்க போலிஸ் நடந்து கொண்ட விதம், அவர்களும் அந்த சதியில் கூட்டாளிகளாக இருப்பதை மால்கமுக்குப் புலப்படுத்தியது.

பரந்துபட்ட அரசியல் இயக்கத்தைக் கட்டியமைக்க மால்கம் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார். மார்ட்டின் லூதர் கிங்குடன் அவர் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொண்டார். க்ளாரன்ஸ் ஜோன்ஸ் என்பவர் மால்கம், மார்ட்டின் லூதர் கிங் இருவரையும் சந்திக்க ஏற்பாடு செய்தார். ஆனால், லூதர் கிங்கின் ஆதரவாளர்கள் தலையிட்டு அந்த சந்திப்பை ரத்து செய்துவிட்டனர். மால்கமுக்கும் லூதர் கிங்குக்கும் ஏற்பட்ட நெருக்கத்தை, அமெரிக்க உளவு அமைப்புகள் உன்னிப்பாக கவனித்து வந்தன.

எலிஜா முகமதுவின் மிரட்டல்களை வெளிப்படையாக சந்திப்பதென மால்கம் முடிவு செய்தார். முகமதுவின் தவறான பிரச்சாரங்களை அம்பலப்படுத்தி வெளிப்படையாக அவர் பேச ஆரம்பித்தார். தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பேசும்போது, எலிஜா முகமது ஒரு பொய்யர் எனவும், கோழை எனவும் மால்கம் விமர்சித்தார்.

"எலிஜா முகமது பேசிவருபவை இஸ்லாத்தின் போதனைகளுக்கு நேரெதிரானவை. அவை முஸ்லிம்களுக்கும் எதிரானவை. எலிஜா முகமது கூறி வருபவற்றை மெக்காவில் இருப்பவர்களும் இஸ்லாமின் மத போதகர்களும் முற்றாக நிராகரித்து



படிப்பகம்

www.padippakam.com

விட்டனர். அவரது போதனைகளை மத போதனைகள் என்று கூறலாம். ஆனால், அவற்றை இஸ்லாமிய போதனைகள் என எடுத்துக் கொள்ள முடியாது'' என்று மால்கம் குறிப்பிட்டார்.

''அமெரிக்காவில் இஸ்லாமிய மத அறிஞர்கள் குறைவாக இருப்பதால் எலிஜா முகமது பேசியது செல்லுபடியாகி வந்தது. அவர் மட்டுமல்ல, எந்தவொரு மோசடிப் பேர் வழியும் வாய்க்கு வந்ததைப் பேசிவிட்டு அதையே இஸ்லாம் என ஏய்க்கவும் முடிகிறது'' என மால்கம் சாடினார்.

மால்கம் தனது பேச்சுகளில் ஒரு விஷயத்தை மிகவும் வற்புறுத்தி வந்தார். அமெரிக்காவில் உள்ள கறுப்பின மக்களின் போராட்டம், உலகெங்கும் நடந்துவரும் புரட்சிகரப் போராட்டங்களோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை அதிலும் குறிப்பாக ஆப்ரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளில் நடந்து வரும் போராட்டங்களோடு உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை அவர் வற்புறுத்தினார்.

இனவெறிக்கும் முலாளித்துவத்துக்கும் இடையில் இருக்கும் உறவை வரலாற்றுப்பூர்வமாக மால்கம் எடுத்துரைத்தார். ''இது புரட்சிகளின் யுகம்..... ஒடுக்குமுறைக்கு எதிராக சிந்திப்பவர்கள் அனைவரும் புரட்சியாளர்கள்தான்'' என மால்கம் கூறினார். உலகப் பொருளாதார நிலை குறித்து துல்லியமான மதிப்பீடுகளை மால்கம் தனது உரைகளில் முன்வைத்தார். அவரது உரைகளில் காங்கோ, வியட்நாம், சீனா, தென் ஆப்ரிக்கா ஆகிய நாடுகளில் நடைபெறும் போராட்டங்களைப் பற்றிய தகவல்களும், அவற்றுடன் கறுப்பின மக்களின் போராட்டத்துக்கு உள்ள தொடர்புகளும் விரிவாக அலசப்பட்டன.

1965 பிப்ரவரி 9 ஆம் தேதி லண்டனிலிருந்து பாரீசுக்கு மால்கம் சென்றார். ஆனால், பிரான்சில் நுழைய மால்கமுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. மால்கம் கொலை செய்யப்படவுள்ள தகவல் பிரான்ஸ் நாட்டு அரசாங்கத்துக்கு தெரிய வந்திருந்தது. அமெரிக்காவின் பிரபல தலைவர் ஒருவர் தனது நாட்டில் கொல்லப்படுவதை விரும்பாததாலேயே அவருக்கு பிரான்ஸ் அனுமதி மறுத்தது. அதனால் மால்கம் மீண்டும் லண்டனுக்குத் திரும்ப வேண்டி நேர்ந்தது.

பிப்ரவரி 13 ஆம் தேதி மால்கம் நியூயார்க்குக்குத் திரும்பினார். மறுநாள் அதிகாலையில் மால்கமின் வீட்டில் பெட்ரோல் குண்டுகள் வீசப்பட்டன. மால்கமின் குழந்தைகள் அப்போது தனியே ஒரு அறையில் தூங்கிக் கொண்டிருந்தனர். தற்செயலாக அவர்கள்



விழித்துப் பார்த்து அலறியபடி ஓடிவந்தனர். நான்கு மாத கர்ப்பிணியாக இருந்த தனது மனைவியையும், தனது குழந்தைகளையும் காப்பாற்றி வெளியே இழுத்துக் கொண்டு வந்தார் மால்கம். அவர்களது கண்ணெதிரில் அவர்களின் வீடு எரிந்து சாம்பலாகிக் கொண்டிருந்தது.

நடிகர் சிட்னி பாய்ஷியரின் மனைவியான ஜீவானிதா பாய்ஷியர், மால்கம் குடும்பத்தை தனது வீட்டில் தங்கியிருக்கும்படி வற்புறுத்தி அழைத்துச் சென்றார். எந்த சேமிப்பும் இல்லாத மால்கமின் குடும்பத்துக்காக நிதி சேகரித்துத் தரவும் அவர் முயற்சி மேற்கொண்டார். தனது குடும்பத்தினரின் உயிரைக் காப்பாற்ற ஒவ்வொரு நொடியும் விழிப்போடிருக்க வேண்டிய நிலை. இரவில் கூட ஒரு நிமிடமும் தூங்காமல் துப்பாக்கியோடு காவல் இருந்தார் மால்கம். ஒரு புறம் எலிஜா முகமது ஏவிவிட்ட கையாட்கள், மறுபுறம் அமெரிக்காவின் உளவு அமைப்புகள்..... மரணம் இனி தவிர்க்க முடியாதது என்பது மால்கமுக்குத் தெளிவாகி விட்டது.

''நான் கொண்டிருப்பது போன்ற நம்பிக்கைகள், என்னுடைய குணம், நான் நம்புவதன்பால் நான் காட்டுகிற அர்ப்பணிப்பு..... இவற்றை வைத்துப் பார்த்தால், நான் மற்றவர்களைப் போல முதுமை அடைந்து அதற்குப் பிறகே மரணமடைவேன் எனக் கூற முடியாது'' என அலெக்ஸ் ஹேலியிடம் மால்கம் ஒரு முறை கூறியிருந்தார். மரணம் அவர் எதிர்பார்த்த ஒன்று. அதைக் கண்டு அவர் அஞ்சியதில்லை. மரணம் அவரது கால்களைத் தளரச் செய்யவில்லை. தனது பயணம் தன்னை எதை நோக்கி இட்டுச் செல்லும் என்பதைத் தெளிவாக உணர்ந்திருந்ததால், மால்கமின் மனம் ஒரு போதும் சஞ்சலப்பட்டதில்லை.

மால்கம் வாழ்ந்த கடைசி நாள் - ஒரு ஞாயிற்றுக் கிழமை. அன்று மாலை OAAU இன் கூட்டமொன்றில் அவர் உரையாற்றுவதாக ஏற்பாடு. ஹார்லெமில் உள்ள 'ஆதுபோன்' நடன அரங்கில் அந்தக் கூட்டம் ஏற்பாடாகியிருந்தது. மால்கம் அங்கே சென்றார். மால்கமோடு பேசுவதாக இருந்த மற்ற மூவரும் வரவில்லை. ஏதோ நடக்கப் போகிறது என்ற அமானுஷ்ய குரல் மால்கமுக்குள் ஒலித்தது.

மால்கமின் நீண்ட நாள் நண்பரும் ஆதரவாளருமான பெஞ்சமின் எக்ஸ் குட்மேன் என்பவர், மால்கமை கூட்டத்தினருக்கு மிகவும் ஆரவாரமான வார்த்தைகளால் அறிமுகப்படுத்தினார். அப்படிச் செய்வதை மால்கம் ஒருபோதும் விரும்பியதில்லை. தனது பார்வையால் தன் அதிருப்தியை தெரிவித்தார் மால்கம். பெஞ்சமின் கூறினார்: ''இதோ உங்களிடம் நான் இவரை அறிமுகம் செய்து வைக்கிறேன். உங்களுக்காக தனது உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கும் இந்த மனிதரை.....! பெஞ்சமின் பேசிக் கொண்டிருக்க, கூட்டத்தினர் கைதட்டி அதை ஆமோதிக்க, மேடையில் 'மைக்' இருந்த இடத்தை நோக்கி மால்கம் நடந்தார். தனது பயணத்தின் கடைசி அடிகள் அவையென்பது மால்கமுக்குத் தெரியாது.

- தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

# 10 ஆவது தலித் கலை விழா



''தலித் விடுதலைக்கு கலைகளையும் கருவிகளாக்குவோம்''

**பங்குனி 1 (மார்ச் 15, 2003) சனிக்கிழமை மாலை 6.00 மணி**

■

ஆயிரங்காலத்து அடக்குமுறைகளை உடைத்தெறியும் வர்ணாசிரமப் போராட்டத்தில் - இந்து சனாதனத்திற்கு எதிராகவும், சாதிய சமூகத்திற் கெதிராகவும், தலித் மக்கள் தங்களின் கோபத்தை - எதிர்ப்புணர்வை பல்வேறு கலைவடிவங்கள் வழியே அரங்கேற்றும் விடுதலைக் களமாக...

தலித் மக்களின் மறைக்கப்பட்ட வரலாற்றையும், மறுக்கப்பட்ட அடையாளங் களையும் வெளிக்கொணரும் அரசியல் அரங்கமாக....

சமூக, சமய, பொருளாதார, அரசியல் விடுதலைக்கான வேர்களை - பண்பாட்டு வடிவங்களில் மீட்டெடுக்கும் கலை இலக்கியத் தளமாக தலித் கலைவிழா

■

மதுரை அரசரடி யூ.சி.பள்ளி விளையாட்டுத் திடலில் விடிய... விடிய...



■ பெரியமேளம் ■ பறையாட்டம் ■ கரகாட்டம் ■ மாடாட்டம் ■ மயிலாட்டம் ■ புலியாட்டம் ■ கரகாட்டம் ■ கழிலாட்டம் ■ காணிக்காரர் கோலாட்டம் ■ ஒயிலாட்டம் ■ ராசாராணி ஆட்டம் ■ மகுடாட்டம் ■ ஜிக்காட்டம் ■ ஜிம்லாட்டம் ■ சிலம்பாட்டம் ■ கூத்து ■ நாடகம் ■ குரலிசை ■ உரைவீச்சு ■ விருது வழங்குதல் ■ வெளியீடு

■

இன்னும் நிறைய விடிய... விடிய....

■

**குடும்பத்தோடு எல்லோரும் வாங்க**
**அன்போடு அழைக்கிறோம்!**

அய். கதிர்வேலு, இயக்குநர், தலித் ஆதார மய்யம்
தமிழ் நாடு இறையியல் கல்லூரி, அரசரடி, மதுரை - 16 ■ பேசி : 0452 - 260 77 18

படிப்பகம்

www.padippakam.com

# நான் சந்தித்த சாதிக் கொடுமைகள்...

■ டாக்டர் அம்பேத்கர்



தீண்டத்தகாதவர்களின் குறைகளைக் குறித்து விசாரிக்க பம்பாய் அரசு, 1929 ஆம் ஆண்டு ஒரு குழுவை நியமித்தது. நானும் அந்தக் குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டேன். அநீதி, கொடுமை, கொடூரம் போன்ற குற்றச்சாட்டுகளை விசாரிக்க, அந்தக் குழு மாகாணம் முழுவதும் செல்ல வேண்டியிருந்தது. குழு பல சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கந்தேஷின் இரு மாவட்டங்கள் எனக்கும் இன்னொரு உறுப்பினருக்கும் ஒதுக்கப்பட்டிருந்தன. வேலை முடிந்த பிறகு நானும் என்னுடன் பணிபுரியும் நண்பரும் பிரிந்து சென்றோம். அவர் ஓர் இந்து சாமியாரைப் பார்க்கச் சென்றார். நான் பம்பாய்க்கு ரயில் ஏறினேன். சாலிஸ்காவோனில் இறங்கினேன். தூலியா ரயில் மார்க்கத்தில் இருந்த ஒரு கிராமத்தில் சமூகப் புறக்கணிப்பு பற்றி விசாரிக்க வேண்டியிருந்தது.

சாதி இந்துக்கள், தீண்டத்தகாதவர்களுக்கு எதிராக சமூகப் புறக்கணிப்பு நடவடிக்கை எடுத்திருந்ததை விசாரிக்கச் சென்றேன். சாலிஸ்காவோனைச் சேர்ந்த தீண்டத்தகாதவர்கள், ரயில் நிலையத்துக்கு வந்து அவர்களுடன் ஓர் இரவு தங்கும்படி கேட்டுக் கொண்டார்கள். சமூகப் புறக்கணிப்பு பிரச்சினையைக் குறித்து விசாரித்து விட்டு நேராக பம்பாய் செல்வதே என் ஆரம்பத் திட்டம். அவர்கள் மிகவும் ஆர்வம் காட்டியதால், அந்த இரவை அவர்களுடன் கழிக்கச் சம்மதித்தேன். தூலியா செல்லும் ரயிலில் ஏறி அந்த கிராமத்துக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளைத் தெரிந்து கொண்டு, அடுத்த ரயிலில் சாலிஸ்காவோனுக்கு வந்தேன்.

ரயில் நிலையத்தில் சாலிஸ்காவோன் தீண்டத்தகாதவர்கள் எனக்காகக் காத்திருப்பதைக் கண்டேன். எனக்கு மாலை அணிவிக்கப்பட்டது. தீண்டத்தகாதவர்கள் குடியிருக்கும் பகுதியான மகர்வாடா, ரயில் நிலையத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தூரத்தில் இருந்தது. அதை அடைவதற்கு ஒரு சிறு வாய்க்கால் பாலம் வழியாக ஆற்றைக் கடந்து செல்ல வேண்டும். ரயில் நிலையத்தில் வாடகைக்குப் பல குதிரை வண்டிகள்

**“ ஒருவன் இந்துவுக்குத் தீண்டத்தகாதவன் என்றால், அவன் பார்சிக்கும் தீண்டத்தகாதவன் என்பதைக் காட்ட ஒரு நிகழ்ச்சியை விவரித்திருந்தேன். ஒருவன் இந்துவுக்குத் தீண்டத்தகாதவன் என்றால், அவன் முகமதியருக்கும் தீண்டத்தகாதவனே என்பதை இந்த நிகழ்ச்சி படம் பிடித்துக் காட்டும். ”**



படிப்பகம்

www.padippakam.com

இருந்தன. ரயில் நிலையத்திலிருந்து மகர்வாடாவும் நடக்கும் தூரத்தில்தான் இருந்தது. மகர்வாடாவுக்கு உடனே அழைத்துச் செல்வார்கள் என நான் எதிர்பார்த்தேன். அந்தத் திசை நோக்கி எந்தச் சலனமும் காணப்படவில்லை. என்னை ஏன் காத்திருக்க வைத்திருக்கிறார்கள் என்பதும் எனக்குப் புரியவில்லை. ஒரு மணி நேரம் கழிந்த பிறகு ஒரு டோங்கா (ஒற்றைக் குதிரைவண்டி) பிளாட்பாரத்துக்கு அருகே கொண்டு வரப்பட்டு அதில் நான் ஏறிக் கொண்டேன். அந்த டோங்காவில் இருந்தது, நானும் அந்த வண்டி ஓட்டியும் தான்: மற்றவர்கள் குறுக்கு வழியில் நடந்து சென்றார்கள். டோங்கா 200 அடிகூட சென்றிருக்காது, அது ஒரு மோட்டார் காருடன் நேருக்கு நேர் மோதியிருக்கும். நாள் தோறும் வாடகைக்கு வண்டி ஓட்டும் அந்த ஆள் இவ்வளவு தூரம் அனுபவமில்லாதவராக இருப்பது, எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளித்தது. காவலரின் உரத்த குரலினால் கார் ஓட்டுநர் காரைப் பின்னுக்கு செலுத்தியதால்தான் விபத்து தவிர்க்கப்பட்டது.

எப்படியோ ஆற்றைக் கடக்க வேண்டிய வாய்க்கால் பாலத்துக்கு வந்து விட்டோம். எந்த ஒரு பாலத்திலும் உள்ளதுபோல், இந்த வாய்க்கால் பாலத்திலும் பக்கச் சுவர்கள் கிடையாது. அய்ந்து அல்லது பத்தடி இடைவெளியில் கல்வரிசைதான் இருந்தது. நாங்கள் சென்று கொண்டிருந்த சாலையின் நேர் கோணத்தில் ஆற்றின் வாய்க்கால் பாலம் இருந்தது. சாலையிலிருந்து செல்லும்போது செங்குத்தாகத் திரும்ப வேண்டிய அவசியம் இருந்தது. ஆரம்பத்திலிருந்த முதல் பக்கவாட்டுக் கல்லின் அருகிலேயே குதிரை நேராகச் செல்லாமல் அதன் மீது மோதியது. டோங்காவின் சக்கரம் பக்கக் கல்லுடன் பலமாக மோதியதில் நான் தூக்கி எறியப்பட்டு, வாய்க்கால் பாலத்தின் கல் பரப்பிய தளத்தில் விழுந்தேன். அந்தக் குதிரையும் வண்டியும் வாய்க்கால் பாலத்திலிருந்து ஆற்றில் விழுந்தன. நான் விழுந்ததில் எனக்கு மயக்கம் ஏற்பட்டுவிட்டது.

ஆற்றின் மறுகரையில் மகர்வாடா குடியிருப்பு இருந்தது. என்னைப் பார்ப்பதற்கு ரயில் நிலையம் வந்திருந்தவர்கள் எங்களுக்கு முன்பே அங்கு சென்றடைந்திருந்தார்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகளின் அழுகுரல்களுக்கும் பரிதாபப் புலம்பல்களுக்கும் இடையே என்னை மகர் வாடாவுக்குத் தூக்கிச் சென்றார்கள். எனக்குப் பல காயங்கள் ஏற்பட்டிருந்தன. காலில் எலும்பு முறிந்ததால், பல நாட்களுக்கு நான் நடக்க முடியாமல் இருந்தேன். இது எப்படி ஏற்பட்டது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. டோங்காக்கள் நாள்தோறும் வந்து கொண்டும் போய்க் கொண்டுந்தான் இருக்கின்றன. ஒரு முறைகூட டோங்கா ஓட்டிகள், அந்த வாய்க்கால் பாலத்தில் பத்திரமாக செல்லத் தவறியதில்லை.

விசாரித்ததில் எனக்கு உண்மையான தகவல்கள் தெரிந்தன. ரயில் நிலையத்தில் ஏற்பட்ட தாமதத்திற்குக் காரணம், டோங்காவாலாக்கள் யாரும் தீண்டத்தகாதவரை வண்டியில் ஏற்றிச் செல்லத் தயாரில்லை. அது அவர்களுடைய தன்மானத்திற்கு இழுக்கு. நான் அவர்களுடைய குடியிருப்புகளுக்கு நடந்து செல்வது மகர்களுக்கு விருப்பமில்லை. என் மீது அவர்கள் வைத்திருந்த மதிப்புக்கு இது சரிப்படாது. ஓர் இணக்கமான முடிவு ஏற்பட்டது. அந்த முடிவு இதுதான்: டோங்காச் சொந்தக்காரர் வண்டியை வாடகைக்குக் கொடுப்பார். ஆனால், வண்டியை அவர் ஓட்டமாட்டார். மகர்கள் டோங்காவைப் பெற்றுக் கொண்டு அதை ஓட்டுவதற்கு ஒருவனை ஏற்பாடு செய்ய வேண்டும். இது ஒரு நல்ல தீர்வு என்று மகர்கள் நினைத்தனர்.

பயணியின் கவுரவப் பிரச்சினையைவிட, பாதுகாப்பான பயணமே மிகவும் முக்கியமானது என்பதை அவர்கள் மறந்துவிட்டதாகத் தெரிகிறது. அவர்கள் இதைப் பற்றி சிந்தித்திருந்தால், என்னைப் பத்திரமாகக் கொண்டு செல்லும் ஒரு வண்டிக்காரர் கிடைப்பாரா என்பதைப் பற்றிச் சிந்தித்திருப்பார்கள். அவர்களில் யாருக்கும் வண்டி ஓட்டத் தெரியாது. ஏனெனில், அது அவர்கள் தொழிலல்ல. எனவே, அவர்கள் தங்களில் ஒருவனை வண்டி ஓட்டக் கேட்டிருக்கிறார்கள். அந்த நபர் லகானைக் கையில் எடுத்துக் கொண்டு அது ஒரு பெரிய விஷயமில்லை என்று நினைத்திருக்கிறான். ஆனால், தன்னுடைய பொறுப்பை உணர்ந்த அவன், பயத்தினால் அதைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளை விட்டுவிட்டான்.

**ஓர் இந்து டோங்காவாலா, ஒரு கடைநிலை வேலைக்காரனைப் போன்ற நிலையிலிருந்தாலும், தான் மற்ற எல்லா தீண்டத்தகாதவர்களையும் விட - ஏன் பாரிஸ்டரையும் விடக்கூட உயர்ந்தவன் என்ற எண்ணம் கொண்டவன் என்பதைத் தெரிந்து கொண்டேன்.**

என்னுடைய கவுரவத்தைக் காப்பாற்ற நினைத்த சாலிஸ்காவோன் மகர்கள், என் உயிருக்கே ஆபத்தைக் கொண்டு வந்தார்கள். அப்பொழுதுதான் எனக்குப் புரிந்தது. ஓர் இந்து டோங்காவாலா, ஒரு கடைநிலை வேலைக்காரனைப் போன்ற நிலையிலிருந்தாலும், தான் மற்ற எல்லா தீண்டத்தகாதவர்களையும் விட - ஏன் பாரிஸ்டரையும் விடக்கூட உயர்ந்தவன் என்ற எண்ணம் கொண்டவன் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

••

1934 ஆம் ஆண்டு. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இயக்கத்தில் என்னுடன் பணி செய்தவர்கள் ஒரு சுற்றுலாவுக்குச் செல்ல வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தனர். நானும் அதில் கலந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினர். இதற்கு நானும் சம்மதம் தெரிவித்தேன். வேருலிலுள்ள புத்த சமயக் குகைகளுக்கும் செல்ல வேண்டும் என்பது திட்டத்தில் இருக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. நான் நாசிக் செல்ல வேண்டுமென்றும், குழு என்னை நாசிக்கில் சந்திப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

நாங்கள் சில பேருந்துகளையும் சுற்றுலா கார்களையும் வாடகைக்கு எடுத்திருந்தோம். எங்கள் எண்ணிக்கை 30 ஆக இருந்தது. இயோலா, நாசிக்கிலிருந்து அவுரங்காபாத்துக்குச் செல்லும் வழியிலிருந்ததால், இயோலாவுக்குப் புறப்பட்டோம். எங்கள் பயணத் திட்டத்தை வேண்டுமென்றே



படிப்பகம்

www.padippakam.com

நாங்கள் வெளிப்படையாக அறிவிக்கவில்லை. ஒரு தீண்டத் தகாத சுற்றுலாப் பயணி, நாட்டின் தொலைதூரப் பகுதிகளில் சந்திக்க வேண்டியிருக்கும் கஷ்டங்களைத் தவிர்ப்பதற் காகவே, நாங்கள் பிறர் அறிந்து கொள்ளா வண்ணம் பயணமாகத் திட்டமிட்டோம். எங்கே தங்க வேண்டுமென்று நாங்கள் தீர்மானித்திருந்தோமோ அந்த இடங்களிலுள்ள எங்கள் மக்களுக்கு மட்டும் தகவல் கொடுத்திருந்தோம். ஆகையால், போகும் வழியில் நிஜாம் ச்மஸ்தானத்தில் பல கிராமங்களைக் கடந்து சென்றாலும், எங்களைச் சந்திக்க எங்கள் மக்கள் யாரும் வரவில்லை.

எதிர்பார்த்தபடியே, தவுலாதாபாத்தில் நிலைமை வேறு விதமாக இருந்தது. அங்கு நாங்கள் வருவதைப் பற்றி எங்கள் மக்களுக்கு அறிவித்திருந்தோம். நகர வாயிலில் குழுமியிருந்த அவர்கள் எங்களுக்காகக் காத்திருந்தனர். சில நிமிடங்களில் நாங்கள் கோட்டை வாயிலை அடைந்தோம். முகமதியர்கள் நோன்பு இருக்கும் ரம்ஜான் மாதம் அது. கோட்டை வாயிலுக்கு வெளியே ஒரு சிறிய குளம். தண்ணீர்

கோட்டைக்குள் செல்ல நாங்கள் அனுமதிக்கப்பட்டோம். ஆனால், உள்ளே எந்தத் தண்ணீரையும் நாங்கள் தொட்டு விடக் கூடாது என்று சொல்லப்பட்டது. ஆயுதம் தாங்கிய சிப்பாய் ஒருவன், நாங்கள் இந்த ஆணையை மீறுகிறோமா என்று கண்காணிக்க எங்களுடன் புறப்பட்டான்.

நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. சுற்றிலும் கற்கள். பாவப் பட்ட அகலமான நடைபாதையிருந்தது. பிரயாணத்தின் போது எங்கள் முகங்கள், உடல்கள், ஆடைகள் எல்லாம் ஒரே புழுதிமயமாகி விட்டன. நாங்கள் எல்லோரும் உடலைக் கழுவிக் கொள்ள விரும்பினோம். அதிகம் சிந்தனை செய்யாமல், எங்கள் குழுவைச் சேர்ந்த சிலர் முகத்தையும் கால்களையும் குளத்துத் தண்ணீரில் கழுவினார் கள். இப்படிச் சுத்திகரித்த பிறகு நாங்கள் கோட்டை வாயிலுக்குச் சென்றோம். ஆயுதம் தாங்கிய சிப்பாய்கள் உள்ளே இருந்தனர். பெரிய வாசல் கதவுகளைத் திறந்து விட்டு, வில் போன்று வளைந்திருந்த நுழைவாயிலுக்குள் எங்களை அனுமதித்தார்கள்.

கோட்டைக்குள் செல்ல எப்படி அனுமதி பெறவேண்டும் என்பதைப் பற்றி காவலாளியிடம் கேட்க அப்பொழுதுதான் ஆரம்பித்தோம். இதற்கிடையில் பின்னாலிருந்து வந்து கொண்டிருந்த ஒரு வயதான வெள்ளைத் தாடியுடன் கூடிய முகமதியர் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார். 'தெத்கள்' (தீண்டத்தகாதவர்கள் என்ற பொருளில்) குளத்தை அசுத்தம் செய்துவிட்டார்கள் என்று கூப்பாடு போட்டார். உடனே அரு கிலிருந்த எல்லா இளம் மற்றும் வயதான முகமதியர்களும் அவருடன் சேர்ந்து கொண்டு, எங்களை வசை பாட ஆரம் பித்தனர். தெத்களுக்குக் கர்வம் பிடித்து விட்டது. தெத்கள் தங்களுடைய மதத்தை மறந்து விட்டனர் (அதாவது தாழ்ந்தும் இழிந்த நிலையில் இருப்பது). தெத்களுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும். மிகவும் அச்சுறுத்தும் நிலையில் அவர் கள் காணப்பட்டனர். அவர்கள் தாக்கும் மனநிலையுடன் இருந்தனர். நாங்கள் வெளியூர்க்காரர்கள் என்றும், எங் களுக்கு உள்ளூர் பழக்க வழக்கங்கள் தெரியாது என்றும் சொன்னோம். அவர்கள் தங்கள் கோபக்கனலை உள்ளூர் தீண்டத்தகாதவர்கள் மீது வீசினர். இந்தக் குளத்தைத் தீண்டத் தகாதவர்கள் பயன்படுத்தக் கூடாது என்பதை நீங்கள் ஏன் வெளியூர்க்காரர்களுக்குச் சொல்லவில்லை? இந்தக் கேள்வியை அவர்கள் திரும்பத் திரும்பக் கேட்டனர்.

பாவம் அவர்கள்! நாங்கள் குளத்தில் இறங்கியபோது அவர்கள் அங்கு இல்லை. உண்மையில் அது எங்கள் தவறு தான். நாங்கள் விசாரிக்காமல் இறங்கி விட்டோம். தங்களு டைய தவறில்லை என்று அவர்கள் ஆட்சேபித்தார்கள். என்னுடைய விளக்கத்தை முகமதியர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. எங்களையும் உள்ளூர்வாசிகளையும் அவர்கள் வசைபாடிக் கொண்டிருந்தார்கள். எங்களை எரிச்சலூட்டு மளவுக்கு அவர்கள் மிகவும் ஆபாசமாகத் திட்டித் தீர்த்தார் கள். இத்தகைய சூழ்நிலைமையில் அப்போது கலகமும் ஏன் கொலைகளும்கூட நடைபெற்றிருக்கக்கூடும். இருப்பினும், நாங்கள் எங்களை அடக்கிக் கொள்ள வேண்டியிருந்தது. எங்கள் பயணத்தைத் திடீர் முடிவுக்குக் கொண்டு வந்து விடும் ஒரு கிரிமினல் வழக்கில் நாங்கள் சம்பந்தப்பட விரும்பவில்லை.

தீண்டத்தகாதவர்கள் பொதுக்குளத்திலுள்ள தண்ணீரை பயன்படுத்தக் கூடாது என்ற பொருளில், ஒவ்வொருவரும் அவரவருடைய மத ஆசாரங்களைப் பின்பற்ற வேண்டு மென்று, கூட்டத்திலிருந்த ஒரு முஸ்லிம் இளைஞர் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தார். நான் பொறுமையை இழந்து ஒருவித கோபமான குரலில் கேட்டேன் : "இதைத்தான் உங்கள் மதம் போதிக்கிறதா? முகமதியனாக மாறினால், ஒரு தீண்டத்தகாதவனை இந்தக் குளத்திலிருந்து தண்ணீர் எடுக்கக் கூடாது என்று தடுப்பீர் களா?" இந்த நேரடியான கேள்விகள், அந்த முகமதியர் களிடம் கொஞ்சம் மாற்றத்தை ஏற்படுத்தியது. ஒரு பதிலும் கூறாது அமைதியாக நின்று கொண்டிருந்தனர். காவல்காரரை நோக்கி நான் கோபமாகக் கேட்டேன் : "கோட்டைக்குள் நாங்கள் போகலாமா, இல்லையா? முடியாது என்றால் நாங்கள் இங்கு காத்திருக்க விரும்பவில்லை, சொல்லுங் கள்." காவல்காரர் என் பெயரைக் கேட்டார். நான் அதை ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதிக் கொடுத்தேன். அதை அவர் கண்காணிப்பாளரிடம் உள்ளே எடுத்துச் சென்று கொடுத்து விட்டு வெளியே வந்தார். கோட்டைக்குள் செல்ல நாங்கள் அனுமதிக்கப்பட்டோம். ஆனால், உள்ளே எந்தத் தண்ணீரை யும் நாங்கள் தொட்டுவிடக் கூடாது என்று சொல்லப்பட்டது. ஆயுதம் தாங்கிய சிப்பாய் ஒருவன், நாங்கள் இந்த ஆணையை மீறுகிறோமா என்று கண்காணிக்க எங்களுடன் புறப்பட்டான்.

ஒருவன் இந்துவுக்குத் தீண்டத்தகாதவன் என்றால், அவன் பார்சிக்கும் தீண்டத்தகாதவன் என்பதைக் காட்ட ஒரு நிகழ்ச்சியை விவரித்திருந்தேன். ஒருவன் இந்துவுக்குத் தீண்டத்தகாதவன் என்றால், அவன் முகமதியருக்கும் தீண்டத்தகாதவனே என்பதை இந்த நிகழ்ச்சி படம் பிடித்துக் காட்டும். •



படிப்பகம்

www.padippakam.com

இறைவனின் திருப்பெயரால்...

# உணர்வு

ஒடுக்கப்பட்டோரின் உரிமைக் குரல்

வார இதழ்

- ☑ சார்பற்ற தலையங்கம்
- ☑ புதைக்கப்பட்ட செய்திகளின் களத்தொகுப்பு
- ☑ கூர்மையான விமர்சனக் கட்டுரைகள்
- ☑ கல்வி மற்றும் சமூக நோக்கு தகவல்கள்
- ☑ மனித உரிமை பற்றிய சிந்தனைப் பதிவுகள்

**உள்ளங்களை தட்டியெழுப்பும் "உணர்வு"**
**உங்கள் இல்லங்களைத் தேடிவர இணைவீர் சந்தாதாரர்களாக!**

சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| உள்நாடு | ஓராண்டு | - ரூ 310/- |
| | அரையாண்டு | - ரூ 155/- |
| வெளிநாடு | ஓராண்டு | - ரூ 1000/- |
| | அரையாண்டு | - ரூ 500/- |

**தனி இதழ் ரூ 6/-**

உங்கள் M.O. மற்றும் D.D.க்களை MUSLIM MEDIA TRUST என்ற பெயரில் எடுத்து அனுப்ப வேண்டிய முகவரி:

**உணர்வு,** தபால் பெட்டி எண் : 1773
7, வட மரைக்காயர் தெரு, சென்னை - 1.
போன் : 25228066, 25215226, e-mail : unarvu@eth.net


படிப்பகம்

www.padippakam.com

சாதி இந்து / மீதி இந்து

# இந்து மதத்தை விட்டு வெளியேறுக!

■ தந்தை பெரியார்



இந்து மதத்திலிருந்து அம்பேத்கரும், தாழ்த்தப்பட்டவர்களும் மாத்திரமே அல்லாமல், இந்துக்கள் என்று சொல்லிக் கொண்டவர்களில் தீண்டாதவர்கள் என்பவர்கள் நீங்கிய சுமார் 17 கோடி பேர்களும் கூட, இந்து மதத்தைவிட்டு விலக வேண்டியவர்களேயாவார்கள்.

'இந்து மதம் என்று ஒன்று குறிப்பாக இல்லை' என்று காந்தியாரே ஒப்புக் கொள்ளுகிறார். இந்தியாவுக்கு மகமதியர்கள் முதலிய அயல்நாட்டார்கள் வந்த காலத்தில், இந்தியாவில் உள்ள பல்வேறு தேசவகுப்பு மக்கள் நடந்து கொண்டு வந்த நடவடிக்கைகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும், பல்வேறு சமூகத்தாருடைய சடங்கு, பிரார்த்தனை, வழிபாடு, கடவுள்கள் - முதலாகியவைகளுக்கும் சேர்த்து எல்லாவற்றிற்கும் ஒரே பெயராக இந்து மதம் அதாவது, இந்தியர்களின் மதம் என்பதாகப் பெயரிட்டு விட்டார்கள்.

அக்காலத்தில் இருந்த திராவிடர்களின் பழக்க வழக்கங்களுக்கும் - இந்து மதம் என்றும், ஆரியர்கள் பழக்க வழக்கங்களுக்கும் இந்து மதம் என்றும், மலைநாட்டு மக்கள் பழக்க வழக்கங்களுக்கும் இந்து மதம் என்றும், ஆரிய சமாஜமும் இந்து மதம் என்றும், பிரம்ம சமாஜமும் இந்து மதம் என்றும், வேதாந்தமும் இந்து மதம் என்றும், கடவுளையும், மதத்தையும், சரீரத்தையும், உயிரையும் துறந்த துறவறத்தையும் இந்து மதம் என்றும், பவுத்தர்கள் பழக்க வழக்கங்களுக்கும் இந்து மதம் என்றும், நாத்திகர்களின் கொள்கைகளுக்கும் இந்து மதம் என்றும், இப்படிப் பல விதமாய் அவர்கள், அதாவது கிறிஸ்தவர்கள், முகமதியர்கள் தவிர மற்ற எவர்களது நடவடிக்கைக்கும் இந்து மதம் என்றே பேர் வைத்து விட்டார்கள். அதாவது, இந்தியர்களின் மதம் எனச் சொல்லி விட்டார்கள்.

ஆகவே, இந்து மதம் என்றால் இந்தியர்கள் மதம் என்றுதான் அர்த்தமே ஒழிய, ஒரு தனிப்பட்ட குறிப்பான கொள்கைகளுக்கு இந்து மதம் என்று பெயரில்லை; என்றாலும், அக்காலத்தில் ஆரியர்கள்

**"ஜாதி அகம்பாவம் பிடித்த சோம்பேறிப் பார்ப்பனியக் கூட்டம், தங்களுடைய சுயநலங்களை உத்தேசித்து, இந்து மதம் ஒழியச் சம்மதப்பட மாட்டார்கள் என்பதோடு, "இந்து மதத்தை ஒழிக்க உன்னாலும் முடியாது. உங்கள் பாட்டனாலும் முடியாது" என்று சொல்லுவார்கள்."**



படிப்பகம்

www.padippakam.com

சிறிது செல்வாக்குப் பெற்றிருந்ததால் - அவர்கள் தங்கள் பழக்கம், வழக்கம், சடங்கு, தங்களின் வழிபடு கடவுள்கள் ஆகியவைகளையே பிற இந்தியர்கள் மீதும் சுமத்தி, அதற்கு அதிகமான செல்வாக்கை உண்டாக்கி வைத்துக் கொண்டிருந்த படியால், ஆரியர்கள் பழக்க வழக்கம், சடங்கு, வழிபடு கடவுள், அவர்களது இலக்கிய ஆதாரங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள் என்பன முதலியவைகளே இந்துக்களின் மதமாகவும், மத ஆதாரங்களாகவும் ஆக்கப்பட்டு விட்டன.

ஆரியர்களுக்கு எதிர்ப்பானவைகளும், ஆரியர்கள் அல்லாதவர்களும்கூட, விவகாரத்திற்கு இடமில்லாமல் போகட்டும் என்கின்ற காரியத்திற்காகவே எல்லாம் இந்து மதம்தான், எல்லோரும் இந்துக்கள்தான் என்றும், அதுவும் இந்து மதம், இதுவும் இந்து மதம் என்றும், இந்து மதத்தில் எல்லாக் கொள்கையும் உண்டு என்றும், ஒரு இந்து எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்றும், பல சமயங்கள் சேர்ந்தது இந்து மதம் என்றும், அவ்வப்போது தோன்றிய பல பெரியார்களின் அபிப்பிராயங்கள் எல்லாமுமே இந்து மதமாக இருக்கிறது என்றும், எந்த மதக்கருத்தும் இந்து மதத்தில் உண்டு என்றும், எப்படிப்பட்டவனும் இந்துவாய் இருக்கலாம் என்றும், புத்தர்கள், சமணர்கள், ஜெயினர்கள் எல்லாருடைய அபிப்பிராயமும் இந்து மதத்தில் இருந்து வந்தது தான் என்றும், இந்து மதத்துக்குப் பொருத்தமானதே என்றும் சொல்லி, பொதுவாக இன்று முகமதியர்கள், கிறிஸ்தவர்கள் அல்லாத எவரும் இந்துக்கள் என்றே சொல்லக்கூடிய நிலையை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

இந்து மதம் என்பதாக இந்துக்களுடைய பழைய ஆதாரங்கள் என்று சொல்லும்படியான எதிலும் ஒரு வார்த்தைகூட கிடையாது. இந்தியாவின் பெயரைக் குறிப்பதற்கு 'இந்துஸ்தான்' என்று ஒரு வார்த்தை காணப்படலாமோ என்னமோ - அது கூட தைரியமாய்ச் சொல்வதற்கு இல்லை. இந்தியா என்கின்ற பெயர் கூட இந்துமத ஆதாரங்கள் என்பவைகளில் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்து மதம் என்பதற்கு என்னதான் அர்த்தம் என்று பழைய - அதாவது சுமார் 100 வருஷம் 200 வருஷம் முந்திய அய்ரோப்பிய அகராதிகளையும், அய்ரோப்பிய கலைகளையும் பார்ப்போமானால், முகமதியர்கள் அல்லாதவர்கள் அனுஷ்டிக்கும் மதம் என்றும், ஆரியர்களின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகின்றவர்களுக்குச் சொல்லும் மதப் பெயர் என்றும், ஆரியர்கள் அனுஷ்டிக்கும் மதம் என்றும், ஆரியர்களின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகின்றவர்களுக்குச் சொல்லும் மதப் பெயர் என்றும், ஆரியர்கள் அனுஷ்டிக்கும் ஆச்சார அனுஷ்டானங்கள் என்றும்தான் காணப்படுகின்றனவே அன்றி, வேறு ஒன்றும் சொல்லப்படுவதாகக் காண முடியவில்லை. இந்து மதம் பிரத்தியட்சத்தில் என்னமாய் இருக்கிறது என்று பார்ப்போமானால், விக்கிரகங்களை வணங்குவது, ஜாதி வித்தியாசங்களை, உயர்வு - தாழ்வுகளைப் பாராட்டுவது ஆகிய இந்த இரண்டு காரியம் தான் - இந்த உலகத்தில் வேறு எந்த தேச மக்களிடத்திலும் வேறு எந்த மதங்களிடத்திலும் இல்லாத குணங்கள் இருந்து கொண்டு வருகிறது.

இந்த இரண்டு காரியங்களைப் பற்றி அறிஞர்கள் என்பவர்கள், வெகுகாலத்துக்கு முன்பே தவறுதலானது என்றும் - அவசியமற்றது என்றும் முடிவு கட்டி விட்டார்கள். அதற்கும் பல ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் உள்ள பெரியார்கள் என்பவர்களுடைய வாக்கும், உபதேசமும் இருந்து வருகிறது. இவைகளையும் இந்து மத ஆதாரங்களாகவும், அப்பெரியார்களையும் இந்து மதத்தில் தெய்வீகாம்சம் பெற்றவர்கள் என்றும் சொல்லப்படுவதோடு, விக்கிரக ஆராதனையில் நம்பிக்கை இல்லாதவனும், ஜாதி வித்தியாசம், உயர்வு - தாழ்வு ஆகியவற்றை வெறுப்பவனும், இகழ்பவனும்கூட இந்துதான் என்றும், அதற்கு ஆதாரம் இந்து மதத்தில் இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது.

ஆகவே, இப்போது எது இந்து மதம், எது இந்து மதம் அல்லாதது என்று சொல்ல முடியாத நிலையில் இருக்கிறோம்.

ஆனால், தேசியத் தலைவர்கள், மதத் தலைவர்கள் என்று சொல்லப்பட்டவர்களான தோழர்கள் காந்தியார், மாளவியார் முதலாகியவர்கள் இந்து மதம் என்று எதைச் சொல்லுகிறார்கள் என்று பார்த்தால், வருணாசிரமத்தை பரிசுத்தமாக்கி நிலை நிறுத்துவதுதான் இந்துமதம் என்கிறார் காந்தியார்; களிமண்ணும் கங்கை ஜலமும் கூடவே இருக்க வேண்டியதுதான் இந்து மதம் என்று செய்து காட்டுகிறார் மாளவியார்.

**சித்திரத்தில் படம் எழுதக்கூட ஒரு இந்துவின் பழைய சின்னம் இல்லாத அளவுக்கு இந்து மதம் என்னும் புரட்டான ஒரு கட்டும் - சூழ்ச்சியும் அழிய வேண்டியது அவசியம் என்றும், அது அழிந்து போகப் போவது உறுதிதான் என்றும் தைரியமாய்க் கூறுவோம்.**

முகமதிய ஆதிக்கம் தலையெடுக்காமல் செய்வதுதான் இந்து மதம் என்கிறார் மூஞ்செயரும், பரமானந்தரும். மற்றபடி, சங்கராச்சாரிகளுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? ராமானுஜாச்சாரியினுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? பண்டாரச் சன்னதிகளுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? மநுதர்ம சாஸ்திர இந்து மதம் எப்படிப்பட்டது? புராணங்களுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? சைவர்களுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? மற்றும், பார்ப்பனரல்லாத சைவர்களுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? வைணவர்களுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? என்பவைகளைப் பற்றி நாம் விவரிக்க இதில் இடம் வைத்துக் கொள்ளவில்லை.

எப்படி இருந்தாலும், இஸ்லாமியர்களைப் போலவும், கிறிஸ்தவர்களைப் போலவும், மதம் என்பதற்கு இருந்து வரும் ஆதாரம், கொள்கை, குறிப்பிட்டவர்களுடைய உபதேசம் என்பதாக எதுவும் இல்லாமல், வார்த்தை அளவில் குருட்டு அபிமான அளவில் இந்து மதம் இருந்து வருகிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

இந்த லட்சணத்தில் உள்ள இந்து மதம், ஒரு மனிதனை தீண்டக் கூடாதவன் என்றும், ஒரு மனிதனை தாசி மகன், வைப்பாட்டி மகன், அடிமை மகன் என்றும் சொல்லிக் கொண்டு, உரிமையும் பாராட்டி, 100க்கு 97 மக்களை சுயமரியாதை அற்றவர்களாக்கி, 100க்கு 25 மக்களை தீண்டாதவர்கள், சண்டாளர்கள் என்று இழிவுபடுத்தி வருவதென்றால், இப்படிப்பட்ட இந்து மதம் உலகில் எதற்காக இருக்க வேண்டும்? இது அடியோடு ஒழிக்கப்படுவதில் என்ன தப்பு என்றுதான் கேட்கின்றோம்!

ஜாதி அகம்பாவம் பிடித்த சோம்பேறிப் பார்ப்பனீயக் கூட்டம், தங்களுடைய சுயநலங்களை உத்தேசித்து, இந்து மதம் ஒழியச் சம்மதப்பட மாட்டார்கள் என்பதோடு, ''இந்து மதத்தை ஒழிக்க உன்னாலும் முடியாது. உங்கள் பாட்டனாலும் முடியாது'' என்று சொல்லுவார்கள். ஆனால், அது வேறு விஷயம்.

தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்த ஒரு ஆள் இந்து மதத்தை விட்டு விடுகிறேன் என்றும், 'சண்டாளர்கள்', 'இழிமக்கள்' என்று சொல்லக்கூடிய ஒரு கூட்ட மக்களின் மாநாட்டில், 'இந்து மதத்தை விட்டுவிட வேண்டும்' என்று ஒரு தீர்மானம் செய்தவுடன், இமய மலை முதல் கன்னியாகுமரி வரையில் உள்ள தேசியத் தலைவர்கள், தேசிய பத்திராதிபர்கள், 'மகாத்மா'க்கள், மாளவியர்கள், இந்து மதத் தலைவர்கள், 'வீரர்கள்', 'தியாகிகள்', 'சத்தியாக்கிரகிகள்' எல்லாருக்குமே தலையில் இடிவிழுந்தது போல் ஆகிவிட்டதுடன், அதற்காக எத்தனைப் பொய், புரட்டு, ஏமாற்று, தந்திரம் ஆகிய இழி காரியங்கள் எல்லாம் செய்ய, ''அம்பேத்கர் அவ்வளவு பெரிய மனுஷன் அல்ல'' என்றும் ''பம்பாய் மாகாண தீண்டப்படாதார் மாநாடு தக்க பிரதிநிதித்துவம் பொருந்தியது அல்ல'' என்றும், தாங்கள் கூப்பாடு போடுவது போதாமல், அவ்வகுப்பிலேயே பல வயிற்றுச் சோற்றுக் கருப்பன்களைப் பிடித்து, ஒருதிராம் இரண்டு திராம் சாராயம் வாங்கிக் கொடுத்து எழுதச் சொல்லியும் எழுதி னதாக ஒப்புக் கொள்ளச் சொல்லியும், இவ்வளவு பாடுபடுவதைப் பார்க்கும் போதே, முடியாது என்று சொல்பவர்கள் உண்மையாக நம்புகிறார்களா அல்லது பயந்து நடுங்கி அப்படி உளறுகிறார்களா என்பது விளங்கும்.

இந்து மதம், நாளுக்கு நாள் ஒழிகிறதா இல்லையா என்பதும், பிற மதம் நாளுக்கு நாள் ஓங்குகிறதா இல்லையா என்பதும் - ஒரு 50 வருஷம் ஜன கணிதத்தைப் பார்த்தால், தானாகவே விளங்கும். இந்து மதத்தை ஒழிக்க வேண்டும் என்று முயற்சி செய்தவர்கள், இப்பார்ப்பனர்களுடைய மிரட்டலுக்குப் பயப்படாமல், சித்திரத்தில் படம் எழுதக்கூட ஒரு இந்துவின் பழைய சின்னம் இல்லாத அள வுக்கு இந்து மதம் என்னும் புரட்டான ஒரு கட்டும் - சூழ்ச்சியும் அழிய வேண்டியது அவசியம் என்றும், அது அழிந்து போகப் போவது உறுதிதான் என்றும் தைரியமாய்க் கூறுவோம். ●

*- 'குடிஅரசு', 27.10.1935*




பெரியார் வாழ்ந்த காலம் :

**94 ஆண்டுகள், 3 மாதங்கள், 7 நாட்கள்**

சுற்றுப் பயணம் செய்த நாட்கள் :

**8,200 நாட்கள்**
**39 வெளிநாட்டுப் பயணங்கள்**

பயணம் செய்த தூரம் :

**13,12,000 கிலோ மீட்டர்கள்**
**இது, பூமியின் சுற்றளவைவிட 33 மடங்கு பெரியது.**
**பூமிக்கும் நிலவுக்கும் இடையே உள்ள தூரத்தைவிட மூன்று மடங்கு பெரியது.**

பங்கேற்றக் கூட்டங்கள் :

**10,700 கூட்டங்களில் பங்கேற்று,**
**891 நாட்கள்**
**21,400 மணிநேரங்கள்**
**12,84,300 வினாடிகள்**
**77,04,000 நொடிகள்**
**உரை நிகழ்த்தியிருக்கிறார்.**

சிறப்புக் குறிப்பு :

**பெரியாரின் அனைத்து உரைகளையும் ஒலிநாடாவில் பதிவு செய்து இயக்கினால், அது தொடர்ந்து**
**2 ஆண்டுகள்**
**5 மாதங்கள்**
**11 நாட்கள் வரை ஓடிக்கொண்டே இருக்கும்.**



படிப்பகம்

www.padippakam.com

# சேகுவேராவின் கனவிலிருந்து போராட்டத்திற்கு



எமது புதிய வெளியீடுகள் :

| | |
|---|---|
| லுமும்பா : இறுதி நாட்கள் - லியூடோ டி விட்டே | ரூ. 150.00 |
| ஒடுக்கப்பட்டவர்கள் : விடுதலையின் வடிவங்கள் - ப்ரான்ஸ் பனான் | ரூ. 120.00 |
| ஒரு தலித்திடமிருந்து... - வசந்த் மூன் | ரூ. 85.00 |
| வன்மம் - பாமா | ரூ. 60.00 |
| வஹாபி, பராஷி கலகங்கள் - நரஹரி கவிராஜ் | ரூ. 50.00 |
| புதிய கையெழுத்து: தற்காலத் தெலுங்குக் கவிதைகள் | ரூ. 40.00 |

- உலகத்தைக் கண்டறிய விரும்பிய சேகுவேரா, தென் அமெரிக்கக் கண்டம் முழுவதும் மேற்கொண்ட பயணத்தைப் பற்றி சே எழுதிய **மோட்டார் சைக்கிள் நாட்குறிப்புகள்.**
- சேகுவேரா தனது தாய்நாட்டுக்கு ஒருபோதும் திரும்பி வராதவாறு பயணம் மேற்கொண்டு, கியூபப் புரட்சியாளர் பிடல் காஸ்ட்ரோவுடன் இணைந்து, கியூபாவுக்குக் கிளம்பும் வரையில் சே எழுதிய **மத்திய அமெரிக்கப் பயண நாட்குறிப்புகள்.**
- கியூப அரசில் பிடலுக்கு அடுத்த இடத்தில் இருந்த சேகுவேரா, தனது குடும்பம், பதவி, மகிழ்ச்சியான வாழ்க்கை என அனைத்தையும் உதறிவிட்டு, காங்கோவில் நடைபெற்ற புரட்சிகர யுத்தத்தில் பங்கேற்ற தனது அனுபவங்களைப் பற்றி சே எழுதிய **காங்கோ : புரட்சிகர யுத்தத்தின் கதை.**
- மேற்கண்ட மூன்று நூல்களும் தமிழில் கனவிலிருந்து போராட்டத்திற்கு என்னும் ஒரே நூலாக வெளிவருகின்றது. சேகுவேராவின் புதியனவற்றைக் கண்டறியும் வேட்கை - மனித நேயமாகவும், புரட்சியின் மூலம் உலகத்தை மாற்றுவதற்கான அரசியல் உணர்வாகவும், போராட்டத்தில் நேரடியாகப் பங்கெடுக்கும் லட்சியப் பூர்வமான நடைமுறையாகவும் எவ்வாறு வளர்ச்சியடைகிறது என்பதை சேவின் எழுத்துகளிலிருந்தே புரிந்து கொள்ள உதவும் நூல் இது. 784 பக்கங்களில் மிக நேர்த்தியாக வெளிவரும் இந்நூலின் விலை. ரூ. 300. தற்போது ரூ. 250க்குக் கிடைக்கும்.

**விடியல்**
ப தி ப் ப க ம்

11, பெரியார் நகர், மசக்காளிபாளையம்
(வடக்கு) கோயம்புத்தூர் - 641 015
தொலைபேசி : 0091 422 - 257 67 72
மின்னஞ்சல் : vitiyal2000@eth.net

---

மதுரையில் நல்லதோர் புத்தக மய்யம்

# பாரதி புக் ஹவுஸ்

D-28, மாநகராட்சி ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்
பஸ் ஸ்டாண்ட், (உட்புறம் - தென்புறம்)
பெரியார் பேருந்து நிலையம்
மதுரை - 625 001

'தலித் முரசு', 'தலித் முரசு' வெளியீடுகள்,
'விடியல்' பதிப்பக வெளியீடுகள்,
'அடையாளம்' வெளியீடுகள், 'கீழைக்காற்று',
'வைகை' வெளியீடுகள், 'சவுத் விஷன்', 'நியூசெஞ்சுரி',
'நேஷனல் டிக்டிரஸ்ட்', 'சாகித்ய அகாதெமி' வெளியீடுகள்,
தலித் இலக்கியங்கள் மற்றும் சமூகவியல்,
நவீன இலக்கியங்கள், நுண்கலைகள் சார்ந்த அனைத்துப்
புத்தகங்களும், அனைத்துச் சிற்றிதழ்களும் கிடைக்கும்.

ஞாயிறும் விற்பனை உண்டு

---

அடையாளம்

**ஈழத்து தலித்திய முன்னோடி**
**கே. டானியலின் ஆறு நாவல்கள்**

○ பஞ்சமர் ○ கோவிந்தன் ○ அடிமைகள் ○ கானல்
○ பஞ்ச கோணங்கள் ○ தண்ணீர்

முன்வெளியீட்டுத் திட்டம்

சுமார் 1150 பக்கங்களில்
நேர்த்திமிகு வடிவில்
மார்ச் 2003இல் வெளிவருகிறது

**சிறப்புச் சலுகை ரூ.~~500~~ ரூ.350**
**இந்தியாவில் அஞ்சல் செலவு இலவசம்**

இச்சலுகை மார்ச் 15, 2003 வரை மட்டுமே. M.O/D.D அனுப்புக. V.P.Pயில் பெற அஞ்சலட்டையில் எழுதுக. வெளிநாடுகளுக்கு அஞ்சல் செலவு சேர்த்து $20 அனுப்புக. வெளியூர் டிராஃப்ட்/காசோலைக்கு ADAIYALAM, MANAPARAI என்ற பெயரில் ரூ.25 சேர்த்து அனுப்ப வேண்டும்.

**அடையாளம்**
1208 இரண்டாவது தளம்
கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621 310.
பேச 04332 273444 email: sales@adaiyalam.com

www.padippakam.com

# அதிரடிப் படையினரின் அத்துமீறல்

■ கோ. சுகுமாரன்



அதிரடிப்படையால் பாதிக்கப்பட்ட பெண்களில் சிலர்

"ஒற்றனைப்போல ரகசியமாய் வீசும் காற்று
இரவு
ஊளையிடும் நாய்களுக்கும்
உறுமிச் செல்லும் டிரக்குகளுக்குமுரியது
பகலெனப்படுவது
இரண்டு ஊரடங்குச் சட்டங்களிற்கு
இடையில் வரும்பொழுது

தெருவெனப்படுவது
ஒரு காவலரணில் தொடங்கி
இன்னொரு காவலரணில் முறிந்து நிற்பது

இதில் வாழ்க்கையெனப்படுவது
சுற்றிவளைக்கப்பட்ட
ஒரு மட்டுக்கனவு."

- நிலாந்தன்

அதிரடிப்படையால் மக்களுக்கு ஏற்பட்ட பாதுகாப்பு பற்றி சதாசிவம் கமிஷன் விசாரணை மேற்கொண்டுவரும் இவ்வேளையில், தமிழக - கர்நாடக எல்லைப் பகுதி கிராமங்களில் மீண்டும் அதிரடிப் படையின் அத்துமீறல்கள் அரங்கேறி வருகின்றன. கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பா கொல்லப் பட்டதைத் தொடர்ந்து, வீரப்பனைப் பிடிக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசும், கர்நாடக - தமிழக அரசுகளும் அறிவித்துள்ளன.

ஆனால், வீரப்பன் பதுங்கி இருப்பதாகக் கருதப் படும் காட்டிலுள்ள கிராமங்களில் அறிவிக்கப்படாத 'நெருக்கடி நிலை' நிலவுகிறது. மக்கள் பீதியுடன் வாழ்ந்து வருகின்றனர். பத்திரிகையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் என எவரும் இப்பகுதிக்குள் அனுமதிக்கப்படுவதில்லை. இந்நிலையில், மக்கள் கண்காணிப்பகத்தைச் சேர்ந்த உண்மையறியும் குழுவினர், மிகுந்த போராட்டத்திற்குப் பிறகு அங்கு சென்று வந்துள்ளனர். இக்குழு அளித்துள்ள அறிக்கை, அதிரடிப்படையின் அடக்குமுறையை வெளிக்கொண்டு வந்துள்ளது.

கர்நாடக எல்லையிலுள்ள கிராமங்களில் பல காலமாக வசித்து வரும் தமிழர்கள், அங்கிருந்து வெளியேற வேண்டுமென கர்நாடக வனத்துறையினர் உத்தரவிட்டுள்ளனர். கர்நாடக அதிரடிப்படையினரின் வற்புறுத்தலின் பேரிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. குறிப்பாக, கர்நாடாவில் உள்ள கோபிநத்தம், ஆத்தூர், ஜம்புருட்டு, அப்புக்காம்பட்டி, மாருக்கொட்டாய், ஒகேனக்கல் ஆகிய கிராமங்களில் வசிக்கும் தமிழர்கள் வெளியேறும்படி கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இதில் ஜம்புருட்டு, அப்புக்காம்பட்டி வனப்பகுதிக்குள் உள்ள கிராமங்கள். கோபிநத்தம், வீரப்பன் பிறந்த ஊர் என்பது குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com

இக்கிராமங்களுக்கு வெளியூரிலிருந்து செல்பவர்கள் உள்ளே நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது. நாள்தோறும் மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை கிராம மக்கள் வீட்டை விட்டு வெளியே வரத் தடை. சீருடை அணியாத அதிரடிப்படையினரும் உளவுத் துறையினரும் கிராம மக்களைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். இதனால், அப்பகுதியில் வாழும் மக்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன் பிடித்தல் ஆகிய தொழில்கள் செய்து இப்பகுதி மக்கள் பிழைத்து வருகின்றனர். காடுகளில் கால்நடைகளை மேய்க்கத் தடை விதித்துள்ளதால் - ஆடு, மாடுகள் பட்டினி கிடந்து சாகும் நிலை ஏற்பட்டுள்ளது. பழங்குடியினர் உட்பட எவரும் காட்டுக்குள் சென்று விறகு, காட்டுப் பொருட்களை சேகரிக்கத் தடை செய்யப்பட்டுள்ளது. காட்டையே நம்பி வாழும் மக்கள் உணவுக்குக்கூட வழியில்லாமல் சாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

காவிரிக் கரையோரம் ஆத்தூர் முதல் ஒகேனக்கல் வரையிலான கிராம மீனவர்கள், மீன் பிடிக்கத் தடை செய்துள்ளனர் கர்நாடக அதிரடிப் படையினர். மீனவர்களுக்குச் சொந்தமான 130 பரிசல்கள் பறிமுதல் செய்யப்பட்டு கோபிநத்தம் விருந்தினர் மாளிகையில் வைக்கப்பட்டுள்ளன. இதனால் 200 மீனவக் குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றனர். காவிரி ஆற்றைக் கடக்க கிராம மக்களுக்கு இருக்கும் ஒரே போக்குவரத்துச் சாதனம் இப்பரிசல்கள்தான். அன்றாட தேவைக்காக கொளத்தூர் போன்ற சிறுநகரங்களுக்குச் செல்லும் இம் மக்களின் இயல்பு வாழ்க்கை, அதிரடிப் படையின் இந்த நடவடிக்கையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பரிசல் போக்குவரத்து இல்லாததால், மாணவர்கள் பள்ளிக்குச் சென்று படிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. ஆத்தூரில் தொடக்கப் பள்ளியும், கோபிநத்தத்தில் நடுநிலைப் பள்ளியும் உள்ளன. தர்மபுரி மாவட்டத்திலுள்ள கொங்காம்பட்டி, நாகமலை ஆகிய ஊர்களில் இருந்து அய்ம்பதுக்கும் மேற்பட்ட மாணவ - மாணவியர் இப்பள்ளிகளில் பயில்கின்றனர். இவர்கள் அரையாண்டுத் தேர்வு கூட எழுத முடியவில்லை. இப்பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள் இல்லாததால், ஒரே ஆசிரியர் அனைத்து வகுப்புகளையும் நடத்தும் அவல நிலையே உள்ளது. வீரப்பன் பதுங்கியிருப்பதாகக் கூறப்படும் காட்டுக் கிராமங்களின் கல்வி நிலைக்கு இப்பள்ளிகளின் தற்போதைய நிலைமையே எடுத்துக்காட்டு.

வீரப்பனைப் பிடிக்க முடியாத விரக்தியும், நாகப்பா கொல்லப்பட்டதால் ஏற்பட்ட தோல்வியும் கர்நாடக அதிரடிப்படையின் அடக்குமுறையை முன்பைவிட கடுமையாக்கி உள்ளதாகக் கூறுகின்றனர் அப்பகுதி மக்கள். அதிரடிப்படையினரின் அத்துமீறல் குறித்து உண்மையறியும் குழுவினரிடம் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளைத் தெரிவித்த பொதுமக்களை, கர்நாடக அதிரடிப்படை மிரட்டியுள்ளதாகப் புகார் எழுந்துள்ளது. தற்போது மனித உரிமை ஆர்வலர்களைக்கூட இப்பகுதிக்குள் அனுமதிக்க மறுத்து வருகிறது அதிரடிப்படை.

அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டவர்கள் 90 பேர், பாலியல் வன்முறைக்கு உள்ளான பெண்கள் 60 பேர், வதை முகாம்களில் சித்ரவதைக்கு உள்ளாகி நடைபிணமாக வாழ்பவர்கள் 300க்கும் மேல்.



1992 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தமிழக - கர்நாடக கூட்டு அதிரடிப்படை, கடந்த காலங்களில் அரங்கேற்றிய அட்டூழியங்களை நாடே அறியும். மனித உரிமை அமைப்புகளின் ஆய்வின்படி, அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டவர்கள் 90 பேர், பாலியல் வன்முறைக்கு உள்ளான பெண்கள் 60 பேர், வதை முகாம்களில் சித்ரவதைக்கு உள்ளாகி நடைபிணமாக வாழ்பவர்கள் 300க்கும் மேல்.

இதில் சிக்கி மிஞ்சிய 124 பேர் வீரப்பன் மீதுள்ள வழக்குகளில் 'தடா' சட்டத்தில் மைசூர் சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் எட்டு, ஒன்பது ஆண்டுகள் எவ்வித விசாரணையுமின்றி சிறையில் இருந்தனர். கடந்த 2001 ஆம் ஆண்டுதான் இதில் 109 பேர் குற்றம் நிருபிக்கப்படாமல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். எந்தக் குற்றமும் செய்யாமல் இத்தனை ஆண்டுகள் இந்த அப்பாவி மக்கள் சிறையில் வாடியதற்கு யார் பொறுப்பு?

இப்படியாக கடந்த காலங்களில் சட்டத்திற்குப் புறம்பாக அத்துமீறி செயல்பட்ட அதிரடிப்படை அதிகாரிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத அரசாங்கத்தின் நிலையே, தற்போது நிகழும் கொடுமைகளுக்கு ஊற்றுக் கண்ணாக விளங்குகிறது. கர்நாடக அதிரடிப்படையின் தற்போதைய செயல்பாடுகள் தமிழர்கள் அனைவரையும் 'குற்றப் பரம்பரையினராக' வரையறுக்கிறது.

வீரப்பனின் பரபரப்பான செயல்பாடுகள் குறித்து அதிக முக்கியத்துவம் கொடுக்கும் பத்திரிகைகள், வீரப்பன் தேடுதல் வேட்டை என்ற பெயரில் நடைபெறும் ஒடுக்குமுறை, மனித உரிமை மீறல்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தவில்லை. அதிரடிப்படையின் கடந்த கால பாதிப்புகளுக்குப் போதிய நிவாரணம், புனர் வாழ்வு போன்ற குறைந்த பட்ச நீதிகூட கிடைக்காமல் மக்கள் தவித்துக் கொண்டிருக்கும்போது, மீண்டும் மீண்டும் அடக்குமுறை ஏவப்படுவது கண்டனத்திற்குரியது. இப்படியான அதிரடிப்படையின் ரத்தக்கறை படிந்த வரலாற்றை அறிந்த நம்முன் உள்ள கடமை, பாதிப்புகளை பட்டியலிடுவதைத் தவிர்த்து, பாதிப்பு வராமல் தடுக்கப் போராடுவதுதான். ●




படிப்பகம்

www.padippakam.com

# கலக மொழி பேசும் கலைகள்

■ யாக்கன்



ஓவியம் : சந்ரு

தேடுதலில் மனித இனத்திற்கு உள்ள ஆர்வம் கூடிக்கொண்டே போகிறது. எப்போதாகிலும் அது இளைப்பாற விரும்பினால், அதுவும் கூட ஏதேனும் ஒன்றைத் தேடியே இருக்கிறது. நீண்ட நெடிய தூரத்திற்குப் பயணித்துவிட்ட அந்தத் தேடுதலில், அது அனுபவித்திருக்கும் மகிழ்ச்சியைவிட வேதனைகள்தான் அதிகம். தோல்விகளே தேடலின் ஊற்றுக் கண்களாய் இருக்கின்றன.

அறியப்பட வேண்டியவற்றை, மறைவிலிருந்து விடுவிக்கும் சாதனமாய் மொழியை உருவாக்கியதே, மனித இனத்திற்குக் கிடைத்த ஆச்சரியமான வெற்றி எனச் சொல்ல வேண்டும். மொழி என்னும் அச்சாதனத்தின் மூலம்தான் உலகின் மறு உருவாக்கம் நிகழ்ந்தது. மனித உறவுகளுக்கும் அதே நொடியில் மனித வன்முறைகளுக்கும் மொழியே ஊடகமானது. கருத்துச் சட்டங்களால் மனிதர்களை உடைத்து, நிறுவனங்களால் உலகை நிறைத்ததும் அதுவே. மொழி விளைவித்த பயங்கரம் அது.

நிறுவனங்களின் பிரதிநிதிகளாக அலைந்து கொண்டிருக்கும் மனிதர்கள் பல்கிப் பெருகுவதால், நிறுவனங்களின் பகைமை மனிதர்களுக்குள் ஊடுருவுகிறது. பகைமைகளால் உலகம் நிறைக்கப்பட்டது இப்படித்தான். நிறுவனங்கள் கட்டியெழுப்பி வைத்திருக்கும் பீடங்களின் முன் மனிதர்கள் மண்டியிட்டுக் கிடக்கிறார்கள். பீடங்களுக்கு இருக்கும் அதிகார எல்லைகள் விரிகின்றன; ஆதிக்கத்தின் வடிவங்கள் புதிது புதிதாய் முளைக்கின்றன.

நிறுவனங்களின் ஆதிக்கத்தில் கரையும் மனிதர்களுக்கு, அதிகாரத்தின் கிளைகள் வாய்ப்பதால், மனித இனத்தின் சுழற்சி அதிகாரக் குறியீடுகளை நோக்கியே நகர்கிறது. ஆதிக்கத்தின் பீடங்கள் உயர்ந்து கொண்டிருக்கின்றன. மனிதர்கள் புதைந்து கொண்டிருக்கிறார்கள். ஆதிக்கத்தை வணங்கிய - பின்பற்றிய மனிதர்களின் இருப்பும் - சாரம்சமும், வெளிப்பாடும் உடைத்தெறிய முடியாத உயர்வகை மரபாக நீடிக்கின்றன. உலகின் வாழ்வும் வரலாறும் அதில்தான் சிறைவைக்கப்பட்டுள்ளது.

இவ்வகை சுழற்சியிலிருந்து விலகி நின்ற மக்கள், சமூக வரையறைகளிலிருந்து கழித்துத் தள்ளப்பட்டனர்; சந்தை மனிதர்களாக்கப்பட்டனர்; இழிவின் குறியீடுகளாக்கப்பட்டனர். ஆதிக்கத்தின் வன்முறையால் துயர் நிறைந்த வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டனர். அதிகார வன்முறைகளுக்கு எதிரான கலக மொழியை, தங்களின் கலைவழி வெளிப்பாடுகளில் பதிவு செய்தனர் அம்மக்கள். எனவேதான், புனிதப் பீடங்களின் முன், அதிகாரப் பொறிகளின் முன், தலைவணங்காமல் உயிர் வாழ்பவை எவையெனக் கேட்டால், ஒடுக்கப்பட்ட மக்களின் கலையும் இலக்கியமும் எனச் சொல்ல முடிகிறது. கலைகளின் பிறப்பும் வளர்ப்பும் இப்படித்தான் நிகழ்ந்தன.

தங்களின் ஒலிகளாலும், மவுனத்தின் இறுக்கத்தாலும், கலைகள் உருவாக்கிய எதிர்மொழியே, ஆதிக்கத்திற்கு நேரெதிர் உலகத்தை உருவாக்கிக் காட்டியது. ஆதிக்கத்தினடியில், அவலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனித இனத்தை அக்கலை மொழிகள் எள்ளி நகையாடின. மரபுகளின் வன்முறை உருவாக்கியிருக்கும் மொழி முறைமையை அவை அலட்சி



படிப்பகம்

www.padippakam.com

யம் செய்தன. சமூகத்திலிருந்து தூக்கி வீசப்பட்ட மக்களின் கலைமொழிகள், அக்கலைகள் உருவாக்கிய கலகக் குறியீடுகள் உலகத்தை இரண்டாகப் பிளந்தன.

நிச்சயிக்கப்பட்ட விடுதலையை கலைகள் முன்வைக்கவில்லை. ஆதிக்கத்தின் அழிவையும் அவை உறுதி செய்யவில்லை. ஆனால், ஆதிக்க சிந்தனை மரபை உடைப்பதில் மிஞ்சும் பேரானந்தத்தை கலைகள் நமக்குத் தருகின்றன. சாயம் வெளுத்த புனித மரபுகளை அகற்றி, உருவாகும் கருத்துச் சட்டங்கள் கூட பின்னர் அதே புனிதப் போர்வையைப் போர்த்திக் கொண்ட கதைகளும் நடந்திருக்கின்றன. மரபுகளை மீறி உருவாக்கப்பட்டவை எவைகளோ, அதிகாரப் பீடங்களை உடைத்து நொறுக்கியவை எவைகளோ, அவைகளே மீண்டும் அதிகாரக் குறியீடுகளாக உருப்பெற்றுள்ளன. இந்த அசிங்கத்தின் கதையாடல்களில் சிக்காமல் தனித் தளத்தில் இயங்குகின்றன கலைகள். அந்த இயக்கத்திற்குத் தடையேற்பட்ட போதெல்லாம் தடம்மாறி, வெளிமாறி, காற்றிலும் நீரிலும் நிலைகொண்டு, விதவிதமான வடிவங்களில் உயிர் கொண்ட வரலாறு கலைகளுக்கு உண்டு.

ஆனால், கற்பிதங்களின் வழியே பயணித்ததால், கறைபட்ட மனிதக் கரங்களுக்குள் கலைகள் சிக்கின.

**“மனித உறவுகளுக்கும் அதே நொடியில் மனித வன்முறைகளுக்கும் மொழியே ஊடகமானது. கருத்துச் சட்டங்களால் மனிதர்களை உடைத்து, நிறுவனங்களால் உலகை நிறைத்ததும் அதுவே. மொழி விளைவித்த பயங்கரம் அது.”**

கருத்துச் சல்லடைகளால் சலிக்கப்பட்ட, அற்ப லாபங்களில் கரைந்த கலைஞர்களின் தடுமாற்றத்தினால் கலைகளின் உள்ளடக்கமும், அதன் எதிர்க் குறியீடுகளும் நுகர்வுப் பொருட்களாக்கப்பட்டன. நீட்சிப் பண்போ, வளைந்து நெளியும் தன்மையோ அற்ற கலைகளின் தொடர் கண்ணிகள் வெட்டியெறியப்பட்டன. அரசியலுக்கும், ஆதிக்கத்திற்கும் உள்ளடக்கத்தை பலிகொடுத்தாலும், கலைகள் ஒருபோதும் தங்களது உயிர்த்துடிப்பை இழந்ததில்லை.

இந்தியச் சூழலில் இம்மண்ணையும், மலைகளையும் வளர்த்தெடுத்த தொன்மை மிக்க குடிமைச் சமூகங்களின் கலைகளை, கலாச்சார வடிவங்களை, நாகரீகமற்ற ஆரிய வந்தேறிகள் கீழ்நிலைப்படுத்தினர். சதுர்வர்ண சமூக அமைப்பின் சாதிப்படிநிலையாக்கத்தின் மூலம் அது சாத்தியமானது. தொல்குடி மக்களின் கலையும், வாழ்வும் சமூக உறவுகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டு, கொச்சைப்படுத்தப்பட்டன. ஆரிய வந்தேறிகளின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடியதால்தான் அந்நிலை. எனவேதான், அடிப்படையில் 'தலித்' என இன்று அழைக்கப்படும் தொன்மைமிக்க குடிகளின் கலை வடிவங்கள், ஆர்ப்பரிப்பு மிக்க எதிர்ப்புணர்வுடன் இயங்குகின்றன. காலமும் வரலாறும் மாற்றமடைந்தாலும் அம்மக்கள் கலைகளின் எதிர்ப்பு மொழி, துடிப்புடன் வெளிப்படுகிறது. அதுவே தலித் கலைகளின் பெருமையும் செழுமையும். ஆதிக்க எதிர்ப்பே அதன் உயிர்.

மனித சமூகத்தைச் சிதறடிக்கும் சாதி அமைப்பிற்கெதிராகக் கூடி வாழும் உயர் வகை மரபைப் போற்றும் தலித் கலைகள், தன்மையில் மனித ஒற்றுமையை முன்வைக்கின்றன. நரம்புகளில் துடிப்பேற்றும் பறை இசையும், போர் உத்தியை வெளிப்படுத்தும் கழில், ஒயில் போன்ற கலை வடிவங்களும் மனித உறவில் போற்றி வளர்க்கப்பட்டவை. கும்மியும் கரகமும் வெளிப்படுத்தும் அழகியலும் நளினமும் மண்ணிசையோடு ஒன்றிக் கலந்தவை. அக்கலைகளின் உயிர்த் துடிப்பும், தனித் தன்மையும் மக்களின் வாழ்வனுபவங்களில் வெளிப்படுபவை. அவற்றின் அழகியலும், செய்நேர்த்தியும், உள்ளடக்கமும் தலித் மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்தவை.

தலித்துகளைப் பொருத்தவரை, சமத்துவம், சுதந்திரம், தன்மானம் மற்றும் அங்கீகாரம் ஆகியவற்றை நோக்கியே அவர்கள் நகர்ந்து வருகின்றனர். அதுவே அவர்களின் நவீனத் தேவைகள். சாதிப் படிநிலையாக்கத்தில் இந்து - நிலவுடைமை அமைப்பில் தங்களை இழிவுபடுத்திய கருத்தியல்



ஓவியம் : மூக்கையா

சட்டங்களின் மீது தாக்குதல் தொடுப்பதற்காகவே, தங்களின் அத்தனை சக்திகளையும் பயன்படுத்துகின்றனர்.

இந்நிலையில்தான், ஆதிக்கக் கருத்தியல்களுக்கு இரையான சமூக எதார்த்தங்களைப் புறந்தள்ளிய கலைப் படைப்புகள் கேள்விக்குட்படுத்தப்படுகின்றன. வாழ்வுக்கும் சாவிற்கும் இடைப்பட்ட சமூக இயங்கியல் உறவை, கலை நேர்மையுடன் வெளிக்கொணராத எதுவும் பயனற்றதாக்கப்படுகின்றது. ஓவியம் மற்றும் சிற்பங்களின் அதி நவீனத் தளத்தில் கால் வைக்கும்போது, வேதனைகளின் வழியே வெளிப்படும் படைப்பனுபவங்கள் கோபாவேசம் கொள்வது இயல்புதான். வண்ணங்கள் வழியே வெளிப்பட்ட வேதனையும் / கோபமும் ஊழிக்காலமாய் அழுது புலம்பிய மக்களின் பதிலடியாக இருக்கின்றன.

அழகியலும், செய் நேர்த்தியும், உள்ளடக்கமும், படைப்பனுபவமும் இல்லாத கலைகள் அர்த்தமற்றவை. ஆனால், கலைகளுக்கான அழகியலைப் போராட்ட வடிவமாக்கியதும், மரபு வழிப்பட்ட செய் நேர்த்தியின் இலக்கணங்களைக் கேலிசெய்வதும், உள்ளடக்கத்தின் முன்முடி



படிப்பகம்

www.padippakam.com

வாக்கியதும் தலித் படைப்பாளிகளின் எதிர்ப் புரட்சி எனச் சொல்ல வேண்டும்.

நீர்நிலைகள், மலைமுகடுகள், பறவை இனங்கள், சிரிக்கும் மலர்கள், ஓடித் திரியும் மான்கள், கிளர்ந்து பாயும் சிங்கங்கள், நீரெடுத்துச் செல்லும் பெண்கள், மேலாடை நழுவ சிரித்து மயக்கும் பதுமைகள், மார்க்கச்சையில்லாத மன்னர் கால அழகிகள், ஆண்டைகளின் முன் கெஞ்சி நிற்கும் அடிமைகள், மாடமாளிகைகளின் எழில்கள், தர்பார் மண்டபங்களின் தூண்கள் - இவைதான் இந்துச் சமூகம் போற்றி வளர்த்த ஓவிய மரபின் வெளிப்பாடுகள். அவற்றில் வெளிப்பட்டவைகளே அழகியல் கோட்பாடுகளும் செய்நேர்த்தி இலக்கணமும்.

சமூக நீதியற்ற சிந்தனை மரபுகளால் போற்றப்படும் கலை வடிவங்கள், அழகியல் கோட்பாடுகளும், செய்நேர்த்தியின் இலக்கணமும், ஆதிக்கக் குறியீடுகளை நிலைநிறுத்தும் அரசியலோடு இயங்குகின்றன. அவற்றிற்கு செயலூக்கமும் இல்லை; படைப்புத் திறன் எதுவும் அவற்றில் வெளிப்படவுமில்லை. படைப்பனுபவங்கள் வெளிப்படுத்தும் தர்க்கம் வலுமிக்கதாய் இருக்கும்.

ஆனால், இந்து மரபுகளால் போற்றப்பட்ட கலைவடிவங்களில் எவ்வகை தர்க்கமும் இல்லை. அதை அனைத்தும் இந்துப் படிநிலை அமைப்பைக் காக்கும் இதிகாசப் புராணங்களின் கிளைகளாகவே இருக்கின்றன. வேதனையில், அவலத்தில் குமுறிக் கொண்டிருந்த அடித்தட்டு மக்களின் உணர்வுகளை இரக்கமற்ற முறையில் அலட்சியம் செய்தன. சாதிப் படிநிலையின் எச்சங்களாக்கப்பட்ட உழைக்கும் அடித்தட்டு மக்களின் வாழ்வனுபவங்கள் - அமுக்கென, அவலமென ஒதுக்கப்பட்டன.

கவ்விக் கொண்டிருக்கும் ஆதிக்க மரபுகளிலிருந்து கலைகளை மீட்டெடுப்பதிலும், இதுவரை வளர்க்கப்பட்டு போற்றிப் பாதுகாக்கப்பட்ட படைப்பு மொழிகளை அழித்தொழிப்பதிலும், கலைகளில் பிரதிபலித்த உருவங்களை மாற்றுப் பிறப்பெடுக்க வைப்பதிலும், தலித் படைப்பாளிகள் முனைப்புக் காட்டுகின்றனர். இது ஒருவகை போர் முனைப்பு எனச் சொல்ல வேண்டும்.

நெடுங்காலமாய் சிறைப்பிடித்திருக்கும் ஒடுக்குமுறைச் சங்கிலிகளை உடைத்தெறியவும், மறுக்கப்பட்டு வந்த சமத்துவத்தை நிலைப்படுத்தவும் முன்னெடுக்கப்படும் போர் முனைப்பு அது. மனித உறவுகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்ட அவமானத்தைத் துடைத்தெறிய எத்தனிக்கும் போர் முனைப்பு. உழைக்கும் மக்களின் கலாச்சார மொழியை உயர்த்திப் பிடிக்கும் போர் முனைப்பு.

ஓவியம் : அகஸ்டின் அண்ணாதுரை



அடித்தள மக்களின் படைப்பனுபவங்களிலிருந்து வெளிப்படும் நடப்பியல் எதார்த்தங்கள், அப்படைப்புகளில் தங்கிப் பெரும் தர்க்கத்தை எழுப்புகிறது. குடிசையோடு எரித்துச் சாம்பலாக்கப்பட்ட தலித் மக்களின் கூக்குரலாக அந்தத் தர்க்கம் வெளிப்படுகிறது. ஓட ஓட விரட்டி, தலைவெட்டப்பட்ட உடம்பிலிருந்து கொப்பளித்துப் பெருகும் பச்சை ரத்தம், அந்தத் தர்க்கத்தை எழுப்புகிறது. வஞ்சகத்திற்குப் பறிபோன நிலைகளில் புதையுண்ட மூதாதையர்களின் காலடித் தடங்கள் அந்தத் தர்க்கத்தை எழுப்புகின்றன.

இந்த தர்க்கத்தில் செயலூக்கம் பெறுகின்ற அனுபவங்களே தலித் கலைகளின் அழகியலாக இருக்க முடியும். அந்த அழகியல், அநீதிகளுக்கு எதிரான செயல் அனுபவங்களில் வெளிப்படும். அந்த அனுபவ வெளிப்பாடுகளில், எழும்பும் தர்க்கம் விரவிப் பரவும். சேரிகளின் நடுவிலிருந்து சமூக மாற்றத்திற்கான முழக்கத்துடன் மக்கள் திரள் புறப்படும்.

இவைதான் தலித் படைப்பனுபவங்கள் முன்வைக்கும் உள்ளடக்கம். எனவேதான், தலித் படைப்பாளிகளின் படைப்பனுபவத்தில், வஞ்சகத்திற்குக் கட்டை விரலை தட்சிணை வைத்த ஏகலைவன் உயிர்த்தெழுகிறான். மயான மேடுகளில் பற்றியெரியும் உடல்களில் இருந்து வெளிப்படும் நெருப்பு விடுதலைத் தீயாகிறது. இழிவென ஒதுக்கப்பட்ட பண்பாட்டு வேர்கள் விண்ணை நோக்கிப் பயணிக்கின்றன. பாரம்பரிய இந்து மத மரபுகளின் குறியீடான காமதேனு சாணி போடுகிறது. அடையாளம் இழந்த வேர்கள் மீண்டும் முளைவிடுகின்றன. முரசுகள் ஒலிக்கின்றன. பறைகள் அதிர்கின்றன. ஆரிய குதிரைப் பண்பாடு வெட்ட வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்படுகின்றது.

உழைக்கும் மக்களின் உயிர்கள் சந்திக்கும் அவலங்களையும் உழைப்பின் பயனாய் கிடைத்த மரணத்தையும், எரிந்து வீழ்ந்த குடிசைகளின் நினைவுகளையும் பிரபஞ்சத்தில் கலந்து கரைந்துவிட்ட வேதனைகளின் காலடித் தடங்களையும் தலித் படைப்பனுபவங்கள் வெளிக்கொணர்கின்றன.

> ❝ ஆதிக்கப் பொறிகளை, அதிகார மய்யங்களை எதிர்த்து, அவை விளைவிக்கும் சமூக அவலங்களுக்கு எதிராகத் திரண்டெழும் - படைப்பனுபவங்களில் வெளிப்படும் தர்க்கமே தலித் படைப்புகளின் பொதுவான அடையாளமாகும். ❞



படிப்பகம்

www.padippakam.com

> ❝ ஆதிக்கக் கருத்தியல்களுக்கு இரையான சமூக எதார்த்தங்களைப் புறந்தள்ளிய கலைப் படைப்புகள் கேள்விக்குட்படுத்தப் படுகின்றன. வாழ்வுக்கும் சாவுக்கும் இடைப்பட்ட சமூக இயங்கியல் உறவை, கலை நேர்மையுடன் வெளிக்கொணராத எதுவும் பயனற்றதாக்கப் படுகின்றது. ❞

இவ்வகைப் படைப்பனுபவங்களைப் புரிந்து கொள்வதில் தலித் கலைஞர்களுக்கு குழப்பமும் தயக்கமும் ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை. கலைகளில் தலித் கலைகள் என்று இனம் பிரிப்பது அபத்தமானது என்ற எண்ணம் அவர்களிடம் மேலோங்குகிறது. கலைகள் இன, மொழி, மத, சாதி பேதங்களைக் கடந்தவை என எண்ணுகின்றனர். படைப்புகளைப் பற்றி பலவிதமான கருத்தாக்கங்களில் அவர்கள் மூழ்கிக் கிடக்கின்றனர்.



ஓவியம் : ஆர்.எம். அடப்பா

ஆனால், கலைகளைப் பற்றிய விவாதங்களும், மறு கட்டமைப்புகளும் எப்போதோ தொடங்கி விட்டன. கிராமங்களின் ஊர் எல்லையில் ஆதிக்க சக்திகளை எதிர்த்து நிற்கும் வீச்சருவாள் ஏந்திய கருப்பசாமி சிலைகள் அதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். அவை வெளிப்படுத்தும் படைப்பனுபவங்களில் தலித் தலைமுறைகளின் வரலாறு உயிர் கொண்டிருக்கிறது. சமூக எதார்த்தங்களைப் பற்றிய விவாதங்களையும், எதிர்ப்பையும் கலைகளின் மொழி வழியே வெளிக்கொணராத கலைஞர்கள், தங்களின் சமூகக் கடமையை உணர வேண்டும்.

நவீனங்களில் சஞ்சரிக்கும் நினைவுகள், தேவைகள், திட்டங்கள் அனைத்துமே தலித்துகளின் அனுபவ அறிவிலிருந்தே தொடங்குகின்றன. எளிய மக்களின் வாழ்வியல் வெளிப்படுத்திய எதார்த்தங்கள், அரூப வகைப்பட்ட வடிவங்களில் பதிவு செய்யப்படுகிறபோது இந்தக் குழப்பம் அதிகமாகிறது. படைப்பாளிகள் வெளிப்படுத்தும் இந்த நவீன ஓவியமொழியைப் புரிந்து கொள்வதில் ஏற்படும் சிரமங்களுக்காக அவற்றைத் தூக்கி எறிந்துவிட முடியாது. சமூக எதார்த்தங்களை, சமூகத்தின் அறிதல் மொழிவழியே வெளிக்கொணர வேண்டிய கடமை படைப்பாளிகளுக்கு உண்டு.

தலித் படைப்பாளிகளிடமிருந்து வெளிப்படும் படைப்பு மொழி, எளிய புரிதலுக்குரியதாகிவிடும்போதுதான், அதன் வீரியம் அதிகரிக்கிறது, பயன்படுகிறது என்றில்லை. தன்னளவில், சமூக மாற்றத்திற்கான அழகியலை, செய்நேர்த்தியை, உள்ளடக்கத்தை, தர்க்கமிகு அரசியலை வெளிப்படுத்திக் கொண்டுதானிருக்கின்றன. தலித் சமூகம் நவீனங்களுக்கு செவிசாய்க்கிற போது அதைப் புரிந்துக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்துவிடும் என்று சொல்ல முடியும். நவீனங்களுடன் உரிமை கொள்வதை மறுத்து வருவதால்தான் தலித்துகளுக்கும் நவீனங்களுக்குமான இடைவெளி அதிகரித்து வருகிறது.

இந்த இடைவெளியைக் குறைக்க தொடர்ந்து தலித் கலைஞர்கள் முயற்சிக்கிறபோது, நவீனங்களுடன் தலித்துகள் இணையும் புள்ளியில் தலித் ஓவியங்களைப் புரிந்து கொள்வதில் உள்ள குழப்பம் விடுபடும் என முடிவு செய்து கொள்ளலாம். சூழ்ச்சி, தந்திரங்கள் நிறைந்த நவீனத்துவத்தை அதன் தலைவாசலில் சந்தித்து, நவீனமயமாக்கலின் கோட்பாடுகளை தலித்துகள் உருவாக்கும் போது, புது வெளிகள் கிடைக்கும். நவீன வடிவங்களில் நம் தொன்மைமிக்க கலை அனுபவங்கள் வெளிப்படும்.

எவையெல்லாம் தலித் கலைகள்? யாரெல்லாம் தலித் படைப்புகளைக் கொடுக்க முடியும்? தலித் விடுதலையைப் பேசுகின்றவைதான் தலித் கலைகளா? தலித் படைப்புகளுக்கென்று ஏதேனும் அடையாளம் இருக்கிறதா? என்ற கேள்விகளெல்லாம் திரும்பத் திரும்ப எழுப்பப்பட்டு வருகிறது. இதுபோன்ற கேள்விகளாலும் இவற்றிற்குத் தரப்படும் விளக்கங்களாலும் எவ்விதப் பலனும் இல்லை.

ஆதிக்கப் பொறிகளை, அதிகார மய்யங்களை எதிர்த்து, அவை விளைவிக்கும் சமூக அவலங்களுக்கே எதிராகத் திரண்டெழும் படைப்பனுபவங்களில் வெளிப்படும் தர்க்கமே - தலித் படைபுகளின் பொதுவான அடையாளம் என முடிவு செய்து கொள்ளலாம். ஆனால், சமூக அக்கறையற்ற, சுயநல உணர்வுள்ள, சீரழிவு அடையாளங்களை உயர்த்திப் பிடிக்கிற சில பொறுப்பற்ற 'கலைப் போலி'களால் கலை நேர்மையற்று பதிவு செய்யப்படுபவை, எப்படிப்பட்ட விசாரணைகளை எழுப்பினாலும், அவற்றின் 'நடிப்பு' அம்பலமாகி விடுவதையும் பார்க்க முடிகிறது.

உலகெங்கிலும் சிதறிக் கிடக்கும் ஒடுக்கப்பட்ட மக்களினங்கள் - தங்கள் சமூக வரலாற்றை, அறிவை, செழுமையை உள்ளடக்கிய கலகத் தன்மையுடைய தங்கள் கலை அடையாளங்களைக் கூர்மைப்படுத்தி வருகிறார்கள். அந்தக் கூர்மை, அம்மக்களின் விடுதலையைச் சாத்தியமாக்கும். தொன்மைக் குடிகளில் ஒன்றான தலித்துகளின் விடுதலைப் போராட்டங்களில் கலைகளின் பங்கு பிரதானப்படுத்தப்பட்டு வருகிறது. அதன் வேகமும், வீரியமும் அதிகரிக்கிற போது, தலித்துகளின் மனதில் எரியும் விடுதலை உணர்வு உக்கிரமடைகிறது. அந்த உக்கிரத்தில்தான் தலித் கலையின் இலக்கண வரையறைகளும் இருக்கின்றன. ●

---

*மதுரை 'தலித் ஆதார மய்யமும்', பெங்களூர் 'ரங்கசம்வதா'வும் இணைந்து 17.1.2003 அன்று பெங்களூரில் நடத்திய தலித் கலை விழா கருத்தரங்கில் இக்கட்டுரை வாசிக்கப்பட்டது.*




படிப்பகம்

www.padippakam.com

இந்துத்துவவாதிகளுக்கு ஒரு மறுப்பு

# அம்பேத்கர், முஸ்லிம், பிரிவினை

■ அஸ்கர் அலி இன்ஜினியர்




சாதி - மதப் பிரச்சினைகளை மக்களிடையே தூண்டிவிடும் வேலையை இந்து சங்பரிவார், தொடர்ந்து செய்து வருகிறது. சாதி - மதப் பிரச்சினையைத் தூண்டிவிடுவதன் மூலமே அது தன்னைத் தக்க வைத்துக் கொள்கிறது. குஜராத் படுகொலையில் முழு மூச்சாக இறங்கியிருந்த சங்பரிவார் தற்பொழுது 'அம்பேத்கர் - முஸ்லிம் எதிர்ப்பாளராக இருந்தார்' என்று கூறி, அவரை 'பாகிஸ்தானுக்கு எதிரானவராகவும்' சித்தரித்து வருகிறது. இப்பிரச்சினையை தொடங்கியிருப்பவர், பஜ்ரங்தள் அமைப்பைச் சேர்ந்தவரும் உத்திரப்பிரதேச பா.ஜ.க.வின் தலைவருமான வினய் கட்டியார்.

டாக்டர் அம்பேத்கரின் 'பாகிஸ்தான் அல்லது இந்தியப் பிரிவினை' என்ற நூலை ஆதாரமாக வைத்தே தான் பேசிவருவதாக, கட்டியார் பிரச்சாரம் செய்து வருகிறார். பொய்யை நிலைநிறுத்த, தவறான தகவல்களை மக்களிடையே பரப்புவதுதான் மதவாதிகளின் வேலை. இதற்கு கட்டியாரும் விதிவிலக்கல்ல. உண்மையில், டாக்டர் அம்பேத்கர் எந்த வகையிலும் முஸ்லிம்களுக்கோ, இஸ்லாத்திற்கோ எதிரானவரல்ல. ஆனால், ஒருவரை தவறாக மேற்கோள் காட்ட வேண்டும் என்று முடிவெடுத்து விட்டால், அவர் எந்தப் பொருளில், எந்தச் சூழ்நிலையில் அதைச் சொன்னார் என்பதை மறைத்துவிட்டு - வெறும் வரிகளை மேற்கோள் காட்டுவதன் மூலம் தங்களின் வாதத்தை வலுப்படுத்திக் கொள்ளலாம்.

அம்பேத்கர் முஸ்லிம் விரோதியல்ல. அவர் மாபெரும் கல்வியாளர், தேர்ந்த சிந்தனையாளர். சங்பரிவார் உறுப்பினர்களைப் போல மதவெறியர் அல்ல. பாகிஸ்தான் பற்றிய அம்பேத்கரின் நூல், ஒரு சிறந்த கல்வியாளருக்குரிய பணிக்குத் தக்க சான்றாக விளங்குகிறது.

இந்த நூலிலிருந்து தங்களின் நோக்கத்தை நிறைவு செய்து கொள்கின்ற வகையில், சில வரிகளை எடுத்து எளிதில் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனால், முஸ்லிம்கள் பற்றியும் பாகிஸ்தான் பற்றியும் அம்பேத்கரின் கருத்தை முழுமையாகத் தெரிந்து கொள்ள விரும்பும் ஒரு நேர்மையான ஆய்வாளர், இந்நூலை முழுவதுமாகப் படித்தாக வேண்டும்.

டாக்டர் அம்பேத்கர் இந்நூலை அய்ந்து பகுதிகளாகப் பிரித்திருக்கிறார். 1. 'பாகிஸ்தான் குறித்து முஸ்லிம்களின் கருத்து' 2. பாகிஸ்தான் குறித்து இந்துக்களின் கருத்து 3. பாகிஸ்தான் இல்லை என்றால் என்னவாகும் 4. பாகிஸ்தானும் வெறுப்பும் 5. பாகிஸ்தான் வேண்டுமா; பாகிஸ்தானின் பிரச்சினை - யார் தீர்மானிப்பது?

முதல் பகுதியிலிருந்து பாகிஸ்தான் குறித்த முஸ்லிம்களின் கருத்தை மேற்கோள் காட்டி, டாக்டர் அம்பேத்கர் பாகிஸ்தான் உருவாவதை முழுவதுமாக ஆதரித்தார் என்றும் சொல்லலாம். இரண்டாவது பகுதியிலிருந்து 'பாகிஸ்தானுக்கு எதிரான இந்துக்களின் கருத்து' என்பதிலிருந்து மேற்கோள் காட்டி, அம்பேத்கர் முஸ்லிம்களுக்கு எதிராக இருந்தார் என்றும் சொல்லலாம். இரண்டாவது பகுதியிலிருந்து மேற்கோள் எடுத்துப் பேசிவருவதன் மூலம், அம்பேத்கரை முஸ்லிம்களுக்கு எதிரானவராக சித்தரித்து வருகிறார் கட்டியார்.

ஆனால், இந்நூலின் மூன்றாவது பகுதி, அத்தியாயம் 7இல் அம்பேத்கர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: ''பார்ப்பதற்கு அதிசயமாகத் தோன்றினாலும், சாவர்க்கரும் ஜின்னாவும் - ஒரு தேசமா இரண்டு தேசங்களா என்ற பிரச்சினையில் எதிரும் புதிருமாக இருப்பதற்குப் பதில், இருவரும் ஒத்தக் கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, முஸ்லிம் தேசம் என்றும் இந்து தேசம் என்றும் இந்தியாவில் இரண்டு தேசங்கள் இருப்பதாகவும் வலியுறுத்துகின்றனர்.''



படிப்பகம்

www.padippakam.com

மேலும், அவர் சொல்கிறார்: ''இந்த இரண்டு தேசங்களும் எப்படி இருக்க வேண்டும் என்பதில்தான் இருவரும் வேறுபடுகின்றனர். இந்தியா இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும் - ஒன்று பாகிஸ்தான் மற்றொன்று இந்துஸ்தான். முஸ்லிம் தேசம் - பாகிஸ்தான் என்றும் மற்றொன்று இந்துஸ்தான் என்றும் ஜின்னா சொல்கிறார். இதற்கு மாறாக, சாவர்க்கர், இந்தியாவை முஸ்லிம்களுக்கு ஒன்று என்றும் மற்றொன்று இந்துக்களின் தேசம் என்றும் பிரிக்கக்கூடாது. இரண்டு தேசங்களும் ஒரே நாட்டில் இருக்க வேண்டும். ஆனால், ஒரே சட்டத்தின்படி ஆளப்பட வேண்டும். அதாவது, இந்து தேசம் மேலாதிக்கம் செய்யும். முஸ்லிம் தேசம் இந்து தேசத்துடன் ஒத்துழைத்து இரண்டாம் நிலையில் இருக்கும்.''

இருவருடைய நிலைப்பாட்டையும் அம்பேத்கர் மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த நூலில், இவ்விரு பிரிவினரைப் பற்றி அவர் தம் சொந்தக் கருத்துகளாக எதையும் கூறவில்லை. உண்மையில், இந்த நூலில் அம்பேத்கர் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் இப்பிரச்சினைகளைக் கையாண்டிருக்கிறார். அதாவது, இந்தியா மீது நடந்த எல்லா படையெடுப்புகளுக்கும் முஸ்லிம்களை குறைகூறக் கூடாது என்கிறார். ''இந்தியா மீது நிகழ்ந்த முஸ்லிம் படையெடுப்புகளுக்கு - முஸ்லிம்களுக்கு இடையே நடைபெற்ற சண்டைகளே காரணம்'' என்று அம்பேத்கர் கூறுகிறார். 'இந்த உண்மை மறைக்கப்பட்டுள்ளது' என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

''ஏனெனில், இந்நாட்டின் மீது படையெடுத்து வந்தவர்களை எல்லாம் முஸ்லிம்கள் என்று ஒட்டுமொத்தமாக அடையாளப்படுத்தி விட்டார்கள். ஆனால், உண்மை என்ன? இந்தியாவை படையெடுத்து வந்தவர்கள் - ஆப்கானியர்கள் மற்றும் மங்கோலியர்கள். கஜினி முகமது ஒரு தார்தர்; முகமது கோரி ஒரு ஆப்கானியர்; தைமூர் ஒரு மங்கோலியர்; பாபர் ஒரு தார்தர்; நதிர்ஷா மற்றும் அகமதுஷா அப்தாலி ஆப்கானியர்கள்.'' இப்படி விவாதத்தைத் தொடரும் அம்பேத்கர், 'இந்தியாவைக் கைப்பற்ற வந்த ஆப்கானியர்கள் - தார்தர்களையும், மங்கோலியர்கள் - தார்தர்களையும், ஆப்கானியர்களையும் அழித்தொழிக்க முயன்றனர். இவர்கள் இஸ்லாமிய சகோதரர்களாக - ஒரே குடும்பமாக நடந்து கொள்ளவில்லை. இவர்கள் அனைவரும் கடும் எதிரிகளாகவே நடந்து கொண்டனர். போரில் ஒருவரை ஒருவர் அழித்துக் கொண்டு மாய்ந்தனர்'' என்கிறார் அம்பேத்கர்.

ஒட்டுமொத்தமாக, டாக்டர் அம்பேத்கர் முஸ்லிம் மன்னர்களின் வரலாறு பற்றிய தெளிவான புரிதலோடு இருந்திருக்கிறார். 'இந்தியாவை விட்டு ஆங்கிலேயர்கள் வெளியேற வேண்டும்; இந்தியர்கள் மதப்பிரச்சினையை தங்களுக்குள்ளேயே தீர்த்துக் கொள்ளுவார்கள்' என்ற காந்திய நிலைப்பாட்டைக்கூட டாக்டர் அம்பேத்கர் ஆதரிக்கவில்லை.

> ❝ இந்து மதம் - சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்திற்கு எதிரானதே. எத்தகைய விலை கொடுத்தாவது இந்து ராஜ்ஜியம் அமைக்கப்படுவதைத் தடுக்க வேண்டும். ❞

மதவாதப் பிரச்சினையாகட்டும், சிறுபான்மையினர் குறித்த பிரச்சினையாகட்டும் - அது, ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு வெளியேறுவதற்குள் முறையாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று இந்த நூலின் முன்னுரையில் குறிப்பிடுகிறார். 'முரட்டுத்தனமான இந்து பெரும்பான்மையினரின்' கீழ் சிறுபான்மை மக்களை விட்டுவிட முடியாது என்று தெளிவாகக் கூறியிருக்கிறார்.

இதிலிருந்து ஒரு பகுதியை எடுத்துப்போட்டு அம்பேத்கர் பாகிஸ்தானை ஆதரித்தார் என்று கூறமுடியுமா? நிச்சயமாக முடியாது. ஏனெனில், அம்பேத்கர் 'முஸ்லிம் லீக்'இன் நிலைப்பாட்டைத்தான் விவரிக்கிறார். அது அவருடைய சொந்தக் கருத்து அல்ல. முஸ்லிம்கள் பற்றியும் பாகிஸ்தான் பற்றியும் அம்பேத்கருக்கு சொந்தக் கருத்து உண்டு. ஆனால், இந்து ராஜ்ஜியம் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கு அவர் முற்றிலும் எதிரானவர்.

'பாகிஸ்தான் இருக்க வேண்டுமா' என்ற பகுதியில்; ''இந்து ராஜ்ஜியம் உண்மையாகி விட்டால், இந்த நாடு பேரழிவை சந்திக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்துக்கள் என்னதான் சொன்னாலும், இந்து மதம் - சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்திற்கு எதிரானதே. அந்த வகையில் இது ஜனநாயகத்திற்கும் முரணானதே. எத்தகைய விலை கொடுத்தாவது இந்து ராஜ்ஜியம் அமைக்கப்படுவதைத் தடுக்க வேண்டும்.'' என்று அம்பேத்கர் கூறியுள்ளார். இருப்பினும், அம்பேத்கர் பிரிவினையை ஆதரிக்கவில்லை.

''பிரஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் மற்றும் இத்தாலியர்கள் தங்கள் நாடுகளில் பெரும்பான்மை வகுப்பினர் ஆள்வதைத் தடுத்து நிறுத்துவதில் எப்படி வெற்றி கண்டனர்? நிச்சயமாக பிரிவினையின் மூலம் அல்ல. அவர்களின் செயல்திட்டம் என்னவாக இருந்தது? அரசியலில் அவர்கள் மதவாத கட்சிகள் நுழைவதைத் தடை செய்தனர். கனடாவிலோ, தென்னாப்பிரிக்காவிலோ, சுவிட்சர்லாந்திலோ - ஒரு மதவாதக் கட்சியை தொடங்குவது பற்றி யோசிக்கவே முடியாது.''

இந்த வகையில், அம்பேத்கர் மிக முக்கியமான - பொருத்தமான ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார். இது குறித்து முஸ்லிம்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். சிறுபான்மை தேசங்கள்தான், மதவாதக் கட்சிகள் தோன்றுவதை எதிர்ப்பதில் முன்கை எடுக்க வேண்டும் என்பதுதான் மிக முக்கியமானது என்று அம்பேத்கர் சொல்கிறார். சிறுபான்மை இன மக்கள் மதவாதக் கட்சியைத் தொடங்கினால், பெரும்பான்மை மதத்தினரும் மதவாதக் கட்சியைத் தொடங்கி எளிதில் மதவாத அரசமைக்க முயற்சிப்பர்.

எனவே, அம்பேத்கர் முஸ்லிம்களுக்கு எதிரானவராகவோ, பாகிஸ்தானுக்கு ஆதரவாகவோ ஒருபோதும் இல்லை. இந்தியாவில் உள்ள சிறுபான்மையின மக்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண அவர் விரும்பினார் என்பதுதான் உண்மை. ●



படிப்பகம்

www.padippakam.com

வித்தியாசமான
ஒரு கல்வி இயக்கம்

# காஞ்சிபுரம்
# சமுதாயக் கல்லூரி

தலை நிமிர...
தலைமை ஏற்க...



- பல்கலைக் கழகப் பட்டங்கள்
- பட்டயங்கள்
- கம்ப்யூட்டர் நுணுக்கங்கள்
- தொழிற் பயிற்சிகள்
- கலை, இலக்கியப் பட்டறைகள்
- வேலை வாய்ப்புத் திறன்கள்
- வாழ்வை, வருங்காலத்தை உறுதியாக்க

தொடர்பு கொள்க :
முதல்வர், காஞ்சிபுரம் சமுதாயக் கல்லூரி
தேசிய நெடுஞ்சாலை, மாமண்டூர் - 603 111
காஞ்சிபுரம் மாவட்டம் ■ பேசி : 04115 - 265 215

படிப்பகம்

www.padippakam.com







## அந்தந்த பகுதி மக்களுக்கே தரிசு நிலம்

லோக் ஜன சக்தியின் மாநிலப் பொதுக் குழு சனவரி 25 அன்று, உத்திரமேரூரில் நடைபெற்றது. பெ. சந்திரசேகரன், என். நிஜவீரப்பா, ஆர்.உதயக்குமார், தஞ்சை இளஞ்சிங்கம், மகளிர் திலகம் டி.கே. தனபாக்கியம், எஸ். நடராஜன், ஏ.வி. தேவராஜ், அபிராமலிங்கம், சி. வித்யாதரன், நல்ல கிருஷ்ண மூர்த்தி, சத்தியசீலன், எ. சின்னதுரை, கே. பழனி, அன்புச்சுடர் ராசேந்திரன், ரங்கநாதன், ஜி. பிரான்சிஸ், சுப்ரமணி, சி. முனுசாமி, ஆர். பார்த்தசாரதி, அன்பன், எழில் அனந்து, நிர்மலா வெங்கடேசன், மோகன், தலித் குமார் ஆகியோர் பங்கேற்றனர். தரிசு நிலத்தை அந்தந்த பகுதி ஏழைகளுக்கே வழங்க வேண்டும்; தனியார் துறையில் இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ◆

## புரட்சிக்கான அடித்தளம்

டாக்டர் அம்பேத்கர் நினைவு நூலகத் திறப்பு விழா, திருவல்லிக்கேணியில் சனவரி 14 அன்று நடைபெற்றது. இந்நூலகத்தை எழுத்தாளர் சிவகாமி திறந்து வைத்து - 'அறிவுச் சுடர்' ஏற்றி வாழ்த்துரை வழங்கினார். அறிவு வழியில் பார்ப்பனீயம் வெல்லவில்லை. பார்ப்பனீயத்தின் வெற்றி என்பது சூழ்ச்சியால் ஆனது. அறிவு வழியைக் கைப்பிடித்து சமூக விடுதலையை வென்றெடுக்க, இந்நூலகத்தைப் புரட்சிக்கான அடித்தளமாகக் கருதுகிறேன் என்றார். நிகழ் அய்க்கண், திருபால், கே. சரவணன், ரா. செல்வம், அ. பீட்டர் பால்ராஜ் ஆகியோர் சமூக, கல்வி, பொருளாதார விடுதலை நோக்கி நம் ஒவ்வொருவரின் பணியும் இருக்க வேண்டும் என்று பேசினர். ஜி. ஏகாம்பரம் தன் தலைமை உரையில், ''நம் இனமக்கள் இது போன்று பல நூலகங்களை ஒவ்வொரு குடிசைப் பகுதியிலும் ஆரம்பிக்க வேண்டும்' என்றார். 'அம்பேத்கர் இளைஞர் பொது நல மய்யம்' இந்நிகழ்வை ஒருங்கிணைத்தது. ◆

## மாணவர் பட்டினிப் போராட்டம்

தமிழக அரசின் மாணவர் விரோதப் போக்கைக் கண்டித்து, 22.1.2003 அன்று வேலூர் ஊரிசு கல்லூரி மாணவர்களின் பட்டினிப் போராட்டம் பேரா. அய். இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. 2002-2003 கல்வியாண்டில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தலித் - கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய படிப்புதவித் தொகை, இந்நாள் வரை வழங்கப்படவில்லை. படிப்புதவித் தொகை வழங்கப்படாததால், இம்மாவட்டத்திலுள்ள மாணவர்கள் குறிப்பாக ஊரிசு கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழகத் தேர்வுக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்த முடியாமல் அல்லலுறுகின்றனர். தொடர்புடைய மாவட்ட அலுவலர்கள், படிப்புதவித் தொகை வழங்குவதில் ஆர்வம் காட்டாதது, மாணவர்களை வெகுவாகப் பாதித்துள்ளது. படிக்கும் மாணவர்கள் தங்களின் உரிமைகளைப் பெறுவதற்குக் கூட, அரசை எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது. ◆




## 'பாரதி' மாயை உடைந்தது!

'பாரதி'ய ஜனதா பார்ட்டி' நூல் வெளியீட்டு விழா, திருச்செந்தூரில் 'தாத்தா ரெட்டமலை சீனிவாசனார் பேரவை'யின் சார்பில் நடைபெற்றது. பேரவைத் தலைவர் எஸ். நடராசன் வெளியிட, பகுஜன் சமாஜ் கட்சி தமிழ் மாநிலத் தலைவர் கே.எம். சரீப் பெற்றுக் கொண்டார். 'மானுடத்தில் கோலோச்சியவர்கள் பவுத்தர்கள்' எனும் நூலினை ஆதித்தமிழர் பேரவை தலைவர் ரா. அதியமான் வெளியிட, நெல்லை ஜெயராணி பெற்றுக் கொண்டார். நூலாசிரியர்கள் வே. மதிமாறன், ஏபி. வள்ளிநாயகம் ஏற்புரையாற்றிட நெல்லை மாவட்ட தலித் சேனா தலைவர் கவி. சுப்பையா, பி. புருசோத்தமன், கே.பி. சுந்தரவேலு, டாக்டர் என். ஜெயராமன், கே. சதாசிவம் ஆகியோர் கருத்துரை வழங்கினர். இந்நிகழ்ச்சிக்கு தமிழகம் முழுவதுமிருந்து சமநீதி உணர்வாளர்கள் கலந்து கொண்டனர். ◆





படிப்பகம்

www.padippakam.com





# தென்பாண்டிச் சிங்கம்

# முத்து வீரன் பாலசுந்தர்ராஜ்

■ ஏபி. வள்ளிநாயகம்

பிரதேசத்தின் ஆதிக்கத்துக்கான பல்முனைப் போட்டியில் ஆங்கிலேயர்கள் வெற்றிகரமாக முன்னேறி 'மெட்ராஸ் பிரசிடென்சி'யை 1803இல் உருவாக்கினர். பாளையக்காரர்களின் அனைத்துக் கோட்டைகளும் அழிக்கப்பட்டன. சர்க்கார் பகுதியில் வாழ்ந்தாலும் சரி, பாளையப் பகுதியில் வாழ்ந்தாலும் சரி, எல்லா மறவர்களும் ஆயுதங்களை ஒப்படைக்கும்படி ஆணையிடப்பட்டது (1803). காவல் என்கிற நிறுவன அமைப்பு, 1816இல் அதிகாரப் பூர்வமாகக் கைவிடப்பட்டது.

காவல் மற்றும் ராணுவம் தவிர வேறு எதிலும் பயிற்சி பெற்றிராத மறவர்கள், முற்றிலுமாக நிலை குலைந்து போயினர். சிறிய நிலங்களை வைத்திருந்த மறவர்கள், ஆங்கிலேயர்களின் நிலவாய் திட்டத்தினால் மிகவும் பாதிப்புக்குள்ளாயினர். ஆனால், மறவர்களின் ஆக்ரோச உணர்ச்சி மட்டும் மடியவில்லை. அவர்கள் தங்களைப் பிறப்பால் போர் வீரர்களாகக் கருதியமையால், சமூகத்தின் சாதுவான பகுதியை தனது வலிமையால் ஆளத் தங்களுக்கு உரிமையுண்டு என்று எண்ணினர்.

மரபான நடைமுறைகளை ஒரே இரவில் மாற்றிவிட முடியாது. புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கிலேயர் சட்டத்தை மறவர்கள் மீறி அதற்கு மாறாக, தங்களது காவல் பணியைத் தொடர்ந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் மதச் சேவைக் குழு ஒன்றின் அறிக்கை, திருநெல்வேலி மாவட்டத்தில் நிலவிய சுவாரஸ்யமான நடைமுறை குறித்த தகவல்களைத் தருகிறது:

''நகரத்திலிருந்து விலகி உள்ளடங்கியுள்ள நாட்டுப்புற பகுதி மக்கள், முற்றிலுமாக மறவர்களின் பிடியிலேயே வாழ்கின்றனர். ஒவ்வொரு மண் குடிசையில் வாழும் வீட்டு உரிமையாளரும் மறவர்களுக்கு அரைப்பணம் (அதாவது ஒரு அணா எட்டு பைசாவை) ஆண்டுதோறும் தரவேண்டும். கால்நடை வைத்திருப்போர் ஒரு பணம் தர வேண்டும். அறுவடையின் போது எதிரி நாட்டு வயல்களில் தானியங்களை அறுத்துக் கொண்டு போவது, தென் தமிழகத்தின் வழக்கமான நடைமுறையாக இருந்து வந்தது. பிரச்சனையை ஒரு நெருக்கடியை நோக்கி நகர்த்தி முற்றவிட்டு எதிரியை சரியான இடத்தில் நிறுத்தி, சாதகமான ஒரு உடன்பாட்டுக்கு வர நிர்பந்திக்கும் ஒரு வழிமுறையாக - இத்தகைய கொள்கைகளை அவர்கள் பயன்படுத்தினர்.''

1886இன் மெட்ராஸ் நிர்வாக அறிக்கை இப்படிக் கூறுகிறது: ''மக்களிடம் மறவர்கள் மீது பயமும் உருவாகியிருந்தது. அந்தப் பெயரே அவர்களின் வன்முறைக் குற்றங்கள் வெற்றியடைய உதவின. மறவர்களை எதிர்ப்பது என்ற நினைப்பே வர விடாதபடி அந்தப் பெயர் பாதுகாத்தது. ஒவ்வொருவரும் மறவர்களைப் பற்றிய பயத்தோட வளர்க்கப்படுகிறார்கள்.''

''கள்ளர்கள், மறவர்கள், அகமுடையார்கள் ஆகியோரே தென் மாவட்ட குற்றங்களுக்குப் பொறுப்பாவார்கள். அக்குற்றங்கள், அவர்களின் எண்ணிக்கை பலத்தை மீறிய அளவிலானவை.'' - என்று 1901 மக்கள் தொகை அறிக்கையில் பிரான்சிஸ் பதிவு செய்துள்ளார். 'மதுரைச் சிறைகளில் உள்ள குற்றவாளிகளில் 42 சதவிகிதமும், பாளையங்கோட்டை சிறைச்சாலையில் உள்ள குற்றவாளிகளில் 30 சதவிகிதமும், இம்மூன்று சாதிகளில் ஏதேனும் ஒன்றைச் சார்ந்தவராக உள்ளனர்' என்று 1897இல்



படிப்பகம்

www.padippakam.com

சிறைத்துறை அய்.ஜி. அறிக்கை தந்துள்ளார்.

1871இல் முதலில் குற்றப்பரம்பரைச் சட்டம் என்பது, ஆங்கிலேயரின் ஆணைப்படி, விவசாயத்தில் ஈடுபட மறுத்த பழங்குடி மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது. நாளடைவில் இச்சட்டத்தை பெரும் சமூகங்களான கள்ளர்கள் மற்றும் மறவர்களுக்கு எதிராகப் பயன்படுத்த அரசு வகை செய்தது. 70,000 முதல் 80,000வரை கள்ளர்கள் வசித்து வந்த திருமங்கலம் மற்றும் மதுரை மாவட்டத்தின் பக்கத்து வட்டாரங்களில் 1920 மத்திவரை இச்சட்டத்தின் கீழ் 14,283 பேரும், 1924இன் இறுதிக்குள் 32,054 பேரும் பதிவு செய்யப்பட்டிருந்தனர். பல அரசியல் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இச்சட்டம் தேவை என 1945வரை ஆங்கிலேய ஆளும் வர்க்கம் நம்பியது.

மதுரையில் இருந்து வந்திருந்த ஒரு மனுவிற்கு பதில் எழுதுகையில் ஆளுநரின் ஆலோசகர்களில் ஒருவர் இவ்வாறு கூறியுள்ளார்: ''எக்காரணம் கொண்டும் குற்றப்பரம்பரைச் சட்டத்தை என்னால் தள்ளுபடி செய்ய இயலாது. அதை இன்னும் நன்றாக செயல்படுத்துவதற்காக மாற்றங்கள் என்றால் சரி, நீக்குவது என்றால் முடியாது.'' (ஆதாரம் : 'தமிழ்ச் சமூகத்தில் மறவர் சாதி', முனைவர் எஸ். கதிர்வேல் - 'புதுவிசை', மார்ச் - மே 2000)

●●

தென் தமிழகத்தில் அரங்கேறிய தேவர் ஆதிக்கம், தற்செயலாகவோ, முன் கூட்டித் திரளும் திட்டமிடலாகவோ விரிந்த பரிணாமங்களைக் கொண்டிருந்தது. சமூகத்தின் அடிப்படை மக்கள், அந்தச் சூழலுக்குத் தகைந்து போகிறவர்களாகவே இருத்தப்பட்டார்கள். சக மனிதர்களுக்கிடையேயான உறவையும் - துரத்தலையும் தீர்மானிப்பதில் தென் தமிழ் நாட்டில், பார்ப்பனர்களை மிஞ்சுமளவிற்குப் பார்ப்பனீயர்கள் இருந்தனர். மானுடத்தின் மீதான அவற்றின் நன்மை தீமைகளுக்கு எவரும் பெரிதாகப் பொறுப்பேற்காத அக்காலத்தில், மானுடத்திற்கான நன்னெறிக் கவலை கொண்டு தென்பாண்டிச் சிங்கமாய் சிலிர்த்து எழுந்தவரே முத்து வீரன் பாலசுந்தரராசு ஆவார்.

வேளாண்குடி மரபினரான இவரின் முன்னோடிகள், உழவுத் தொழிலும் போர்த் தொழிலும் தவிர எதுவும் தெரியாதவர்கள். தங்களின் திறன்களான உழைப்பையும் வீரத்தையும் துல்லியப்படுத்தும் ஓர்மைப் பாய்ச்சலோடு மனிதம் பேணுபவர்கள். நெல்லைச் சீமையில் சங்கரன் கோயில் பகுதியில் வாழ்ந்த இவர்களை, காலமும் தேவையும் மதுரை மாவட்டம் கண்டமனூர் பாளையத்தில் குடியமரச் செய்தது. இவர்கள் உள்ளங்களில் நம்பிக்கை விதைகளையும் உற்சாக நாற்றுகளையும் ஊன்றி வளர்க்கும் தீராத கனவுக்காரர்களாய் வந்து சேர்ந்ததால், ஒரு படித்தான வேளாண்மைத் தொழில் குவிமனத்தால் வீச்சும் வீரியமுமாகி நிலக்கிழார் நிலையை எட்டினர்.

யும் கிறித்துவமே சமூகப் பாட்டாளி மக்களுக்குத் தந்தது.

இம்மண்ணின் மைந்தர்களுக்கு கல்வி உரிமை மறுக்கப்பட்ட பார்ப்பனீயச் சாதிய சமூக அமைப்பில், எந்தவொரு மனிதனுக்குள்ளும் ஒரு கல்வியாளன் இருக்கிறான்; எந்த மனிதனும் கல்வியாளன் ஆக முடியும் என்பதைச் சூளுரைத்து, பாலசுந்தரராசு அவர்கள் கிறித்துவ மதநிறுவன பின்புலத்தில், மதுரை அமெரிக்கன் கல்லூரியில் சேர்ந்து பி.ஏ. வரை கல்வி பயின்றார். கல்வி கற்பதில் உச்சத்திற்குச் சென்று, உயர் பதவியடைந்து தம்மை மட்டும் உயர்த்திக் கொள்ள அவர் விரும்பவில்லை.



❝ அவருக்குத் தனது லட்சியப் பிடிப்பின் பிரதிநிதியாக தலைவர் அம்பேத்கரே இருந்தார். மக்கள்தான் அவருக்கு உறவு வட்டம்; புரட்சியாளர் அம்பேத்கர்தான் அவருக்கு உரிமைப் பிரளயம். ❞

சொந்த மண்ணும் சொந்த மக்களும் சூழ்ந்த தேக்கம்பட்டி மீனாட்சிபுரத்தில் பிறந்த பாலசுந்தரராசு அவர்களின் இயற்பெயர் முத்து வீரன். சமூக சனநாயகமற்ற இந்து மத அடைகாப்புக்குள் அடங்க மறுத்து, கிறித்துவம் தழுவிய பின்பே அவர் பாலசுந்தரராசு ஆனார். அக்காலத்தில் பொதுக்கல்வியும், பொது மருத்துவமும், மனித இருத்தலுக்கான அங்கீகாரமும், வாழ்வியலுக்கான அடிப்படை உதவிகளை

படிப்பும் - பதவியும் ஒரு வேளை தன்னை மக்களிடமிருந்து அந்நியப்படுத்திவிடுமோ என்று எச்சரிக்கை உணர்வைப் பெற்ற அவர், இனி மக்களிடம் படிப்பதே மேல் படிப்பு என்றும், மக்களுக்கு உழைப்பதே மேலான பதவி என்றும் முடிவு செய்தார். கல்லூரி மேல் படிப்பை விட்டு விட்டு மக்களிடம் வந்து சேர்ந்தார்.

200ஏக்கருக்கும் மேற்பட்ட நிலவுடைமைப் பின்னணியில், அரண்மனை



படிப்பகம்

www.padippakam.com

வாசம் புரியும் வளமான வாழ்க்கைச் சூழல் அமையப் பெற்ற பாலசுந்தரராசு அவர்கள், தன் பிரமாண்டத்திற்கு வெளியே தனக்குப் பிரியமான மக்களுக்கு நேர்ந்த சாதிக் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவு செய்தார். போர்க்குணம் இல்லாத மனித வாழ்வு, பரிதாபத்துக்குரிய முறையில் அழித்தொழிக்கப்பட்டு விடும். போராட்டமே நம் வாழ்வின் இருத்தலை உறுதி செய்கிறது. போராடும்போது தான் நாம் புதிய மனிதர்களாகப் பிறப்பெடுக்க முடியும் என்று பிரகடனம் செய்தார்.



ஓவியம் : முத்துக் கிருஷ்ணன்

சாதிய முரண்பாடுகளும் மோதல்களும் கூர்மையாகயிருந்த அக்காலத்தில், சாதி ஏற்றதாழ்வுகளினால் பாதிக்கப்பட்ட மக்களின் பண்பாட்டை போர்ப் பண்பாடாக ஆக்கினார். வீரமிக்க இளைஞர்களைக் கொண்டு 'மக்கள் படையை' ஏற்படுத்தினார். இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முதலில் சாதியத்தை எதிர்த்துப் போர்ப்படை அமைத்தவர், கேரளத்துப் புலையர்களின் மகாராஜாவான அய்யன்காளியே ஆவார். அய்யன்காளியைத் தொடர்ந்து படை அமைத்தவர் நம் பாலசுந்தரராசே ஆவார். மக்களுடன் இணைந்து, சாதிவெறியர்களை முறியடிப்பதே இப்படையின் ஒரே நோக்கம். 'வலியச்சண்டைக்குப் போகக் கூடாது; வந்த சண்டையை விடக்கூடாது' என்பதே இப்படையின் செயல் தந்திரமாகும்.

மாவீரர் பாலசுந்தரராசு அவர்கள், தம்மக்களை எல்லையற்ற படைப்பாற்றல் கொண்டவர்களாகத் தீர்மானித்தார். அவர்கள் தம்மை அமைப்பு ரீதியாக அணிதிரட்டி அவர்கள்தம் ஆற்றலை சமூகத்திற்கு முற்றாக வெளிப்படுத்த முனைப்பு கொண்டார். 'தேவேந்திரகுல வேளாளர் சங்க'த்தின் தலைவரானார். இச்சங்கம், ஏற்கனவே தேவேந்திரகுல வேளாளர்கள் மத்தியில் இயங்கி வந்திருந்தாலும், மாவீரர் பாலசுந்தரராசு தலைமை ஏற்றவுடன்தான் - அதன் பணிகளையும் பரப்பையும் விரிவுபடுத்த முடிந்தது. சாதி மிருகங்களிடமிருந்து வீசப்பட்ட அறைகூவல்களை சந்தித்து, இச்சங்கம் பல வெற்றிச் சாதனைகளைப் படைத்தது. இச்சங்கத்திற்கென, தேனி பங்களாமேட்டில் அக்காலத்திலேயே பொதுச் சொத்தாக 5 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மாவீரர் பாலசுந்தரராசு அவர்களுக்கு, மக்கள், தனக்குள் மண்டிய துயரத்தின் பிரதிநிதிகளாக இருந்தனர். புரட்சியாளர் அம்பேத்கரோ அவருக்கு தனது லட்சியப் பிடிப்பின் பிரதிநிதியாக இருந்தார். மக்கள்தான் அவருக்கு உறவு வட்டம்; தலைவர் அம்பேத்கர்தான் அவருக்கு உரிமைப் பிரளயம். மாவீரர் பாலசுந்தரராசு மக்களுக்குத் தலைமையேற்ற சில ஆண்டுகளில், இந்தியாவின் எதிர்கால அரசியல் மாற்றம் குறித்து அனைத்துத் தரப்பினரும் பங்கேற்கும் வட்டமேசை மாநாடு (1930-32) லண்டனில் கூட்டப்பட்டது.

இந்நிலையில், தேவேந்திர குல வேளாளர் சங்கமும் அதன் தலைவர் மாவீரர் பாலசுந்தரராசு அவர்களும் ஒடுக்கப்பட்ட மக்களின் உண்மையான தலைவர் - உறுதியாகப் போராடி வரும் உயர்ந்த தலைவர் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களே என்பதை உணர்ந்தனர். வட்டமேசை மாநாட்டில் ஒடுக்கப்பட்ட மக்களின் பேராளராகப் பங்கேற்றுள்ள பேராசான் அம்பேத்கரை அவர்களைத் தாங்கள் ஆதரிப்பதாக, பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மெக்டனால்டு அவர்களுக்குத் தொலைவரி மூலம் தெரிவித்தார். தமது ஆதரவையும் தம்மக்களின் ஆதரவையும் தெரிவிக்கும் தொலைவரியை லண்டனுக்கு அனுப்பி வைத்தார்.

கல்வியே எல்லாவித முன்னேற்றத்திற்கும் திறவுகோல் என்பதில் திடமாக இருந்த தலைவர் பாலசுந்தரராசு அவர்கள், 1930களில் தேனிப்பகுதியிலும் மதுரை மாவட்டத்தின் பிறபகுதிகளிலும், வாய்ப்பும் வசதியும் உள்ளவர்கள் பள்ளிகள் திறந்து பிள்ளைகளுக்குக் கல்வியறிவு ஊட்டுமாறு ஊக்கப்படுத்தினார். கோட்டூரில் 'தேவேந்திர குல வித்யாலயா' தொடங்கப்பட்டது. சீலையம்பட்டியில் எஸ். வில்லியம் பொன்னையா ஆசிரியர் நிறுவிய 'கம்பர் கலாசாலை உயர் தொடக்கப் பள்ளி' யினைத் தொடக்கி வைத்தார். தேவாரத்தில் 'தேவேந்திரர் குல வேளாளர் பள்ளி' ஏற்படுத்தப்பட்டது.

1936ஆம் ஆண்டு ஏப்ரல் 14அன்று மதுரை மாவட்ட 'தேவேந்திரர் குல வேளாளர் சங்க'த்தின் சார்பில், புரட்சியாளர் அம்பேத்கரின் 46ஆவது பிறந்த நாள் விழா, மாவீரர் பாலசுந்தரராசு தலைமையில் கோட்டூரில் நடந்தது. இந்நிகழ்ச்சி, மாவட்ட மாநாடாகவும் நடத்தப்பட்டது. இம்மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக எஸ்.ஆர். பொன்னையா ஆசிரியர் பொறுப்பேற்றார். இம்மாநாட்டில், வட்டமேசை மாநாட்டின் விளைவுகளையும், பூனா ஒப்பந்தத்தின் தவறுகளையும் கருத்தில் கொண்டு புரட்சியாளர் அம்பேத்கர் கரத்தைத் தொடர்ந்து வலுப்படுத்துவதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. புரட்சியாளர் அம்பேத்கரை தென்பாண்டிச் சீமைக்கு அழைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

“போர்க்குணம் இல்லாத மனித வாழ்வு, பரிதாபத்துக்குரிய முறையில் அழித்தொழிக்கப்பட்டு விடும். போராட்டமே நம் வாழ்வின் இருத்தலை உறுதி செய்கிறது. போராடும் போதுதான் நாம் புதிய மனிதர்களாகப் பிறப்பெடுக்க முடியும்.”



படிப்பகம்

www.padippakam.com

கோட்டூரையடுத்து பெரியகுளம் வட்டத் தேவேந்திர குல வேளாளர், ஒடுக்கப்பட்ட வகுப்பாளர் மாநாடு தேவாரத்தில் மாவீரர் பாலசுந்தரராசு அவர்களால் நடத்தப்பட்டது. இம்மா நாட்டிற்கு தந்தை பெரியார் தலைமை வகித்தார். சென்னை மாகாண நீதிக்கட்சி ஆட்சியின் வளர்ச்சித் துறை அமைச்சர் பி.டி. ராசன், மதுரை மாவட்டக் கழக உறுப்பினர் டபிள்யூ.பி.ஏ. சவுந்திர பாண்டியனார், பசுமலை இறையியல் கல்லூரி முதல்வர் டாக்டர் பன்னிங்கா ஆகியோர் கலந்து கொண்டனர்.

3.8.1936அன்று நடைபெற்ற இம்மா நாட்டில், ஒடுக்கப்பட்ட வகுப்பார் சார்பாக - குடியிருப்புகளை மாற்றி நல்லதோர் இடம் வழங்க வேண்டும் என்றும், கள்ளர்களுடன் நடந்த மோதலில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் திரும்பப் பெற வேண்டும் என்றும், கல்விக்கென சிறப்பான வசதிகள் அளிக்கப் பெற வேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டது.

மாவீரர் பாலசுந்தரராசு அவர்கள், காந்தியின் 'அரிஜன்' எனும் வார்த்தையை கெட்ட வார்த்தையாகப் பாவித்தார். 'அரிஜன சேவா சங்க'த்தை காந்தியின் பித்தலாட்டங்களில் ஒன்றாகக் கருதினார். காந்தியின் செப்படி வித்தைகளுக்கு மக்கள் பலியாகக் கூடாது என்று எச்சரித்தார். 1938இல் நீதிக்கட்சி ஆட்சியாளர் திறந்த 2200 பள்ளிகளை மூடி, குலக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்த குள்ளநரி ராஜாஜி, மதுரை சேவாலயம் விடுதியைத் திறக்க வந்தபோது மாவீரர் பாலசுந்தரராசு கடுமையாக எதிர்த்தார்.

1939இல், மதுரை மீனாட்சி கோயிலில் நடந்த 'அரிஜன ஆலயப் பிரவேச'த்தில் தேவேந்திரகுல வேளாளர்கள் எவரும் கலந்து கொள்ளக்கூடாதென ஆணையிட்டார். காங்கிரஸ் கட்சி அறிவித்த 'அரிஜன ஆலயப் பிரவேச நாடகம்' வெறும் பம்மாத்து என்று அறிவித்தார். 'அரிஜன ஆலயப் பிரவேச'த்திற்கு ஆதரவு தருமாறு தன்னைக் கூப்பிட வந்த வைத்திய நாத (அய்யரை) மதுரை மங்கம்மாள் சத்திரம் அறை 7இல் வைத்து முரண்பட்டு விரட்டியனுப்பினார்.

குறிப்பாக, ஒடுக்கப்பட்ட மக்களுக்கென மாவீரர் பாலசுந்தரராசு செயல்பட்டு வந்தாலும், பொதுவாகத் தமது பகுதியின் வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் மிகுந்த அக்கறை கொண்டவராகவும் இருந்தார். 1946இல் சென்னை மாகாண அரசின் வேளாண் அமைச்சர் ஏ.பி. செட்டி, தேனிக்கு வருகை தந்தபோது, பகுதிக்குரிய வளர்ச்சிக்கான பொது கோரிக்கைகளை முன்வைத்தார்.

மேற்கு மலைத் தொடரில் தோன்றும் சிற்றாறுகளை ஒருங்கிணைத்து வருசை நாட்டுப் பகுதிக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கவும், கண்டமனூருக்குத் தெற்கே வைகையாற்றின் குறுக்கே அணைகட்டி, நீர்தேக்கி ஆண்டிப்பட்டி பகுதியின் புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி வழங்கவும், பெரியாற்று அணையிலிருந்து தமிழகப் பகுதிக்கு வரும் நீரிலிருந்து மின்சாரம் எடுக்கும் வகையில், குமுளிக்குக் கீழே நீர்மின் நிலையம் அமைக்க வேண்டும் என்றும், தேனிப் பகுதியில் சுண்ணாம்புத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்றும், இப்பகுதியில் முற்றிலும் வேளாண்மை சார்ந்தே மக்கள் வாழ்க்கையோட்டம் இருப்பதால் - பிற பருவங்களில் தொழில் வாய்ப்புகளைப் பெறும் வகையில் தொழிற் சாலைகள் அமைக்க வேண்டும் என்றும் கோரிக்கைகளை அமைச்சரிடம் சமர்ப்பித்தார்.



பாலசுந்தரராசு என்ற சொல், சாதி ஆதிக்கத்தின் மீது கசப்புற்றவர் என்ற பொருளையே தாங்கி நின்றது. அது, போர்க்குணமிக்க மனிதாபிமானத்தை உள்ளடக்கியிருந்தது.

ஒடுக்கப்பட்ட மக்களின் ஒப்பற்றத் தலைவர் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களைச் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்குமாறு, தேவேந்திரர் குல வேளாளர் சங்கத்தின் இரண்டாவது மாநாட்டினை மதுரையில் கூட்டி, தென்பாண்டி நாட்டு மக்களுக்குப் புரட்சியாளர் அம்பேத்கரை அறிமுகப் படுத்திய பெருமை மாவீரர் பாலசுந்தரராசு அவர்களையே சாரும்.

1946ஆம் ஆண்டு டிசம்பர் 28 அன்று நடைபெற்ற இம்மாநாட்டிற்கு, மாவீரர் தேக்கம்பட்டி பாலசுந்தரராசு தலைமை வகித்தார். மதுரை-விக்டோரியா எட்வர்டு மன்றத்தில் நடந்த இம்மாநாட்டில் தலைமையுரையாற்றிய பாலசுந்தரராசு அவர்கள், தென்மாவட்டங்களில் தொடர்ந்து நிகழ்ந்து வரும் சாதிக்கலவரங்களைத் தேவேந்திர குல வேளாளர்களே சந்தித்து - சமாளித்து வருவதையும் எடுத்துரைத்தார்.

இம்மாநாட்டில் சிறப்புரை ஆற்றிய புரட்சியாளர் அம்பேத்கர், ''ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கிடையே நீடித்த ஒற்றுமை பராமரிக்கப்படும்போதுதான், ஆதிக்க சாதியினரின் அடக்கு முறையினை எதிர்த்துக் களத்தில் நிற்க முடியும்'' என்றும் ''பள்ளர் - பறையர் - சக்கிலியர் ஆகியோர் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.'' புரட்சியாளர் அம்பேத்கரின் தென்மாவட்ட வருகை, பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியதால் பாலசுந்தரராசு அவர்கள், புரட்சியாளர் அம்பேத்கரை தூத்துக்குடி ரயிலில் மிகுந்த பாதுகாப்பு ஏற்பாட்டுடன் அனுப்பி வைத்தார்.

மாவீரர் பாலசுந்தரராசு தம் வாழ்நாள் முழுவதும் சாதி இந்து ஜமீன்தார்களுக்கு எதிராக 'தலித் ஜமீன்' நடத்தியவர். கண்டமனூர், தெப்பம்பட்டி நாயக்கர் ஜமீன்தார்களுக்கு எதிராகப் பல போர்களை நடத்தி வெற்றி கண்டவர். வருசை நாடு - வேட்டைக் காட்டில் கள்ளர்களுக்கு எதிராகக் கலகங்கள் நடத்தியவர். வீரபாண்டியில் தம்மின மக்கள் மாரியம்மன் கோயிலில் தடுக்கப்பட்ட போது, அக்கோயிலைப் பூட்டி பின் சமரசத்திற்கு உடன்பட்டவர்.

பாலசுந்தரராசு என்ற சொல், சாதி ஆதிக்கத்தின் மீது கசப்புற்றவர் என்ற பொருளையே தாங்கி நின்றது. அது, போர்க்குணமிக்க மனிதாபிமானத்தை உள்ளடக்கியிருந்தது. ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளின் உருவமாகயிருந்தது. புதியதோர் உலகுக்கான முன் அறிவிப்பாக இருந்தது. தன்மக்களுக்கு மட்டுமே தலைவணங்கிய பாலசுந்தரராசு அவர்கள், மக்களின் உழைப்பிற்கும், மதிப்பிற்கும், எதிர்பார்ப்பிற்கும் எட்டாத எந்தப் பொருளையும் காண விரும்பாதவரே 1951இல் இம்மண்ணில் விதைக்கப்பட்டார். ●





படிப்பகம்


www.padippakam.com


KHS

# KALANJIAM HARDWARE STORES



















LOCKS, HINGES, HANDLES, ALDROPS & TOWER BOLTS

**SHOW ROOM**

Old No.27, New No.40, Devaraja Mudhali Street, Chennai - 600003

Tel : 25351584, 25351045. Fax : 25355551

Web Site : www.hardwaresonline.com

படிப்பகம்

www.padippakam.com

# தலித் முரசு கலை இலக்கிய விருது வழங்கும் விழா

விருது பெறுபவர்
**அழகிய பெரியவன்**

o

**'பாரதி'ய ஜனதா பார்ட்டி'**
நூல் வெளியீட்டு விழா

o

எழுத்தாளர்கள், சிந்தனை யாளர்கள் மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

" தலித் மக்கள் விடுதலையை வென்றெடுக்க 'தலித் முரசு' சமூக, அரசியல், பண்பாட்டுத் தளங்களில் தொடர்ந்து பங்களிப்புச் செய்து வருகிறது.

கலை இலக்கிய களத்தில் நின்று போராடி வரும்

தலித் படைப்பாளிகளுக்கு தோள் கொடுக்கவே இந்த 'கலை இலக்கிய விருது'

இது பாராட்டுப் பத்திரம் அல்ல.

அவர்களின் ஆயுதங்களைக் கூராக்குவதற்கே இந்த விருது. "

o நாள் : 15.2.2003 o நேரம் : மாலை 6.00 மணி
o இடம் : தேவநேயப் பாவாணர் நூலக அரங்கம் (எல்.எல்.ஏ. பில்டிங்) அண்ணா சாலை, சென்னை - 2

---

'தலித் முரசு' சமூக நீதிப் போட்டி
8 மற்றும் 9 இல் வெற்றி
பெற்றவர்களுக்கு முறையே
பணவிடை மூலம் பரிசுத் தொகை
அனுப்பப்பட்டுள்ளது.

••

சி. காளிமுத்து
மு. பாலசுப்பிரமணியன்
பி. ரஜினி
எம்.ஏ. சேட்டு
மு. முனிராசு
டி.யுவராஜ்
கா. ஜானகி
ராம. ராசசேகரன்
வி. பழனிவேல்
என். குமார்
தா. தமிழ்ச் செல்வன்
கே. முருகேசன்
கா. வெங்கடேசன்
ஆ. சுப்ராயன்
கா. ராஜேசுவரன்

••

மு. முனிராசு
பி. திருப்பால்
ஒய். கிருஷ்ணமூர்த்தி
ஆர். புஷ்பக்கலை
எஸ்.கே. கிருத்திகா
ஆர். மகிழினி
த. தமிழரசி,
கே. வேலாயுதம்
எம். ஏ. சேட்டு
எம். விஜயகுமார்
சி. காளிமுத்து
து. சீனிவாசன்
கா. ஜோதிமணி
த. தமிழ்ச் செல்வன்

---

**தலித் முரசு**
சமூக நீதித் திங்கள் இதழ்

## தலித் முரசு கட்டணப் படிவம்

நான், தலித் முரசு இதழின் ஆண்டு / வாழ்நாள் கட்டணம் செலுத்த விரும்புகிறேன் :

- ஆண்டுக் கட்டணம் : ரூ. 100
- வாழ்நாள் கட்டணம் : ரூ. 1,000

பெயர்.............................................................................

முகவரி ..........................................................................

.....................................................................................

.....................................................................................

- டி.டி. மற்றும் எம்.ஓ. **Dalit Media Network** என்ற பெயருக்கு அனுப்பவும்



படிப்பகம்

www.padippakam.com






# நிலம் நஞ்சாக்கப்பட்டதே காரணம்

■ *யாக்கன் எழுதிய 'விழியிழந்த விழிப்புணர்வு' - இன்றைய நடைமுறை தலித் அரசியலையும், தலைவர்களின் நோக்கங்களையும், அவர்கள் மலினப்பட்டுக் கிடப்பதையும் மாற்றுத் திட்டத்தின் சில கூறுகளுடன் எடுத்துரைத்திருப்பது மிக அருமை. தமிழக விவசாயிகளின் - எலிக்கறி, தற்கொலை போன்ற தமிழகத்தின் அவல நிலைக்கு - காவிரி நீர் வராததுதான் முதன்மைக் காரணம் என்று தோற்றமளித்தாலும், நிலம் நஞ்சாக்கப்பட்டதே அடிப்படைக் காரணம் என்பதை, விவசாயி குமாரசாமியுடனான நேர்காணல் உணர்த்தியது.*

**இசையரசு,** *மயிலாப்பூர்*

■ மறுக்கப்பட்ட கல்விக்காக ஓர் அமைதிப் புரட்சி - படித்துப் படித்து வியந்து போனேன். இதைப் போல, மாவட்ட வாரியாக ஆங்காங்கே உள்ள வசதியுள்ள தலித்துகள், மெத்தப் படித்த தலித்துகள், அரசுப்பணியில் உள்ள தலித்துகள் இணைந்து - கல்வி நிறுவனங்களை உருவாக்க முன்வர வேண்டும். தலித் அல்லாதவர்களையும் இப்பள்ளிகளில் சேர்ப்பது ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

**ஜி. வெங்கடேஷ்**
*ஆரப்பள்ளம்*

■ மறுக்கப்பட்ட கல்விக்காக அமைதியான - உண்மையான புரட்சியொன்றை செய்து வரும் 'முத்துக் கருப்பன் அறக்கட்டளை', உறங்கிக் கிடக்கும் சமூகத்திற்கு ஓர் விடிவெள்ளி. 'இது கதையல்ல... நிஜம்!' சரியான பார்வை. ஊடகம் பற்றி மக்கள் சிந்திக்க ஒரு நல்வாய்ப்பாக அமைந்தது. கம்யூனிஸ்டுகளின் தனியுடைமை செயல்பாடு, அவர்கள் இயக்கத்திற்கு அவர்களே தேடிக்கொண்ட அவமரியாதை. அரசு சாதியை ஒழிக்குமா? - கிருத்துதாசு காந்தி புதிய சிந்தனைகளைத் தொடர்ந்து விதைக்கட்டும். குமாரசாமியின் நேர்காணல் பல புதிய, அரிய செய்திகளைத் தந்தது.

**ப. தேவநாதன்**
*மழுவங்கரணை*

■ தலித் முரசை கடந்த ஆறு மாதங்களாகப் படித்து வருகிறேன். என்னைச் சுற்றியுள்ளவர்களும் படித்துப் பயனடைந்து வருகிறார்கள். 'தலித் முரசு' மூலம் பல்வேறு உரிமைகளையும், அதைப் பெறுவதற்கான வழிமுறைகளையும் துணிவுடன் செய்ய முடியும் என்ற உத்வேகத்தையும் பெறுகிறேன். 'தலித் முரசு' - எங்கள் கிராமத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

**எஸ்.பி. சீனிவாசன்**
*நடுப்பட்டரை*

■ 'வைகை' குமாரசாமியின் நேர்காணல், விவசாயத்தில் பார்ப்பன சதியை விளக்கியது. 'தினமணி'யின் நச்சுத் தன்மையைப் பலர் உணர்வதேயில்லை. 'தலித் முரசில்' ஏற்கனவே நெடுஞ்செழியன், 'மக்களின் சிந்தனையை மழுங்கடிக்கும் இதழ்கள்' தொடரில், 'தினமணி'யை அம்பலப்படுத்தியிருந்தார்.

**தி.மா. சரவணன்,** *திருச்சி*

■ தலித் மக்களின் ஒற்றுமையும், அம்மக்களிலிருந்து ஒருவர் செல்வாக்குப் பெற்ற தலைவராக வருவதும் - கம்யூனிஸ்டு கட்சியினருக்கும், முற்போக்கு மற்றும் புரட்சிகர அமைப்புகளுக்கும் நட்டம் என்பதே உண்மை. காரணம், இக்கட்சிகளிலும் அமைப்புகளிலும் உயிர் நாடியாக இருப்பது தலித் மக்களே என்பதை மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. அதனால்தான் கீழ்வெண்மணியில் திருமாவளவன் அவமானப்படுத்தப் பட்டுள்ளார். தலித்துகளைத் தாக்குவதற்கு, கம்யூனிஸ்டுகள் கையில் பெரிய தடிகளை வைத்திருந்தது கேவலமானதே.

**பூ.ஆ. கவின்மொழி**
*வேலூர்*

■ 'தலித் முரசு' முழுக்க நிறைய விழிப்புணர்வுக் கட்டுரைகள். தலித் மக்களின் முன்னோடி கிருத்துதாசு காந்தி அவர்களின் கட்டுரைகள், தேவையான செய்திகளை வழங்குகின்றன. ரவிக்குமாரின், பெரியார் பற்றிய விமர்சனத்தை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

**ரா. கருத்தப்பாண்டியன்**
*நெல்லை*

■ முத்துக் கருப்பன மேல்நிலைப் பள்ளி - அம்பேத்கர் வலியுறுத்திய 'கற்பி' என்பதற்கு செயல்முறை விளக்கம் அளித்துக் கொண்டிருக்கிறது. மாணவர்களின் கல்விப் பணிக்கு, இடஒதுக்கீட்டின் மூலம் பயனடைந்தவர்கள் உதவ முன்வர வேண்டும். ஆன்மீக பயங்கரவாதம் - ஆன்மீகத்தின் வன்முறையை சுட்டிக்காட்டியது. குமாரசாமியின் பேட்டி 'தினமணி' நாளேட்டை தோலுரித்துள்ளது.

**ரமேஷ்குமார்**
*வீரிசெட்டிபல்லி*

## அதிநவீனத்தால் யாருக்குப் பயன்?

இந்தி - இந்து - இந்தியப் பார்ப்பனீயத்தின் 54ஆவது குடியரசு நாளின் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், ஆர்.எஸ்.எஸ். ஆசிபெற்றவர். இவர், மனிதனைப் பற்றி சிந்திக்காமல், எந்திரங்களைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறார். எனவேதான், நாம் அறிவியலில் வளர்ச்சி அடைந்து விட்டால் கழுகு ஆக (அமெரிக்காவை போன்று வல்லரசாக) மாறிவிடலாம் என்று மாணவர்களிடையே கூறி வருகிறார்.

மனிதக் கழிவுகளை அகற்றுவதற்கும், பாதாள சாக்கடையில் அடைப்பை எடுப்பதற்கும், தலித் மக்கள் மூச்சுமுட்ட கழிவுநீரில் மூழ்கிக் கொண்டு இருக்கும் அவலம் ஒருபுறம் இருக்க, அவ்வாறு மூழ்கும் பொழுது விஷ வாயுவால் மூச்சடைத்து இறந்து போனவர்கள் எண்ணிக்கை சொல்லி மாளாது.

இந்த நிலையைத் தீர்க்க, இந்தியப் பார்ப்பனீயம் அதி நவீனத்துவத்தைப் பயன்படுத்தாது. இதைப் போலத்தான் குடியரசுத் தலைவரின் அறிவியல் பேச்சும் இருக்கிறது. இது ஆதிக்க சாதிகளுக்கும், இந்திய பார்ப்பன சக்திகளுக்கும் பயன் தரும் அணுகுண்டுவாகத்தான் இருக்கும். அறிவியலின் அதி நவீனக் கண்டுபிடிப்பு என்பது, உழைக்கும் மக்களுக்குப் பயன்பட வேண்டும், ஆதிக்க சக்திகளுக்கு மட்டுமல்ல.

- அம்பேத்கர் சிறுத்தைகள் இயக்கம்
திருவொற்றியூர்




படிப்பகம்

www.padippakam.com



# தன் மதிப்பு, சமத்துவம், சகோதரத்துவம் ஓங்கி வளர வேண்டும்



நமது 'குடி அரசு'ப் பத்திரிகை ஆரம்பித்து ஆறு மாதங்களாகின்றது. அது முக்கியமாய் நமது நாட்டுக்கு சுயராஜ்யமாகிய 'மகாத்மா'வின் நிர்மாணத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவும், தமிழர்களாகிய தீண்டாதார் முதலியோருடைய முன்னேற்றத்துக்கென்று உழைக்கவுமே ஏற்படுத்தப்பட்டது. இத்தொண்டில், 'குடி அரசு' சிறிதுங் கள்ளங் கபடமின்றி யாருடைய விருப்பு வெறுப்பையும் பொருட்படுத்தாது, தனது 'ஆத்மா'வையே படம் பிடித்தாற்போல் தைரியமாய் வெளிப்படுத்தி தொண்டு செய்து வந்திருக்கின்றது - வரவும் உத்தேசித்திருக்கின்றது.

'குடி அரசு' குறிப்பிட்ட கருத்தைக் கொண்ட பிரச்சாரப் பத்திரிகையே அல்லாமல் வெறும் வர்த்தமானப் பத்திரிகை அல்லவாதலால், வியாபார முறையையோ - பொருள் சம்பாதிப்பதையோ தனது சுய வாழ்வுக்கு ஓர் தொழிலாகக் கருதியோ, சுய நலத்திற்காக கீர்த்தி பெற வேண்டுமென்பதையோ ஆதாரமாய்க் கொள்ளாமலும், வாசகர்களுக்கு போலி ஊக்கமும், பொய்யான உற்சாகமும் உண்டாகும்படியாக வீணாய் கண்ட கண்ட விஷயங்களையெல்லாம் - கூலிக்கு எழுதச் செய்வித்தும், குறிப்பிட்ட அபிப்பிராயமில்லாமல் சமயத்திற்கேற்றார்போல் - ஜனங்களின் மனதைக் கலங்கச் செய்து வருவதுமான பொறுப்பில்லாத ஓர் வேடிக்கைப் பத்திரிகையுமன்று.

உண்மையில், 'குடி அரசு'க்கு எந்தப் பிராமணரிடத்திலும், குரோதமோ வெறுப்போ கிடையாதென்பதை உறுதியாகச் சொல்லுவோம். ஆனால், பிராமணன் உயர்ந்தவன் என எண்ணிக் கொண்டிருப்பதிலும், மற்றவர்கள் தீண்டத்தகாதவர்கள், பார்க்கக் கூடாதவர்கள், 'இழிவான' மிருக உரிமைக்கும் பாத்திரமில்லாதவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் எண்ணத்தினிடத்திலும், தங்கள் வகுப்பார்தான் முன்னணியிலிருக்க வேண்டும்; மேன்மையுடன் பிழைக்க வேண்டும்; மற்றவர்கள் என்றென்றைக்கும் தங்களுக்கு அடிமையாகவே இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டும், அதற்காக மற்றவர்களை உபயோகித்துக் கொண்டும் செய்யும் கொடுமையான சூழ்ச்சிகளிடத்திலுந்தான், 'குடி அரசு'க்கு வெறுப்பு இருப்பதுடன், அதை அடியோடே களைந்தெறிய வேண்டுமென்று ஆவல் கொண்டு உழைத்து வருகிறது.

பிராமணர்களின் தியாகமென்று சொல்லப்படுவதும், பிராமணரல்லாதாரின் கெடுதிக்காகவே செய்யப்படுவதாய்க் காணப்படுகிறது. இந்நிலையில், தேசத்தின் பெரிய சமூகத்தாரான, பிராமணரல்லாதாரைப் பலி கொடுத்து - பிராமணர்களுக்கு நல்ல பிள்ளைகளாய் நடக்க வேண்டும் என்கிற எண்ணம் கொஞ்சமும் தோன்ற மாட்டேனென்கிறது. அல்லாமல், இவற்றைப் பற்றிய கவலை எடுத்துக் கொள்ளாமல் எப்படியோ போகட்டும் என விட்டுவிடுவதற்கும் மனம் ஒருப்படுவதில்லை.

இதை ஆரம்பத்திலேயே 'குடி அரசு' முதலாவது இதழ் தலையங்கத்தில் 'மக்களுக்குள் தன் மதிப்பும், சமத்துவமும், சகோதரத்துவமும் ஓங்கி வளரல் வேண்டும்; மக்கள் அனைவரும் அன்பின் மயமாதல் வேண்டும்; உயர்வு, தாழ்வு என்ற உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்துவரும் சாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாக இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து - அனைத்துயிரும் ஒன்றென்றெண்ணும் உண்மையறிவு மக்களிடம் வளர்தல் வேண்டும்; சமயச் சண்டைகள் ஒழிய வேண்டும். ஆனது பற்றியே, 'நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்மேற் சென்றிடித்தற் பொருட்டு' எனும் தெய்வப் புலமைத் திருவள்ளுவரின் வாக்கைக் கடைப்பிடித்து, 'நண்பரேயாயினுமாகுக, அவர்தம் சொல்லும், செயலும் தேச விடுதலைக்குக் கேடு சூழ்வதாயின் அஞ்சாது கண்டித்தொதுக்கப்படும்' என நமது அபிப்பிராயத்தைத் தீர்க்கமாகக் குறிப்பிட்டிருக்கிறோம்.

பெரும்பாலும், பிராமணர், செல்வந்தர், முதலாளிகள், வைதீகர் முதலியோருடைய குற்றங்களை எடுத்துச் சொல்லி வருவதால், அவர்கள் நமது பத்திரிகையை ஆதரிப்பார்களென்று எதிர்பார்ப்பது, பயித்தியக்காரத்தனமாகவே முடியும். ஆதலால், நமது பத்திரிகையை ஆதரிக்க வேண்டியது பிராமணரல்லாதார், ஏழைகள், தொழிலாளிகள், தீண்டாதாரென்னப்படுவோர் முதலிய ஒடுக்கப்பட்ட சமூகத்தாருக்கு ஏற்பட்ட முக்கிய கடனாகும். அந்தப்படி இக்கூட்டத்தார், நமது 'குடி அரசு'வை ஆதரிக்கவில்லையானால், 'குடி அரசு' தானாகவே மறைந்து போக வேண்டியதுதான் அதனுடைய கடமையே அல்லாமல், முன் சொன்னது போல் சுய நலம் முதலியவைகளுக்கென்று இப்பத்திரிகையை நடத்துவதில் பிரயோஜனமில்லை.

ஏனெனில், 'குடி அரசு' வானது தன்னுழைப்பினாலும், தனது தியாகத்தினாலும் மக்கள், சிறப்பாய் பிராமணரல்லாதார், தீண்டாதார் முதலியோர் விடுதலை பெற்று சுய மதிப்புடன் வாழ்ந்து தேசம் உண்மையான சுயராஜ்யமடைய வேண்டுமானால், தாழ்த்தப்பட்டவர்களெல்லாம் சம நிலைக்கு வர வேண்டுமானால் - வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இன்றியமையாததெனக் கருதி, அதை எல்லா வகுப்பாரும் அடைய வேண்டுமென எதிர்பார்க்கிறதே ஒழிய, பொது மக்கள் வாழ்வால் 'குடி அரசு' வாழ வேண்டுமென்று அது கருதவேயில்லை. ஆதலால், 'குடி அரசு'வின் வாழ்வைக் கோருகிற ஒவ்வொருவரும் தங்களாலியன்ற அளவு போதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்தும், மற்றும் தங்களால் கூடிய உதவி செய்தும் இதனை ஆதரிக்க வேண்டுகிறோம்.

**"நமது 'குடி அரசு' பாமர ஜனங்களின் ஆதரவைப் பூரணமாகப் பெறுவது, சுலபத்தில் எதிர்பார்க்கக் கூடிய காரியமல்ல. உதாரணமாக, 'குடி அரசு' ஏற்பட்டு ஆறுமாத காலமாகியும் இதுவரை ஆயிரத்துச் சில்லரை சந்தாதாரர்களே சேர்ந்திருக்கிறார்கள். இது, நஷ்டத்தில்தான் நடைபெற்று வருகின்றதெனச் சொல்ல வருந்துகிறோம். அதைப் படிக்க வேண்டிய அளவு ஜனங்கள் படிக்கவில்லை என்பதே நமது அபிப்பிராயம்."**

*'குடி அரசு' இதழின் தலையங்கம் - 1.11.1925*

www.padippakam.com

YEZHUTCHI DALIT MURASU, Tamil Monthly, Regd. No. : TN / PMG (CCR) / ...
Registered with the Registrar of Newspapers for India Under No. 71325 / 97 Licensed to Post without prepayment Licence No. 361

*Best Compliments from*



## i7 Software Asia Pvt Ltd

#20,Moores Road, Park Circle, 2nd Floor
Chennai -600 006
(www.i7asia.co.in)

i7 Software Asia Pvt Ltd is a leading Software development company in Chennai having its headquaters in Reykjavik, Iceland. Our parent company Hreimur ehf, Iceland, specializes in assisting software solution providers and companies with development of their software projects and products.

i7 Software Asia Pvt Ltd is involved in the complete software development life cycle consisting of Analysis, Design, Development, Testing Implementation.

Our customer base consists of leading corporates in sectors such as:

- Telecommunications
- Banking and Finance
- Customer Service and Maintenance
- Medical and Scientific Research



We have a greal pool of experienced personnel with rich knowledge, exposure and experience and in development platforms such as Java, J2EE & J2SE, Oracle and Microsoft products. Our core skill sets in Jave include Swing, Servlet, JBDC,JSP, CORBA, XaML, XSLT on platforms such as Sun Solaris, HP-UNIX, AIX, Linux, and Windows 2000 and NT.

Also we possess vast technical expertise in providing Consultancy to ISPs, Banks and Financial institutions. We have extensive experience in working with IBM and Oracle products. Our Area of expertise includes Web enabling complicated systems and designing new solutions. We emphasize Quality at all levels in the organization and meet the quality requirements of our esteemed clients.

Owned and Published by **P. Chandragesan** from No. 6, 97th Street, 15th Sector, K.K. Nagar, Chennai - 600 078 and printed by G.P. Ramachandran at Thamizhmarai Achagam, 32, 3rd Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Editor : P. Chandragesan

படிப்பகம்